# கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை

## கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள்

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2021 – 2022

### மானியக் கோரிக்கை எண். 18


# ஆர். காந்தி

கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்



©
தமிழ்நாடு அரசு
2021

# கொள்கை விளக்கக் குறிப்பு – 2021–2022

## பொருளடக்கம்


| வ.எ ண் | துறைகள் | பக்கம் எண் |
|---|---|---|
| 1 | பட்டுவளர்ச்சித் துறை | 1–63 |
| 2 | தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் "பூம்புகார்" | 64–97 |
| 3 | தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் | 98–129 |
| 4 | தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியம் | 130–135 |

# பட்டுவளர்ச்சித் துறை

## அட்டவணை


| வ. எண் | பொருளடக்கம் | பக்கம் எண் |
|---|---|---|
| 1 | பட்டுவளர்ச்சித் துறை | 1 |
| 2 | இந்தியாவில் பட்டுத் தொழில் | 9 |
| 3 | தமிழ்நாட்டில் பட்டுத் தொழில் | 10 |
| 4 | நிலையான வளர்ச்சி இலக்குகள் | 12 |
| 5 | பட்டுவளர்ச்சித் துறை பணியமைப்பு | 15 |
| 6 | பட்டுவளர்ச்சித் துறையின் செயல்பாடுகள் | 19 |
| 7 | தமிழ்நாட்டில் மல்பெரி பரப்பு | 20 |
| 8 | பட்டுவளர்ச்சித் துறையின் உட்கட்டமைப்பு வசதிகள் | 23 |
| 9 | கச்சாப்பட்டு உற்பத்தி | 48 |
| 10 | பயிர்க் காப்பீடு | 48 |
| 11 | 2020–2021–ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டங்கள் | 49 |
| 12 | பட்டுச் சுற்றுலா | 58 |
| 13 | பட்டுவளர்ச்சித் துறையின் சாதனைகள் | 59 |
| 14 | தமிழ்நாட்டில் பட்டுத் தொழில் அபிவிருத்திக்காக மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் | 61 |
| 15 | 2021–2022–ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு | 63 |

# தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம்
## "பூம்புகார்"
## அட்டவணை


| வ. எண் | பொருளடக்கம் | பக்கம் எண் |
|---|---|---|
| | முன்னுரை | 64 |
| 1 | முக்கிய நோக்கங்கள் | 64 |
| 2 | நிலையான வளர்ச்சி இலட்சியங்கள் (Sustainable Development Goals) | 66 |
| 3 | விற்பனை நிலையங்கள் | 69 |
| 4 | கண்காட்சிகள் | 70 |
| 5 | ஏற்றுமதி விற்பனை | 71 |
| 6 | விற்பனை அளவு | 71 |
| 7 | விலைக்கொள்கை | 72 |
| 8 | பூம்புகார் உற்பத்தி நிலையங்கள் | 72 |
| 9 | புதிய நிர்வாகம், சந்தை மற்றும் உற்பத்தி முயற்சிகள் | 73 |
| 10 | விருப்ப கொள்முதல் முகமை | 81 |
| 11 | புதிய வருவாய் முறைகள் | 81 |
| 12 | கைவினைஞர்களுக்கான நலன் | 83 |
| 13 | நகர்ப்புற கண்காட்சித்திடல் | 88 |
| 14 | விற்பனை நிலையங்களின் விரிவாக்கப்பணிகள் | 89 |
| 15 | ஒருங்கிணைந்த கைவினைப் பொருட்கள் மேம்பாடு மற்றும் வளர்ச்சி | 90 |

| வ. எண் | பொருளடக்கம் | பக்கம் எண் |
| --- | --- | --- |
| 16 | நலிந்த கைத்திறத்தொழில்களுக்கு பொது பயன்பாட்டு மையம் அமைத்தல் | 92 |
| 17 | இலவச உபகரணங்கள் வழங்குதல் | 93 |
| 18 | கைவினை சுற்றுலா கிராமம், மாமல்லபுரம் (Craft Tourism Village) | 93 |
| 19 | உலக கற்சிற்ப நகரம் | 95 |
| 20 | கைவினைப் பொருட்களுக்கு புவிசார் குறியீடு | 96 |
| 21 | தொலைநோக்கு பார்வை | 97 |

## தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்

## அட்டவணை


| வ. எண் | பொருளடக்கம் | பக்கம் எண் |
|---|---|---|
| | முன்னுரை | 98 |
| 1 | நோக்கங்கள் | 99 |
| 2 | நிருவாகம் | 100 |
| 3 | நிலையான வளர்ச்சி இலக்குகள் | 100 |
| 4 | கதர் | 101 |
| 5 | வணிக அபிவிருத்தி நிதியுதவி திட்டம் (MDA) | 109 |
| 6 | கிராமத் தொழில்கள் | 113 |
| 7 | விற்பனை நிலையங்கள் | 122 |
| 8 | தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் | 123 |
| 9 | பிரதம மந்திரியின் வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம் | 124 |
| 10 | கதர் மற்றும் கிராமத் தொழில் பொருட்களின் உற்பத்தி மற்றும் விற்பனை | 127 |
| 11 | அரசிடமிருந்து பெறப்படும் நிதியுதவி | 128 |

## தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியம்

### அட்டவணை


| வ. எண் | பொருளடக்கம் | பக்கம் எண் |
|---|---|---|
| 1 | நோக்கங்கள் | 130 |
| 2 | பனை வெல்ல கூட்டுறவு சங்கங்கள் மற்றும் கூட்டுறவு சம்மேளனங்கள் | 130 |
| 3 | பனை பொருட்கள் | 131 |
| 4 | பதநீர் இறக்குவதற்கான உரிமம் | 132 |
| 5 | நிருவாகம் | 132 |
| 6 | உட்கட்டமைப்பினை உருவாக்குவதற்கான உதவிகள் | 133 |
| 7 | பனை பொருட்கள் மற்றும் சுக்கு காபி விற்பனை | 133 |
| 8 | பனை பொருட்களின் உற்பத்தி மற்றும் விற்பனை | 135 |

# பட்டுவளர்ச்சித் துறை

தமிழக அரசின் கீழ் செயல்பட்டு வரும் பட்டுவளர்ச்சித் துறையானது, பட்டு விவசாயிகள், பட்டுநூற்புத் தொழிலில் ஈடுபடும் தொழில்முனைவோர்கள் மற்றும் பிற பட்டு வளர்ப்பு சார்ந்த செயல்பாடுகளுக்கு தனது சேவைகளை வழங்கி வருகிறது.

தொழில் மற்றும் வணிகத் துறையின் கீழ் செயல்பட்டு வந்த 'பட்டுவளர்ச்சிப் பிரிவு', 1979–ஆம் ஆண்டு 'பட்டுவளர்ச்சித் துறை' என்ற தனித்துறையாக உருவாக்கப்பட்டு சேலத்தை தலைமையிடமாக கொண்டு மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களது வழிகாட்டுதலின்படி சென்னை தலைமைச் செயலக கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகிறது.

பட்டு உற்பத்தியில் தன்னிறைவு அடைதல்; வெண்பட்டு உற்பத்தியில் தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக உருவாக்குதல்; மல்பெரி சாகுபடி பரப்பினை விரிவுபடுத்துதல்; அதிகமான விவசாயிகள் மற்றும் தொழில்முனைவோர்களை பட்டுத்தொழிலில் ஈடுபடச் செய்தல்; வேலையில்லாத இளைஞர்களை பட்டுப்புழு வளர்ப்பு / பட்டு நூற்பு தொழிலில் ஈடுபட ஊக்குவித்து சிறந்த சமூகப் பொருளாதார நிலையை அடையச் செய்தல் ஆகியன பட்டுவளர்ச்சித் துறையின் குறிக்கோள்களாகும்.

பட்டுவளர்ச்சித் துறை இயக்ககம் தமிழ்நாட்டில் பட்டுத்தொழில் மேம்பாட்டிற்கான திட்டங்களை வகுத்து செயல்படுத்தி வருகிறது.

**பட்டுவளர்ப்பு**

பட்டுவளர்ப்பு என்பது பட்டுப்புழுவின் உணவுத் தாவரங்களை (மல்பெரி, ஆமணக்கு, மரவள்ளி மற்றும் இதர) சாகுபடி செய்து பட்டுப்புழுக்களை வளர்த்தல், பட்டு நூல் உற்பத்தி செய்தல் மற்றும் அதன் இதர செயல்பாடுகளை உள்ளடக்கியதாகும்.

பட்டுவளர்ப்பு விஞ்ஞானப் பூர்வமாக பட்டு நூல் உற்பத்தி செய்யும் அனைத்து செயல்பாடுகளையும் உள்ளடக்கிய கலை மற்றும் அறிவியல் ஆகும். இது ஊரகப் பகுதிகளிலுள்ள மக்கள் குறிப்பாக பெண்களுக்கு வேலை வாய்ப்பினையும், சீரான இடைவெளிகளில் வருமானத்தையும் பெற்றுத்தரக்கூடிய விவசாயம் சார்ந்த ஒரு ஊரக குடிசைத் தொழிலாகும்.

பட்டுப்புழு வளர்ப்பில் ஈடுபடும் விவசாயிகள் 25–27 நாட்களுக்குள் பட்டுக்கூடுகளை உற்பத்தி செய்து அதனை விற்பனை செய்வதன் மூலம் ஆண்டுதோறும் அவர்களால் மாதாந்திர வருமானம் பெற முடிகிறது.

ஒரு ஏக்கர் மல்பெரி பயிரிடுவதன் மூலம் பட்டுத் தொழிலில் 5 நபர்களுக்கு ஆண்டு முழுவதும் நேரடி

வேலை வாய்ப்பினை ஏற்படுத்தித் தருவதாக கணக்கிடப்பட்டுள்ளது. ஒரு கிலோ கிராம் கச்சாப்பட்டு உற்பத்தி செய்ய 11 மனித நாட்கள் தேவை என்பதால் இத்தொழில் அதிகமான வேலை வாய்ப்பினை வழங்கும் தொழிலாக திகழ்ந்து வருகிறது. வேலை வாய்ப்பு ஏற்படுத்தும் திறன் என்பது, மல்பெரி நடவு செய்யும் நிலையிலிருந்து பட்டு ஜவுளிகள் உற்பத்தி செய்யப்படும் நிலை வரையிலான காலம் ஆகும்.

மாநில அளவிலும், தேசிய அளவிலும் வளர்ந்து வரும் உள்ளூர் நுகர்வுக்குத் தேவையான உள்நாட்டு பட்டினை உற்பத்தி செய்வதன் மூலம், அந்நிய செலாவணியில் பெரும் சேமிப்பையும், பட்டுநூல் ஏற்றுமதி மூலம் பல ஆயிரம் கோடி வருவாயையும் ஈட்டித்தரும் தொழிலாக பட்டுத்தொழில் உள்ளது.

## பட்டு

பட்டின் பெருமையை எடுத்துரைக்க வேண்டிய அவசியம் இல்லை. 'ஆடைகளின் அரசி' என்று பட்டு அழைக்கப்படுகிறது. மல்பெரி, ஈரி, டசார் மற்றும் மூகா என நான்கு வகையான பட்டுகள் வர்த்தக ரீதியிலாக பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

பட்டுப்புழுக்களின் உணவுத் தாவரங்களைக் கொண்டு, அவை மல்பெரி பட்டு மற்றும் மல்பெரி சாரா (அ) வன்யா பட்டு என வகைப்படுத்தப்பட்டுள்ளன.

மல்பெரி பட்டுப்புழுக்கள் மல்பெரி இலைகளையும், ஈரி பட்டுப்புழுக்கள் ஆமணக்கு மற்றும் மரவள்ளி இலைகளையும் உணவாக உட்கொள்ளும். வன வகையை சார்ந்த டசார் மற்றும் மூகா பட்டுப்புழுக்கள், வனப்பகுதிகளில் உள்ள குறிப்பிட்ட மரங்களின் இலைகளை உணவாக உட்கொள்ளும்.

மல்பெரி மற்றும் ஈரி பட்டுப்புழுக்கள் பட்டுப்புழு வளர்ப்பு மனைகளில் வளர்க்க ஏற்றவை. டசார் மற்றும் மூகா பட்டுப்புழுக்கள் இந்தியாவின் வடகிழக்கு மலைக்காடுகளில் வளர்ந்து பட்டுக்கூடுகளைப் பின்னுகின்றன. இந்த பட்டுக்கூடுகள் அங்குள்ள பழங்குடியினரால் வனத்திலிருந்து எடுத்துவரப்பட்டு பயன்படுத்தப்படுவதால் இவை 'வன்யா' பட்டுகள் என அழைக்கப்படுகிறது.

இவற்றுள் மூகா பட்டு மதிப்புமிக்கதாகும். இது இந்தியாவின் அசாம் மற்றும் அதன் அண்டை மாநிலங்களில் மட்டுமே உற்பத்தி செய்யப்படுகிறது.

## பட்டுப்புழுக்கள் மற்றும் அவற்றின் இருசுழற்சியின இயல்பு

பட்டுப்புழுக்களின் வாழ்க்கைச் சுழற்சியானது முட்டை 10–11 நாட்கள், பட்டுப்புழு (5 பருவங்கள்) 25–27 நாட்கள், கூட்டுப்புழு 10–11 நாட்கள் மற்றும் பட்டுப்பூச்சி 2–3 நாட்கள் என நான்கு நிலைகளை கொண்டது. ஐந்தாம் பருவத்தில் உள்ள முதிர்ந்த பட்டுப்புழுக்கள்

பட்டுக்கூடுகளை பின்னுகின்றன. சாதாரணமாக, ஒரு பட்டுப்பூச்சி தனது வாழ்க்கைச் சுழற்சியை 50 நாட்களில் முடிக்கிறது.

ஓர் ஆண்டிற்கு ஒரே ஒரு வாழ்க்கைச் சுழற்சியை மட்டும் கொண்ட பட்டுப்பூச்சிகள் ஒரு சுழற்சி இனம் எனப்படும். ஓர் ஆண்டிற்கு இரண்டு வாழ்க்கைச் சுழற்சிகளைக் கொண்ட பட்டுப்பூச்சிகள் இரு சுழற்சி இனம் எனவும், ஓர் ஆண்டிற்கு இரண்டுக்கு மேற்பட்ட வாழ்க்கைச் சுழற்சிகளைக் கொண்ட பட்டுப்பூச்சிகள் பல சுழற்சி இனம் எனவும் வகைப்படுத்தப்பட்டுள்ளன. பல சுழற்சி இனங்களில், முட்டையிடப்பட்ட 10–11 நாட்களில் பட்டு முட்டைகள் பொரிப்படைகின்றன. ஒரு சுழற்சி மற்றும் இரு சுழற்சி இனங்களில் பட்டு முட்டைகள் முட்டையிடப்பட்ட ஓரிரு நாட்களில் 'டையபாஸ்' எனும் நீண்ட உறக்கத்திற்கு செல்வதால் பட்டு முட்டைகள் முட்டையிடப்பட்டு 6–10 மாதங்களுக்குப் பிறகே பொரிப்படைகின்றன.

பொதுவாக, பட்டுக்கூடுகள் இரு சுழற்சி இனங்களில் வெள்ளை நிறத்திலும் பல சுழற்சி இனங்களில் மஞ்சள் நிறத்திலும் இருக்கும். ஆகவே, அப்பட்டுக்கூடுகளிலிருந்து உற்பத்தி செய்யப்படும் பட்டுநூல் அதற்கேற்ப வெள்ளை மற்றும் மஞ்சள் நிறங்களில் இருக்கின்றன.

இனங்களின் பண்புகளுக்கேற்ப இருசுழற்சி இன (வெண்பட்டு) பட்டுக்கூடு ஒன்றின் பட்டு இழை நீளம் 1,000 முதல் 1,200 மீட்டர் ஆகவும், பலசுழற்சி இன (மஞ்சள்) பட்டுக்கூடு ஒன்றின் பட்டு இழை நீளம் 700–800 மீட்டர் ஆகவும் உள்ளன. மஞ்சள் பட்டு நூலை விட வெண்பட்டு நூல் அதிக உறுதியுடனும், நீட்சித் தன்மையுடனும் இருப்பதால் விசைத்தறிகளில் பயன்படுத்தப்படுகிறது.

இரு சுழற்சி இன (வெண்பட்டு) பட்டுக்கூடுகளின் உற்பத்தித்திறன் அதிகம். இரு சுழற்சி இன பட்டுக்கூடுகளின் அதிக தரம் மற்றும் அளவு, சந்தைத் தேவை காரணமாகவும் பட்டுக்கூடு அங்காடிகளில் அதிக விலை கிடைப்பதாலும் விவசாயிகள் ஆர்வத்துடன் முன்வந்து இரு சுழற்சி இன (வெண்பட்டு) பட்டுப்புழுக்களை வளர்க்கின்றனர்.

நவீன பட்டுநூற்பு இயந்திரங்களில் இரு சுழற்சி இன பட்டுக்கூடுகளைப் பயன்படுத்தி இறக்குமதி செய்யப்படும் பட்டுக்கு நிகரான வெண்பட்டு உற்பத்தி செய்யப்படுவதாலும், வெண்பட்டு நூலுக்கான தேவை தொடர்ந்து அதிகரித்து வருவதாலும், பட்டுக்கூடு அங்காடிகளில் வெண்பட்டுக் கூடுகள் அதிக விலைக்கு பட்டு நூற்பாளர்களால் கொள்முதல் செய்யப்படுகிறது.

இந்தியாவில் பட்டுப்புழு வளர்ப்பிற்கு ஏற்ற பருவநிலை இருப்பதால் மல்பெரி பட்டுப்புழுக்களை ஆண்டுதோறும் வளர்க்க முடிகிறது. வெண்பட்டு பட்டுக்கூடு / பட்டுநூலுக்கான தேவை ஆண்டு முழுவதும் இருப்பதால், விவசாயிகளுக்கு ஆண்டுதோறும் வெண்பட்டு முட்டைகள் விநியோகம் செய்ய வேண்டியது அவசியமாகிறது.

நவீன அறிவியல் கண்டுபிடிப்புகளின் மூலம், உற்பத்தி செய்யப்படும் வெண்பட்டு முட்டைகள் விஞ்ஞான ரீதியாக குளிர்பதனம் செய்யப்பட்டு, தேவைப்படும் பொழுது விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படுகிறது.

**பட்டுநூல்**

பட்டுப்புழுக்களின் உமிழ்நீர்ச் சுரப்பிகளிலிருந்து வெளிப்படும் ஃபைப்ராயின் என்ற புரதமும், செரிசின் என்ற பசையும் கலந்து தொடர்ச்சியான இழையாக பட்டு நூல் வெளிவருகிறது. இந்த செரிசின் பசையானது பட்டு இழைகளை நன்றாக பிணைக்கச் செய்கிறது. பட்டுக்கூடுகளை சுடுநீரில் மூழ்க வைக்கும் பொழுது, செரிசின் பசை இலகுவாகி, பட்டுக்கூடுகள் நூற்புக்கு தயாராகிறது. பட்டுக்கூடுகளை சுடுநீரில் மூழ்க வைப்பதால், பட்டுக்கூட்டினுள் உள்ள கூட்டுப்புழுக்கள் இறந்து விடுகின்றது. தேவையான பட்டுக்கூடுகளிலிருந்து தனி பட்டு இழைகள் பட்டுநூற்பு இயந்திரங்களின் மூலம்

ஒன்றிணைக்கப்பட்டு பட்டு நூல் உருவாக்கப்படுகிறது. இவை பின்னர் உலர்த்தப்பட்டு அடுத்த நிலைகளுக்கு கொண்டு செல்லப்படுகிறது.

சேலைகள், வேட்டிகள், ஆடைத் துணிகள், கழுத்து / தோளணித் துண்டுகள், ஆயத்த ஆடைகள், படுக்கை விரிப்புகள், தரை விரிப்புகள், அறை அலங்காரத் துணிகள் போன்ற பல்வேறு பட்டுத் துணி வகைகள் பட்டு நூலைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படுகின்றன. பட்டு நூலை மற்ற நூல்களுடன் கலந்து கலப்பு வகைத் துணி இரகங்களும் உற்பத்தி செய்யப்படுகின்றன.

**இந்திய வரலாற்றில் பட்டு**

கி.மு. 2700 இல் பட்டு கண்டுபிடிக்கப்பட்டு இருந்தாலும், தொல்லியல் ஆவணங்களில் குறிப்பிட்டுள்ளவாறு, பட்டு உற்பத்தியானது கி.மு. 5000 முதல் கி.மு.3000 ஆண்டுகளுக்கு முன்பே தொடங்கப்பட்டதாகக் கருதப்படுகிறது.

கி.பி. 140 ஆம் ஆண்டில் 'பட்டுப்பாதை' வழியாக பட்டு உற்பத்தித்தொழில் இந்தியாவிற்குள் நுழைந்தது. கனிஷ்கர் பேரரசு காலத்தில், இந்தியாவிற்கும் ரோமானிய/ கிரேக்க நாடுகளுக்கும் இடையே மிகவும் செழிப்பான பட்டு வர்த்தகம் இருந்ததாக வரலாற்றுச் சான்றுகள் தெரிவிக்கின்றன.

சங்க இலக்கியங்களான கலித்தொகை, பரிபாடல் (எட்டுத்தொகை) மற்றும் திருமுருகாற்றுப்படை (பத்துப்பாட்டு) ஆகியவற்றின் மூலமாக பண்டையத் தமிழ்நாட்டில் பட்டு ஆடைகள் பயன்படுத்தப்பட்டிருப்பதை அறியமுடிகிறது.

## 2. இந்தியாவில் பட்டுத் தொழில்

உலக நாடுகளில் மல்பெரி, ஈரி, டசார் மற்றும் மூகா ஆகிய நான்கு வகையான பட்டுகளையும் உற்பத்தி செய்யும் ஒரே நாடு என்ற தனித்துவத்தை இந்தியா பெற்றிருக்கிறது.

உலக அளவில் பட்டு உற்பத்தியில் சீனாவிற்கு அடுத்தபடியாக இரண்டாம் நிலையில் இந்தியா உள்ளது. மத்திய பட்டு வாரிய அறிக்கைப்படி, கடந்த ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட 33,739 மெட்ரிக் டன் மொத்த பட்டு உற்பத்தியில் மல்பெரி பட்டு 70.71 சதவீதமும் (23,860 மெட்ரிக் டன்), டசார் பட்டு 8.01 சதவீதமும் (2,705 மெட்ரிக் டன்), ஈரி பட்டு 20.56 சதவீதமும் (6,935 மெட்ரிக் டன்) மூகா பட்டு 0.71 சதவீதமும் (239 மெட்ரிக் டன்) உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

இந்தியாவில் கர்நாடகம், ஆந்திரப் பிரதேசம், தமிழ்நாடு, தெலுங்கானா, மகாராஷ்டிரா மற்றும் மேற்கு வங்காளம், ஆகிய ஆறு மாநிலங்களில் மல்பெரி பட்டுத் தொழில் பிரதானமாக மேற்கொள்ளப்படுகிறது.

உலக அளவில், பட்டுத் துணிகளை அதிக அளவில் நுகர்வு செய்யும் நாடாக இந்தியா திகழ்கிறது. கச்சாப் பட்டு உற்பத்தியை விட கச்சாப் பட்டுத் தேவை அதிகமாக உள்ளது. தற்போது இந்தியாவின் கணக்கீடு செய்யப்பட்ட கச்சாப்பட்டுத் தேவை ஆண்டொன்றிற்கு 39,000 மெட்ரிக் டன் ஆகும். இதில் 33,739 மெட்ரிக் டன் கச்சாப்பட்டு நம் நாட்டில் உற்பத்தி செய்யப்படுகிறது. மீதமுள்ள கச்சாப்பட்டுத் தேவையினை பூர்த்தி செய்ய சீனாவிலிருந்து கச்சாப்பட்டு இறக்குமதி செய்யப்படுகிறது. ஆகவே, நாட்டில் தொடர்ந்து அதிகரித்து வரும் பட்டு நூல் தேவையைப் பூர்த்தி செய்து, பட்டு நூல் உற்பத்தியில் தன்னிறைவு பெறுவதற்கு ஜவுளித்துறை அமைச்சகத்தின் மத்திய பட்டு வாரியம் மற்றும் தமிழ்நாடு அரசின் பட்டுவளர்ச்சித் துறை ஆகியன பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன.

2020–2021–ஆம் ஆண்டில் இந்தியா 1,418.97 கோடி ரூபாய் மதிப்பிலான பட்டு மற்றும் பட்டு ஜவுளிகளை பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்துள்ளது.

## 3. தமிழ்நாட்டில் பட்டுத் தொழில்

தமிழ்நாடு பாரம்பரியமாக பட்டுத்தொழில் மேற்கொண்டு வரும் மாநிலங்களில் ஒன்றாகத் திகழ்கிறது. மல்பெரி பட்டு உற்பத்தியில் தமிழ்நாடு இந்தியாவில் மூன்றாம் இடம் வகிக்கிறது. இங்கு பெரும்பாலான விவசாயிகள் பரவலாக

மல்பெரி சாகுபடி செய்து வருகின்றனர். 44,417.40 ஏக்கர் பரப்பளவில் 22,269 விவசாயிகளால் மல்பெரி பயிர் சாகுபடி செய்யப்பட்டு பட்டுப்புழு வளர்ப்புத் தொழில் மேற்கொள்ளப்படுகிறது.

2020–2021–ஆம் நிதி ஆண்டில் தமிழ்நாட்டில் 1,834 மெட்ரிக் டன் கச்சாப்பட்டு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. அவற்றுள் இறக்குமதி செய்யப்படும் வெண்பட்டுக்கு மாற்றாக, தமிழ்நாடு 1,754 மெட்ரிக் டன் வெண்பட்டினை உற்பத்தி செய்து, மல்பெரி வெண்பட்டு உற்பத்தி செய்யும் மாநிலங்களில் தேசிய அளவில் மூன்றாம் இடம் வகிக்கிறது. மாநிலத்தின் மொத்த கச்சாப்பட்டு தேவை 3,000 மெட்ரிக் டன்னாக மதிப்பிடப்பட்டுள்ளதால் கச்சாப்பட்டு உற்பத்தியில் தன்னிறைவு பெறுவதற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது.

மேலும், பட்டு நூற்பு உப பொருட்களை பல்வகைகளில் திறம்பட பயன்படுத்தி இலாபம் ஈட்டும் வகையில் நிரந்தரமான சந்தை வசதிகளை ஏற்படுத்த மாநில அரசு திட்டமிட்டு வருகிறது.

சுற்றுச்சூழலுக்கு உகந்த பட்டின் தேவையை உணர்ந்து, தமிழ்நாட்டில் 'ஈரி பட்டு வளர்ப்பு' அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இது ஒரு மல்பெரி சாராத பட்டுவளர்ப்பு வகை ஆகும். உள்நாட்டின் பூர்வ

குடிமக்களால் மலைப்பாங்கான பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இது தொலைதூர மற்றும் மலைப் பகுதிகளில் வாழும் பழங்குடியின மக்களுக்கு குறிப்பாக பெண்கள் மற்றும் இளைஞர்களுக்கு கணிசமான வேலை வாய்ப்பினை உருவாக்குகிறது. ஆமணக்கு மற்றும் மரவள்ளி பயிரிடும் விவசாயிகள், விதை மற்றும் கிழங்கின் உற்பத்தி அளவு மற்றும் தரம் பாதிக்காமல், அப்பயிர்களின் 20 சதவீத இலைகளை மட்டுமே பயன்படுத்தி, ஈரி பட்டுப்புழு வளர்ப்பு மேற்கொள்வதால் கூடுதல் வருமானம் ஈட்டுகின்றனர். பட்டுச் சந்தையில் ஈரி பட்டுக்கு நல்ல தேவை உள்ளது.

தமிழ்நாட்டில் புவிசார் குறியீடுகள் வழங்கப்பெற்றுள்ள 10 வகை ஜவுளிகளில், 4 வகைகள் பட்டுத்துணிகளாகும். அவை காஞ்சிபுரம், ஆரணி, திருபுவனம் பட்டு சேலைகள் மற்றும் சேலம் வெண்பட்டு வேட்டிகள் ஆகும்.

### 4. நிலையான வளர்ச்சி இலக்குகள்:

ஐக்கிய நாடுகளின் 17 நிலையான வளர்ச்சி இலக்குகள் மற்றும் 169 தொடர் இலக்குகளை உள்ளடக்கிய 'உலக மாற்றத்திற்கான நிலையான நீடித்த வளர்ச்சி 2016–2030–க்கான நிகழ்ச்சி நிரல்' செப்டம்பர் 2015 இல் இந்திய அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்த இலக்குகள் சமுதாயத்தின் நலனுக்கான பொருளாதார,

சுற்றுச்சூழல் மற்றும் மக்கள் நல்வாழ்வின் அம்சங்களை தழுவியுள்ளது.

தமிழ்நாட்டினை இந்தியாவிலேயே வறுமையிலிருந்து விடுபட்ட, மிக வளமான மற்றும் முற்போக்கான மாநிலமாக ஆக்குவதுடன், அதன் மக்கள் ஒரு நவீன சமுதாயத்தின் அனைத்து அடிப்படை வசதிகளையும் அடைந்து, சுற்றுச்சூழலுக்கு உகந்த வாழ்க்கையை உலகத்தின் பிற பகுதிகளுடன் இயைந்து வாழ வேண்டும் என்பதே தமிழ்நாடு அரசின் தொலைநோக்குத் திட்டம் ஆகும்.

பட்டுத் தொழில், வேளாண் சார்ந்த ஊரக குடிசைத் தொழில் ஆகும். இது கிராமப்புற ஏழை எளிய மக்கள் மற்றும் பெண்களுக்கு வாழ்வாதாரத்தை ஏற்படுத்தித் தருகிறது. விவசாயிகளுக்கு மல்பெரி நடவு, பட்டுப்புழுவளர்ப்பு மற்றும் தொழில் முனைவோர்களுக்கு பட்டு நூற்பு மற்றும் முறுக்கேற்றும் செயல்களுக்கு பட்டுவளர்ச்சித் துறை பல்வேறு மானிய உதவிகளை வழங்கி வருகின்றது.

பட்டுவளர்ச்சித் துறைக்கான நிலையான வளர்ச்சி இலக்குகள் பின்வருமாறு:

## இலக்கு [1]: வறுமையின்மை:

### (1.1) அனைத்து மக்களிடத்திலும் தீவிர வறுமை ஒழிப்பு:

பட்டுத்தொழிலில் ஈடுபட்டு வரும் விவசாயிகள் மல்பெரி நடவு செய்தல் மற்றும் பட்டுப்புழு வளர்ப்பின் மூலம் நல்ல வருமானம் பெற்று வருகின்றனர். அதுபோல, பட்டு விவசாயிகள் தங்களது மல்பெரி தோட்டப் பராமரிப்பிற்கும், பட்டுப்புழு வளர்ப்பிற்கும் ஊரக வேலையாட்களைப் பயன்படுத்துவதன் மூலம் வேலை வாய்ப்பினை வழங்க முடிகிறது. ஓர் ஏக்கர் மல்பெரி பயிரிடுவதன் மூலம் 5 நபர்களுக்கு ஆண்டு முழுவதும் வேலை வாய்ப்பு ஏற்படுத்த முடியும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

## இலக்கு [8]: கண்ணியமான வேலை மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்குதல்:

### (8.5) அனைத்து பெண்கள் மற்றும் ஆண்களுக்கும் ஆக்கவளமுள்ள வேலைவாய்ப்பினை முழுமையாக வழங்குதல்:

பெரும்பாலான பண்ணைத் தொழிலாளர்கள், பட்டுநூற்பாளர்கள் மற்றும் நெசவாளர்கள் பெண்கள் ஆவர். பட்டுவளர்ப்பு மூலம் கண்ணியமான வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படுகின்றன.

## இலக்கு [9]: தொழில், புதிய கண்டுபிடிப்பு மற்றும் உட்கட்டமைப்பு:

### (9.3) சிறு தொழில்கள் மற்றும் பிற தொழில் நிறுவனங்களுடன் அணுகுவதை அதிகரித்தல்:

பட்டுக்கூடுகளின் உற்பத்தியை அதிகரிப்பதன் மூலம் பட்டு நூற்பு, பட்டு முறுக்கேற்றுதல், சாயமேற்றுதல், நெசவு மற்றும் பிற செயல்பாட்டு அலகுகள் போன்ற சிறுதொழில்கள் அதிகரிக்கும். பட்டு உபபொருட்களை பயன்படுத்துதல், பட்டுநூல் உற்பத்தி, பட்டுக்கூடு மற்றும் பட்டுநூலில் செய்யப்பட்ட கைவினைப்பொருட்கள் மற்றும் துணிசாரா பயன்பாடுகளில் செரிசின் என்ற பட்டு புரதமானது, மருத்துவத் துறையில் உயிர்–மருத்துவ சாதனங்கள் மற்றும் அறுவை சிகிச்சை தகடுகள் தயாரிப்பு, அழகு சாதனப் பொருட்கள் உற்பத்தி செய்யும் தொழில்கள் ஊக்கப்படுத்தப்படுகின்றன.

## 5. பட்டுவளர்ச்சித் துறை பணியமைப்பு

பட்டுவளர்ச்சித் துறை சீரிய முறையில் நிரவலாக்கப்பட்ட, விரிவாக்க அமைப்புகளுக்கான தொழில்நுட்பப் பணியாளர்கள் மற்றும் அமைச்சுப் பணியாளர்களை கொண்டுள்ளது. மாநிலத்தில் பல்வேறு பட்டுவளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்துவதற்காக தமிழ்நாடு அரசால் அனுமதிக்கப்பட்டுள்ள பணியிடங்கள் பின்வருமாறு:

| வ. எண். | பதவியின் பெயர் | அனுமதிக்கப்பட்டுள்ள எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | இயக்குநர் | 1 |
| 2 | இணை இயக்குநர் | 3 |
| 3 | துணை இயக்குநர் (நிருவாகம்) | 1 |
| 4 | துணை இயக்குநர் | 9 |
| 5 | உதவி இயக்குநர் | 27 |
| 6 | பட்டு ஆய்வாளர் | 67 |
| 7 | உதவி பட்டு ஆய்வாளர் | 179 |
| 8 | இளநிலை பட்டு ஆய்வாளர் | 824 |
| 9 | அமைச்சுப் பணியாளர், மற்றோர் | 316 |
| | **மொத்தம்** | **1,427** |

ஈரோடு, தருமபுரி, வேலூர், திருச்சி மற்றும் மதுரை ஆகிய இடங்களில் அமைந்துள்ள ஐந்து மண்டல அலுவலகங்கள் மூலமாக பட்டு வளர்ச்சி செயல்பாடுகள் கண்காணிக்கப்படுகின்றன. மாநிலத்தில் உள்ள 19 உதவி இயக்குநர்களால் மாவட்ட அளவில் மல்பெரி விரிவாக்கம் மற்றும் அதனைச் சார்ந்த பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும், வர்த்தக ரீதியிலான பட்டு முட்டை உற்பத்தி சார்ந்த பணிகள் 2 உதவி இயக்குநர்களால் மேற்கொள்ளப்படுகின்றன.

பட்டு விதை ஒருங்கிணைப்புப் பணி, ஓசூரிலுள்ள துணை இயக்குநர் அலுவலகம், 4 உதவி இயக்குநர்களின் பங்கேற்புடன் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படும் கச்சாப்பட்டு, காஞ்சிபுரத்தில் உள்ள 'அரசு அண்ணா பட்டு பரிமாற்றகம்' மற்றும் அதன் சேலம் கிளை ஆகியவற்றில் வர்த்தகம் செய்யப்படுகிறது.

மாநில அளவில் பட்டு விவசாயிகள், பட்டு நூற்பாளர்கள், பட்டு முறுக்காளர்கள் மற்றும் துறை அலுவலர்களுக்கு பல்வேறு திட்டங்களின் கீழ் பட்டுவளர்ப்பு சார்ந்த மற்றும் இதர பயிற்சிகள் வழங்குவதற்காக 'தமிழ்நாடு பட்டுவளர்ச்சி பயிற்சி நிலையம்', துணை இயக்குநர் தலைமையில் ஓசூரில் செயல்பட்டு வருகிறது.

பட்டுவளர்ச்சித் துறையின் கீழ் செயல்பட்டு வரும் நிருவாக அலுவலகங்களின் விவரம் பின்வருமாறு:

| **இயக்குநரகம், பட்டுவளர்ச்சித் துறை, சேலம்** |
|---|
| இணை இயக்குநர் (தலைமையிடம்) |
| துணை இயக்குநர் (திட்டம்) |
| துணை இயக்குநர் (பட்டுக்கூட்டிற்கு முந்தைய நிலை) |
| துணை இயக்குநர் (பட்டுக்கூட்டிற்கு பிந்தைய நிலை) |

| மண்டலம் | வ. எண் | உதவி இயக்குநர் | உள்ளடக்கிய மாவட்டங்கள் | செயல்பாடுகள் |
|---|---|---|---|---|
| மண்டல இணை இயக்குநர், தருமபுரி | 1 | ஓசூர் | கிருஷ்ணகிரி | விரிவாக்க பணிகள், வித்தகங்கள், பட்டுக்கூடு அங்காடிகள், |
| | 2 | தேன்கனிக்-கோட்டை | | |
| | 3 | கிருஷ்ணகிரி | | |
| | 4 | ஓசூர் (வித்தகம்) | | |

| மண்டலம் | வ. எண் | உதவி இயக்குநர் | உள்ளடக்கிய மாவட்டங்கள் | செயல்பாடுகள் |
|---|---|---|---|---|
| | 5 | கிருஷ்ணகிரி (வித்தகம்) | | பட்டுப் பண்ணைகள், பட்டு நூற்பகங்கள் |
| | 6 | தருமபுரி | தருமபுரி | |
| | 7 | பென்னாகரம் | | |
| மண்டல இணை இயக்குநர், ஈரோடு | 8 | சேலம் | சேலம் | |
| | 9 | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் | |
| | 10 | உடுமலைப்–பேட்டை | திருப்பூர் | |
| | 11 | ஈரோடு | ஈரோடு | |
| | 12 | தாளவாடி | | |
| | 13 | குன்னூர் | நீலகிரி | |
| மண்டல துணை இயக்குநர், வேலூர் | 14 | வாணியம்பாடி | இராணிப்–பேட்டை<br>வேலூர்<br>திருவள்ளூர்<br>காஞ்சிபுரம்<br>செங்கல்பட்டு | |
| | 15 | திருவண்ணா–மலை | திருவண்ணா–மலை<br>திருப்பத்தூர் | |
| | 16 | விழுப்புரம் | விழுப்புரம்<br>கடலூர்<br>கள்ளக்குறிச்சி | |
| மண்டல துணை இயக்குநர், திருச்சி | 17 | திருச்சி | திருச்சி<br>புதுக்கோட்டை<br>அரியலூர்<br>பெரம்பலூர்<br>தஞ்சாவூர்<br>திருவாரூர்<br>நாகப்பட்டினம்<br>மயிலாடுதுறை | |
| | 18 | நாமக்கல் | நாமக்கல்<br>கரூர் | |
| மண்டல துணை இயக்குநர், மதுரை | 19 | திண்டுக்கல் | திண்டுக்கல்<br>சிவகங்கை | |
| | 20 | தேனி | தேனி<br>மதுரை<br>இராமநாதபுரம் | |

<table>
<tr><th>மண்டலம்</th><th>வ. எண்</th><th>உதவி இயக்குநர்</th><th>உள்ளடக்கிய மாவட்டங்கள்</th><th>செயல்பாடுகள்</th></tr>
<tr><td></td><td>21</td><td>தென்காசி</td><td>தென்காசி<br>திருநெல்வேலி<br>விருதுநகர்<br>தூத்துக்குடி<br>கன்னியாகுமரி</td><td></td></tr>
<tr><td rowspan="4">துணை இயக்குநர், விதை ஒருங்கிணைப்பு, ஓசூர்</td><td>22</td><td>ஆவலப்பள்ளி</td><td rowspan="3">கிருஷ்ணகிரி</td><td rowspan="4">ஆதார விதைப் பண்ணைகள்</td></tr>
<tr><td>23</td><td>கலுக்கொண்டப் –பள்ளி</td></tr>
<tr><td>24</td><td>கோலட்டி</td></tr>
<tr><td>25</td><td>மாதஹள்ளி</td><td>ஈரோடு</td></tr>
<tr><td colspan="4">துணை இயக்குநர், தமிழ்நாடு பட்டுவளர்ச்சி பயிற்சி நிலையம், ஓசூர்<br>உதவி இயக்குநர், தமிழ்நாடு பட்டுவளர்ச்சி பயிற்சி நிலையம், ஓசூர்</td><td>பயிற்சிகள்</td></tr>
<tr><td colspan="4">துணை இயக்குநர், அரசு அண்ணா பட்டு பரிமாற்றகம், காஞ்சிபுரம்<br>உதவி இயக்குநர், அரசு அண்ணா பட்டு பரிமாற்றகம், காஞ்சிபுரம்</td><td>கச்சாப்பட்டு பரிவர்த்தனை</td></tr>
</table>

## 6. பட்டுவளர்ச்சித் துறையின் செயல்பாடுகள்

தமிழ்நாட்டில் பட்டுவளர்ப்புத் தொழிலை மேம்படுத்த பட்டுவளர்ச்சித் துறையானது கீழ்க்காணும் செயல்பாடுகளை மேற்கொண்டு வருகிறது:

- உயர் விளைச்சல் தரும் மல்பெரி இரகங்களை பயிர் செய்ய விவசாயிகளுக்கு ஊக்கமளித்தல்.
- மல்பெரி சாகுபடி செய்தல், பட்டுப்புழு வளர்த்தல் மற்றும் பட்டு நூற்பு குறித்து பயிற்சி அளித்தல்.
- மல்பெரி தோட்டங்களில் சொட்டு நீர்ப்பாசன முறை அமைத்தல், மேம்படுத்தப்பட்ட பட்டுப்புழு வளர்ப்பு

உபகரணங்களை கொள்முதல் செய்து விநியோகம் செய்தல், தனி பட்டுப்புழுவளர்ப்புக் குடில் அமைத்தல், இளம்புழு வளர்ப்பு மையம் மற்றும் பட்டு பல்நோக்கு ஆலோசனை மையம் அமைத்தல் ஆகியவற்றிற்கு மானிய உதவியளித்தல்.

- தரமான மற்றும் நோயற்ற பட்டு முட்டைகளை வழங்குதல்.
- தொழில்நுட்பப் பரிமாற்றத்தின் மூலம் பட்டுக்கூடு உற்பத்தித் திறனை அதிகரித்தல்.
- பட்டு விவசாயிகளுக்கு பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தை செயல்படுத்துதல்.
- பட்டுக்கூடு மற்றும் பட்டு நூலுக்கான சந்தை வாய்ப்புகளை ஏற்படுத்துதல்.
- தனியார் மற்றும் கூட்டுறவு அமைப்புகளில் மேம்பட்ட பட்டு நூற்பு / பட்டு முறுக்கேற்றும் அலகுகளை அமைக்க மானிய உதவியளித்தல்.

## 7. தமிழ்நாட்டில் மல்பெரி பரப்பு

தமிழ்நாட்டில் 44,417.40 ஏக்கர் பரப்பில் 22,269 விவசாயிகளால் மல்பெரி சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம், ஈரோடு, திருப்பூர், வேலூர், நாமக்கல், திண்டுக்கல், தென்காசி மற்றும் தேனி ஆகிய மாவட்டங்களில் பட்டுவளர்ப்பு தீவிரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. சென்னை நீங்கலாக பிற

மாவட்டங்களில் மிதமான அளவில் பட்டு வளர்ப்புத் தொழில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

உயர் விளைச்சல் தரும் வி1, எஸ் வரிசை, எம்.ஆர்.2 மற்றும் ஜி.4 ஆகிய மல்பெரி இரகங்கள் விவசாயிகளிடையே பிரபலப்படுத்தப்பட்டு வருகிறது. மல்பெரி செடிகளை செழிப்பாக வளரச் செய்வதற்காக இணை வரிசை நடவு முறை விவசாயிகளுக்கு பரிந்துரைக்கப்படுகிறது. பாசன நீரை சிக்கனமாகப் பயன்படுத்துவதற்காக மல்பெரி தோட்டங்களில் சொட்டு நீர்ப்பாசனமுறை தீவிரப்படுத்தப்பட்டு வருகிறது. பட்டுப்புழு வளர்ப்பில் வேலையாட்கள் பயன்பாட்டினை குறைப்பதற்காக தற்போது தண்டு அறுவடை முறை பின்பற்றப்படுகிறது. தண்டு அறுவடை முறையில் மல்பெரித் தோட்டம் ஒவ்வொரு பட்டுப்புழு வளர்ப்புக்குப் பின்னர் கவாத்து செய்யப்பட்டு, இடைநிலை சீர்திருத்தங்கள் மற்றும் உரமிடும் பணிகள் மேற்கொள்ளப்படுகிறது. மல்பெரி நடவு செய்வதிலிருந்து, பட்டுக் கூடுகளை சந்தைப்படுத்துதல் வரையிலான அனைத்து நிலைகளிலும் இத்துறையின் விரிவாக்கப் பணியாளர்கள், விவசாயிகளுக்கு எல்லா வகையான உதவிகளையும் அளித்து வருகின்றனர்.

## மாவட்ட வாரியான மல்பெரி பரப்பு

| வ. எண் | மாவட்டம் | 01.04.2021–ல் மல்பெரி பரப்பு | | | |
|---|---|---|---|---|---|
| | | ஏக்கர் | | | விவசாயிகள் |
| | | இறவை | மானா வாரி | மொத்தம் | |
| 1 | கிருஷ்ணகிரி | 6794.45 | | 6794.45 | 3482 |
| 2 | தருமபுரி | 3526.80 | | 3526.80 | 2174 |
| 3 | சேலம் | 3329.50 | | 3329.50 | 2053 |
| 4 | ஈரோடு | 3684.71 | | 3684.71 | 1593 |
| 5 | கோயம்புத்தூர் | 2838.25 | | 2838.25 | 1225 |
| 6 | திருப்பூர் | 5600.89 | | 5600.89 | 2645 |
| 7 | நீலகிரி | 78.00 | | 78.00 | 52 |
| 8 | வேலூர் | 678.50 | | 678.50 | 287 |
| 9 | திருப்பத்தூர் | 1462.75 | 155.85 | 1618.60 | 946 |
| 10 | இராணிப்பேட்டை | 575.00 | | 575.00 | 283 |
| 11 | காஞ்சிபுரம் | 19.50 | | 19.50 | 15 |
| 12 | செங்கல்பட்டு | 26.00 | | 26.00 | 12 |
| 13 | திருவள்ளூர் | 18.00 | | 18.00 | 10 |
| 14 | திருவண்ணாமலை | 1024.55 | 118.00 | 1142.55 | 647 |
| 15 | நாமக்கல் | 2065.25 | 34.90 | 2100.15 | 1106 |
| 16 | கரூர் | 359.00 | | 359.00 | 198 |
| 17 | திருச்சி | 856.55 | | 856.55 | 455 |
| 18 | பெரம்பலூர் | 150.90 | | 150.90 | 70 |
| 19 | அரியலூர் | 119.50 | | 119.50 | 53 |
| 20 | புதுக்கோட்டை | 492.00 | | 492.00 | 263 |
| 21 | திருவாரூர் | 183.50 | | 183.50 | 79 |
| 22 | தஞ்சாவூர் | 329.00 | | 329.00 | 156 |
| 23 | நாகப்பட்டினம் | 12.50 | | 12.50 | 6 |
| 24 | மயிலாடுதுறை | 44.00 | | 44.00 | 16 |
| 25 | விழுப்புரம் | 650.50 | | 650.50 | 332 |
| 26 | கள்ளக்குறிச்சி | 359.00 | | 359.00 | 209 |
| 27 | கடலூர் | 535.25 | | 535.25 | 243 |
| 28 | மதுரை | 470.00 | | 470.00 | 196 |

| வ. எண் | மாவட்டம் | 01.04.2021–ல் மல்பெரி பரப்பு | | | |
|---|---|---|---|---|---|
| | | ஏக்கர் | | | விவசாயிகள் |
| | | இறவை | மானா வாரி | மொத்தம் | |
| 29 | தேனி | 1850.50 | | 1850.50 | 885 |
| 30 | விருதுநகர் | 514.00 | | 514.00 | 199 |
| 31 | இராமநாதபுரம் | 139.50 | | 139.50 | 66 |
| 32 | சிவகங்கை | 316.70 | | 316.70 | 140 |
| 33 | திண்டுக்கல் | 2892.00 | | 2892.00 | 1260 |
| 34 | திருநெல்வேலி | 184.00 | | 184.00 | 82 |
| 35 | தென்காசி | 1507.75 | | 1507.75 | 634 |
| 36 | தூத்துக்குடி | 190.85 | | 190.85 | 76 |
| 37 | கன்னியாகுமரி | 229.50 | | 229.50 | 121 |
| | **மொத்தம்** | **44108.65** | **308.54** | **44417.40** | **22269** |

2021–2022–ஆம் ஆண்டில் கூடுதலாக 5,000 ஏக்கரில் மல்பெரி சாகுபடி மற்றும் 617.50 ஏக்கரில் மர மல்பெரி சாகுபடி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

## 8. பட்டுவளர்ச்சித் துறையின் உட்கட்டமைப்பு வசதிகள்

பட்டுக்கூடுகளுக்கு முந்தைய நிலை மற்றும் பிந்தைய நிலை செயல்பாடுகளை மேற்கொள்ளப் போதுமான முன்னிணைப்பு மற்றும் பின்னிணைப்புகளுடன் கூடிய உட்கட்டமைப்பு வசதிகளை பட்டுவளர்ச்சித் துறை பெற்றுள்ளது. மாநிலத்தில் பட்டுத்தொழிலின் வளர்ச்சியினை மேம்படுத்துவதற்காக பின்வரும் உட்கட்டமைப்பு வசதிகள் உள்ளன.

| அரசு உட்கட்டமைப்பு | வ. எண் | பெயர் | எண்ணிக்கை | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஆதார விதைப் பண்ணைகள் | 1 | பி3 விதைப் பண்ணைகள் | 5 | 19 |
| | 2 | பி2 விதைப் பண்ணைகள் | 8 | |
| | 3 | பி1 விதைப் பண்ணைகள் | 6 | |
| வித்தகங்கள் | 1 | மாநில அரசு வித்தகங்கள் | 10 | 12 |
| | 2 | மத்திய பட்டு வாரிய வித்தகங்கள் | 2 | |
| குளிர்பதன அலகுகள் | 1 | பல்நிலை குளிர்பதன அலகுகள் | 3 | 3 |
| தொழில்நுட்ப சேவை மையங்கள் | 1 | விதை | 3 | 105 |
| | 2 | விரிவாக்கம் | 102 | |
| அரசு பட்டுப் பண்ணைகள் | 1 | செயல் விளக்கம் மற்றும் பயிற்சி மையம் | 6 | 32 |
| | 2 | கலப்பின பட்டுப் பண்ணை | 6 | |
| | 3 | விவசாயிகள் பயிற்சி மையம் | 10 | |
| | 4 | இளம்புழு வளர்ப்புப் பண்ணை | 4 | |
| | 5 | மாதிரி மல்பெரி பட்டுப் பண்ணை | 5 | |
| | 6 | பட்டு உலகம் – பட்டு சுற்றுலா மையம் | 1 | |
| அரசு பட்டுக்கூடு அங்காடிகள் | 1 | விதைக்கூடு அங்காடிகள் | 3 | 23 |
| | 2 | பட்டுக்கூடு அங்காடிகள் | 20 | |
| அரசு பட்டு நூற்பு / முறுக்கேற்றும் அலகுகள் | 1 | பட்டு முறுக்கேற்றும் அலகுகளுடன் கூடிய பட்டு நூற்பகங்கள் | 4 | 8 |
| | 2 | பட்டு முறுக்கேற்றும் அலகுகள் இல்லாது தனித்து இயங்கும் பட்டு நூற்பகங்கள் | 4 | |
| பயிற்சி நிலையம் | 1 | தமிழ்நாடு பட்டுவளர்ச்சி பயிற்சி நிலையம் | 1 | 1 |
| பட்டு பரிமாற்றகம் | 1 | அரசு அண்ணா பட்டு பரிமாற்றகம், காஞ்சிபுரம் | 1 | 1 |
| கூட்டுறவு சங்கங்கள் | 1 | பட்டு தொழிற் கூட்டுறவு சங்கங்கள் | 25 | 26 |
| | 2 | தமிழ்நாடு கூட்டுறவு பட்டு உற்பத்தியாளர் இணையம் | 1 | |

இது தவிர பின்வரும் தனியார் உட்கட்டமைப்பு வசதிகளும் உள்ளன.

| தனியார் உட்கட்டமைப்பு | வ. எண் | பெயர் | எண்ணிக்கை | மொத்தம் |
|---|---|---|---|---|
| பட்டு நூற்பு அலகுகள் | 1 | சர்க்கா பட்டுநூற்பு அலகுகள் | 28 | 190 |
| | 2 | காட்டேஜ் பேசின் பட்டுநூற்பு அலகுகள் | 94 | |
| | 3 | பலமுனை பட்டுநூற்பு அலகுகள் | 60 | |
| | 4 | தானியங்கி பட்டுநூற்பு அலகுகள் | 8 | |
| இளம்புழு வளர்ப்பு மையங்கள் | 1 | இளம்புழு வளர்ப்பு மையங்கள் | 33 | 33 |

## 8.1 ஆதார பட்டுப்புழு விதை உற்பத்தி அலகுகள்

பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வரும் வர்த்தக ரீதியிலான பட்டு முட்டைத் தொகுதிகளை வித்தகங்களில் உற்பத்தி செய்ய தேவையான விதைக் கூடுகள் ஆதார விதைப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படுகிறது.

பட்டுப்புழு விதை உற்பத்தியில் மூன்றடுக்கு முறையில் (பி3 –> பி2–> பி1) பட்டுப்புழுக்களின் இனப் பண்புகளை பராமரிப்பதற்கென துறையின் கீழ் 19 விதைப்பண்ணைகள் செயல்பட்டு வருகின்றன. பி1 மட்டத்தில் பட்டு முட்டைகளின் தேவை அதிகமாக இருப்பதால், தேர்ந்தெடுக்கப்பட்ட விதை உற்பத்தி செய்யும் விவசாயிகளும் ஆதார விதைக் கூடு உற்பத்தி செய்ய ஊக்குவிக்கப்படுகின்றனர். விதைப்பண்ணைகள் மற்றும் வித்தகங்கள் பட்டுப்புழுக்களின் இனப் பண்புகளையும்

கலப்பின வீரியத்தையும் பராமரித்து வருவதால், அவை பட்டு வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

**விதைப் பண்ணைகள்**

| மாவட்டம் | உதவி இயக்குநர் | வ. எண் | விதைப் பண்ணையின் பெயர் | நிலை | மொத்த பரப்பு (ஏக்கர்) |
|---|---|---|---|---|---|
| கிருஷ்ணகிரி | ஆவலப்பள்ளி | 1 | பேரிகை | பி3 | 3.67 |
| | | 2 | ஆவலப்பள்ளி | பி3 | 11.34 |
| | | 3 | ஓசூர் | பி2 | 44.72 |
| | கலுக்கொண்டப்பள்ளி | 4 | கலுக்கொண்டப்பள்ளி | பி3 | 5.65 |
| | | 5 | தளி | பி3 | 3.50 |
| | | 6 | உத்தனப்பள்ளி | பி2 | 26.24 |
| | | 7 | உளிமங்கலம் | பி2 | 9.80 |
| | | 8 | மேலகிரி | பி2 | 10.20 |
| | கோலட்டி | 9 | கோலட்டி | பி1 | 868.55 |
| தருமபுரி | தருமபுரி | 10 | சித்தேரி | பி1 | 5.79 |
| ஈரோடு | தாளவாடி | 11 | ஆசனூர் | பி2 | 8.89 |
| | மாதஹள்ளி | 12 | மாதஹள்ளி | பி1 | 785.29 |
| திருப்பத்தூர் | திருவண்ணாமலை | 13 | அத்தனாவூர் | பி1 | 5.73 |
| நாமக்கல் | நாமக்கல் | 14 | கொல்லிமலை | பி1 | 13.10 |
| தேனி | தேனி | 15 | மயிலாடும்பாறை | பி2 | 10.00 |
| தென்காசி | தென்காசி | 16 | செங்கோட்டை | பி1 | 42.24 |
| நீலகிரி | குன்னூர் | 17 | குன்னூர் | பி3 | 23.61 |
| | | 18 | மசினகுடி | பி2 | 8.35 |
| | | 19 | மசக்கல் | பி2 | 18.95 |
| | | | | **மொத்தம்** | **1905.62** |

## 8.2 வித்தகங்கள்

ஆதார விதைப் பண்ணைகள் / விதை உற்பத்தி விவசாயிகளிடமிருந்து பெறப்படும் விதைக் கூடுகளைக் கொண்டு வர்த்தக ரீதியிலான பட்டு முட்டைத்

தொகுதிகளை உற்பத்தி செய்யும் மையங்களே, 'வித்தகங்கள்' ஆகும்.

நோயற்ற பட்டு முட்டைகள் உற்பத்தி செய்யப்பட்டு, பட்டு விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படுவதற்கென 10 மாநில அரசு வித்தகங்கள் மாநிலத்தில் செயல்பட்டு வருகின்றன.

இது தவிர, மத்திய பட்டு வாரியத்தின் கீழ் இயங்கும் தேசிய பட்டுப்புழு விதைக் கழகத்தின் (NSSO) 2 வித்தகங்களும் மாநிலத்தில் செயல்பட்டு வருகின்றன.

**வித்தகங்கள்**

| **மாவட்டம்** | **உதவி இயக்குநர்** | **வ. எண்.** | **வித்தகத்தின் பெயர்** | **மாநில அரசு / * மத்திய பட்டு வாரியம்** | **உற்பத்தித் திறன் (இலட்சத்தில்)** |
|---|---|---|---|---|---|
| கிருஷ்ணகிரி | ஓசூர் (வித்தகம்) | 1 | ஓசூர் (கலப்பினம்) | மாநில அரசு | 4.00 |
| | | | ஓசூர் (இருசுழற்சி) | மாநில அரசு | 12.00 |
| | | * | ஓசூர் (இருசுழற்சி) | மத்திய பட்டு வாரியம் | 28.00 |
| | கிருஷ்ணகிரி (வித்தகம்) | 2 | கிருஷ்ணகிரி (இருசுழற்சி) | மாநில அரசு | 32.00 |
| தருமபுரி | தருமபுரி | 3 | சோகத்தூர் (இருசுழற்சி) | மாநில அரசு | 3.00 |
| | | * | தருமபுரி (இருசுழற்சி) | மத்திய பட்டு வாரியம் | 20.00 |
| | பென்னாகரம் | 4 | பென்னாகரம் (இருசுழற்சி) | மாநில அரசு | 5.00 |
| கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் | 5 | கோயம்புத்தூர் (இருசுழற்சி) | மாநில அரசு | 10.00 |
| ஈரோடு | ஈரோடு | 6 | ஈரோடு (இருசுழற்சி) | மாநில அரசு | 10.00 |

| மாவட்டம் | உதவி இயக்குநர் | வ. எண். | வித்தகத்தின் பெயர் | மாநில அரசு / * மத்திய பட்டு வாரியம் | உற்பத்தித் திறன் (இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|
| | தாளவாடி | 7 | தாளவாடி (இருசுழற்சி) | மாநில அரசு | 5.00 |
| திருப்பத்தூர் | வாணியம்பாடி | 8 | வாணியம்பாடி (இருசுழற்சி) | மாநில அரசு | 9.00 |
| திருச்சி | திருச்சி | 9 | திருச்சி (கலப்பினம்) | மாநில அரசு | 4.00 |
| தென்காசி | தென்காசி | 10 | குற்றாலம் (இருசுழற்சி) | மாநில அரசு | 5.00 |
| | | | | **மொத்தம்** | **147.00** |

## 8.3 பல்நிலை குளிர்பதன அலகுகள்

வெண்பட்டுக்கான தேவை அதிகரித்து வருவதால். தமிழ்நாட்டில் 90 சதவீதத்திற்கும் அதிகமான விவசாயிகள் இரு சுழற்சியின (வெண்பட்டு) பட்டு முட்டைகளையே வளர்த்து வருகின்றனர்.

அரசு வித்தகங்களில் உற்பத்தி செய்யப்படும் இருசுழற்சியின பட்டு முட்டைகளின் விதை உறக்கத்தினை கட்டுப்படுத்தி கருவின் வீரியத்தை பராமரித்து அவற்றை நான்கு, ஆறு மற்றும் பத்து மாதங்களுக்குப் பின் பொரிக்கும் வகையில் விவசாயிகளுக்கு ஆண்டு முழுவதும் தடையின்றி தேவைக்கேற்ப விநியோகம் செய்வதற்காக இரு சுழற்சியின பட்டு முட்டைகள் 2.5°C முதல் 25°C வரையிலான பல்வேறு வெப்ப நிலைகளில் சுமார் 120 முதல் 300 நாட்கள் என முன்னதாக நிர்ணயம்

செய்யப்பட்ட காலத்திற்கு பாதுகாப்பாக குளிர்பதன அலகில் பதனம் செய்யப்படுகின்றன. இவ்வாறு விநியோகம் செய்யப்பட்ட பட்டு முட்டைகள் 10–11 நாட்களில் பொரிந்து முதல் பருவ பட்டுப்புழுவாக வெளிவருகிறது.

பட்டு முட்டைகளின் உடனடி தேவையைப் பூர்த்தி செய்திட அவற்றின் விதை உறக்கத்தினைப் போக்க அமில சிகிச்சையும் மேற்கொள்ளப்படுகிறது.

ஒசூர், கிருஷ்ணகிரி, பென்னாகரம், தருமபுரி, வாணியம்பாடி, கோயம்புத்தூர், ஈரோடு, தாளவாடி மற்றும் குற்றாலம் ஆகிய பட்டு முட்டை வித்தகங்களில் உற்பத்தி செய்யப்படும் இருசுழற்சி கலப்பின பட்டு முட்டைகள் பல்நிலை குளிர்பதன அலகுகளில் மிகுந்த கவனத்துடனும், பாதுகாப்புடனும் பதனப்படுத்தப்பட்டு, பட்டு விவசாயிகளின் தேவைக்கேற்ப வழங்கப்படுகின்றன.

இருசுழற்சியின பட்டு முட்டைகளை பதனப்படுத்தி ஆண்டு முழுவதும் விநியோகம் செய்வதற்காக ஒரே நேரத்தில் மொத்தம் 40.00 இலட்சம் பட்டு முட்டைகள் பதனம் செய்யும் திறன் கொண்ட இரண்டு பல்நிலை குளிர்பதன அலகுகள் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கிருஷ்ணகிரியிலும், ஓசூரிலும் செயல்பட்டு வருகின்றன. 2020–2021–ஆம் ஆண்டில் இவ்விரண்டு பல்நிலை குளிர்பதன அலகுகளில் 56.95 இலட்சம் இரு சுழற்சியின

பட்டு முட்டைகள் பதனப்படுத்தப்பட்டு பட்டு விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

மேலும், கோயம்புத்தூர் மாவட்டம் சின்னவேடம்பட்டியில் நிறுவப்பட்டுள்ள 20 இலட்சம் பட்டு முட்டைகள் பதனம் செய்யும் திறன் கொண்ட ஒரு பல்நிலை குளிர்பதன அலகு நடப்பாண்டில் பயன்பாட்டிற்கு வர உள்ளது.

| மாவட்டம் | உதவி இயக்குநர் | வ. எண். | பல்நிலை குளிர்பதன அலகின் பெயர் | திறன் (முட்டைத் தொகுதிகள் இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| கிருஷ்ணகிரி | ஆவலப்பள்ளி | 1 | ஓசூர் | 20.00 |
| | கிருஷ்ணகிரி | 2 | கிருஷ்ணகிரி | 20.00 |
| கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் | 3 | சின்னவேடம்பட்டி @ கோயம்புத்தூர் | 20.00 |
| | | | **மொத்தம்** | **60.00** |

## 8.4 தொழில்நுட்ப சேவை மையங்கள்

தொழில் நுட்ப சேவை மையங்கள் பட்டு விவசாயிகளுக்கு மல்பெரி சாகுபடி, மல்பெரித் தோட்டப் பராமரிப்பு, பட்டுப்புழு வளர்ப்பு மற்றும் பயிர்ப் பாதுகாப்பு முறைகள் குறித்த தொழில்நுட்ப உதவிகளை அவர்களது இல்லம் தேடிச் சென்று வழங்குகின்றன.

மேலும், அவை விவசாயிகளுக்கு பட்டுவளர்ச்சித் துறையின் பல்வேறு நலத்திட்டங்களின் மூலம் வழங்கப்படும் பயன்களைப் பெறவும் உதவுகிறது.

மாநிலத்தில் 105 தொழில் நுட்ப சேவை மையங்கள் இயங்கி வருகின்றன. ஒவ்வொரு தொழில் நுட்ப சேவை மையத்திலும் ஓர் உதவி ஆய்வாளர் / ஆய்வாளர் தலைமையில், 5–7 இளநிலை ஆய்வாளர்கள், பட்டு விவசாயிகளது தேவைகளை கவனித்து வருகின்றனர்.

**தொழில் நுட்ப சேவை மையங்கள்**

| மண்டலம் | மாவட்டங்கள் | வ. எண். | உதவி இயக்குநர் | தொழில் நுட்ப சேவை மையங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| தருமபுரி | கிருஷ்ணகிரி | 1 | ஓசூர் | 7 |
| | | 2 | தேன்கனிக்கோட்டை | 6 |
| | | 3 | கிருஷ்ணகிரி | 4 |
| | தருமபுரி | 4 | தருமபுரி | 4 |
| | | 5 | பென்னாகரம் | 6 |
| ஈரோடு | சேலம் | 6 | சேலம் | 7 |
| | கோயம்புத்தூர்<br>திருப்பூர்<br>ஈரோடு | 7 | கோயம்புத்தூர் | 4 |
| | | 8 | உடுமலைப்பேட்டை | 5 |
| | | 9 | ஈரோடு | 7 |
| | | 10 | தாளவாடி | 3 |
| | நீலகிரி | 11 | குன்னூர் | 1 |
| வேலூர் | வேலூர்<br>திருப்பத்தூர்<br>இராணிப்பேட்டை<br>திருவள்ளூர்<br>காஞ்சிபுரம்<br>செங்கல்பட்டு | 12 | வாணியம்பாடி | 8 |
| | திருவண்ணாமலை மற்றும் திருப்பத்தூர் மாவட்ட மலைப்பகுதிகள் | 13 | திருவண்ணாமலை | 6 |
| | விழுப்புரம் | 14 | விழுப்புரம் | 4 |

| மண்டலம் | மாவட்டங்கள் | வ. எண். | உதவி இயக்குநர் | தொழில் நுட்ப சேவை மையங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| | கள்ளக்குறிச்சி<br>கடலூர் | | | |
| திருச்சி | திருச்சி<br>புதுக்கோட்டை<br>அரியலூர்<br>திருவாரூர்<br>தஞ்சாவூர்<br>பெரம்பலூர்<br>நாகப்பட்டினம்<br>மயிலாடுதுறை | 15 | திருச்சி | 8 |
| | நாமக்கல்<br>கரூர் | 16 | நாமக்கல் | 7 |
| மதுரை | திண்டுக்கல்<br>சிவகங்கை | 17 | திண்டுக்கல் | 6 |
| | தேனி<br>மதுரை<br>இராமநாதபுரம் | 18 | தேனி | 5 |
| | தென்காசி<br>திருநெல்வேலி<br>விருதுநகர்<br>தூத்துக்குடி<br>கன்னியாகுமரி | 19 | தென்காசி | 7 |
| | | | **மொத்தம்** | **105** |

## 8.5 அரசு பட்டுப் பண்ணைகள்

மல்பெரி சாகுபடி மற்றும் பட்டுப்புழு வளர்ப்பு செயல்பாடுகளை விளக்கும் மாதிரி அலகுகளாகவும், மத்திய அரசின் பட்டு வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனங்களிலிருந்து அறிமுகப்படுத்தப்படும் சமீபத்திய தொழில்நுட்பங்களை எடுத்துரைக்கும் மையங்களாகவும்

அரசு பட்டுப் பண்ணைகள் செயல்பட்டு வருகின்றன. இந்த பண்ணைகளில் தேவைப்படும் பொழுது பி1 விதை வளர்ப்பும் மேற்கொள்ளப்படுகிறது.

இந்த அரசு பட்டுப் பண்ணைகளில் மல்பெரி நாற்று உற்பத்தி, இளம் பட்டுப்புழு (2–வது பருவம் வரை) வளர்ப்பு, முதிர் பட்டுப்புழு வளர்ப்பு மற்றும் விவசாயிகளுக்கு பயிற்சி வழங்குதல் ஆகிய பணிகளும் மேற்கொள்ளப்படுகிறது. மேலும், தரமான மல்பெரி நாற்றுகள் மற்றும் ஆரோக்கியமான இளம் பட்டுப்புழுக்களும் இந்த பண்ணைகளின் மூலம் தேவைப்படும் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன.

இத்துறையின் கீழ் 32 அரசு பட்டுப் பண்ணைகள் செயல்பட்டு வருகின்றன. அவை, 6 செயல்விளக்கம் மற்றும் பயிற்சி மையங்கள், 6 அரசு கலப்பின பட்டுப் பண்ணைகள், 10 விவசாயிகள் பயிற்சி மையங்கள், 4 இளம்புழுவளர்ப்புப் பண்ணைகள், 1 பட்டு உலகம் (பட்டு சுற்றுலா மையம்) மற்றும் 5 மாதிரி மல்பெரி பட்டுப் பண்ணைகள் ஆகும்.

## அரசு பட்டுப் பண்ணைகள்

| மாவட்டம் | உதவி இயக்குநர் | வ. எண். | அரசு பட்டுப் பண்ணையின் பெயர் | | மொத்த பரப்பு (ஏக்கர்) |
|---|---|---|---|---|---|
| கிருஷ்ணகிரி | தமிழ்நாடு பட்டு வளர்ச்சி பயிற்சி நிலையம், ஓசூர் | 1 | ஓசூர் | செயல் விளக்கம் மற்றும் பயிற்சி மையம் | 2.18 |
| | கிருஷ்ணகிரி | 2 | ஊத்தங்கரை | கலப்பின பட்டுப் பண்ணை | 3.77 |
| தருமபுரி | தருமபுரி | 3 | சோகத்தூர் | விவசாயிகள் பயிற்சி மையம் | 5.84 |
| | பென்னாகரம் | 4 | பாப்பாரப்பட்டி | இளம்புழு வளர்ப்புப் பண்ணை | 1.81 |
| சேலம் | சேலம் | 5 | ஏற்காடு | பட்டு உலகம் | 5.96 |
| | | 6 | நத்தக்கரை | விவசாயிகள் பயிற்சி மையம் | 14.50 |
| | | 7 | மணியார்–குண்டம் | கலப்பின பட்டுப் பண்ணை | 2.50 |
| | | 8 | புதூர் | கலப்பின பட்டுப் பண்ணை | 6.05 |
| கள்ளக்குறிச்சி | சேலம் | 9 | வெள்ளிமலை | கலப்பின பட்டுப் பண்ணை | 6.25 |
| ஈரோடு | தாளவாடி | 10 | தாளவாடி | விவசாயிகள் பயிற்சி மையம் | 18.01 |
| | | 11 | இராமாபுரம் | இளம்புழு வளர்ப்புப் பண்ணை | 3.58 |

| மாவட்டம் | உதவி இயக்குநர் | வ. எண். | அரசு பட்டுப் பண்ணையின் பெயர் | | மொத்த பரப்பு (ஏக்கர்) |
|---|---|---|---|---|---|
| | | 12 | கீர்மாளம் | கலப்பின பட்டுப் பண்ணை | 32.82 |
| திருப்பூர் | உடுமலைப்–பேட்டை | 13 | மைவாடி | விவசாயிகள் பயிற்சி மையம் | 20.10 |
| காஞ்சிபுரம் | வாணியம்பாடி | 14 | விச்சந்தாங்கல் | விவசாயிகள் பயிற்சி மையம் | 8.05 |
| திருப்பத்தூர் | வாணியம்பாடி | 15 | மின்னூர் | விவசாயிகள் பயிற்சி மையம் | 18.70 |
| திருவண்ணாமலை | திருவண்ணா–மலை | 16 | நாடானூர் | இளம்புழு வளர்ப்புப் பண்ணை | 1.88 |
| திருப்பத்தூர் | | 17 | புலியூர் | இளம்புழு வளர்ப்புப் பண்ணை | 7.99 |
| கடலூர் | விழுப்புரம் | 18 | நெய்வேலி | விவசாயிகள் பயிற்சி மையம் | 20.00 |
| திருச்சி | திருச்சி | 19 | உப்பிலியாபுரம் | செயல் விளக்கம் மற்றும் பயிற்சி மையம் | 15.30 |
| | | 20 | கலிங்கப்பட்டி | மாதிரி மல்பெரி பட்டுப் பண்ணை | 5.00 |
| | | 21 | கருக்கமடை | மாதிரி மல்பெரி பட்டுப் பண்ணை | 2.16 |
| | | 22 | பச்சைமலை | கலப்பின பட்டுப் பண்ணை | 8.45 |

| மாவட்டம் | உதவி இயக்குநர் | வ. எண். | அரசு பட்டுப் பண்ணையின் பெயர் | | மொத்த பரப்பு (ஏக்கர்) |
|---|---|---|---|---|---|
| | | 23 | மணிகண்டம் | விவசாயிகள் பயிற்சி மையம் | 10.00 |
| தஞ்சாவூர் | | 24 | நாஞ்சிக்– கோட்டை | விவசாயிகள் பயிற்சி மையம் | 4.65 |
| திண்டுக்கல் | திண்டுக்கல் | 25 | சி.கே.புதூர் | மாதிரி மல்பெரி பட்டுப் பண்ணை | 4.93 |
| சிவகங்கை | | 26 | குன்றக்குடி | மாதிரி மல்பெரி பட்டுப் பண்ணை | 0.50 |
| | | 27 | ஓ.புதூர் | செயல் விளக்கம் மற்றும் பயிற்சி மையம் | 10.00 |
| இராமநாதபுரம் | தேனி | 28 | பாண்டியூர் | செயல் விளக்கம் மற்றும் பயிற்சி மையம் | 4.36 |
| திருநெல் வேலி | தென்காசி | 29 | திருநெல்வேலி (இருப்பு) வி.எம்.சத்திரம் | செயல் விளக்கம் மற்றும் பயிற்சி மையம் | 1.88 |
| விருதுநகர் | | 30 | திருவில்லி– புத்தூர் | விவசாயிகள் பயிற்சி மையம் | 10.15 |
| | | 31 | செவலூர் | மாதிரி மல்பெரி பட்டுப் பண்ணை | 12.00 |

| மாவட்டம் | உதவி இயக்குநர் | வ. எண். | அரசு பட்டுப் பண்ணையின் பெயர் | | மொத்த பரப்பு (ஏக்கர்) |
|---|---|---|---|---|---|
| கன்னியாகுமரி | | 32 | நாகர்கோவில்/ கோணம் | செயல் விளக்கம் மற்றும் பயிற்சி மையம் | 3.10 |
| | | | | **மொத்தம்** | **272.47** |

### 8.5.1 இளம்புழு வளர்ப்பு மையங்கள்

பட்டு முட்டை பொரித்தது முதல், இரண்டாம் தோலுரிப்பு வரையிலான 7 நாட்கள் புழுவளர்ப்பு, 'இளம்புழு வளர்ப்பு' என்றழைக்கப்படுகிறது. இளம்புழு வளர்ப்பு செய்து அவற்றை விவசாயிகளுக்கு விநியோகம் செய்யும் மையங்கள் '**இளம்புழு வளர்ப்பு மையங்கள்**' என்று அழைக்கப்படுகின்றன.

சுகாதாரம் பேணுவதிலும், தேவையான தட்ப–வெப்ப நிலைகளைப் பராமரிப்பதிலும், தரமான மல்பெரி இலைகளை உணவாக அளிப்பதிலும் இளம்புழு வளர்ப்பிற்கு சிறப்பான கவனிப்பு தேவைப்படுகிறது. பிரத்யேக உரப் பரிந்துரை மற்றும் கவாத்து அட்டவணை அடிப்படையில் மல்பெரித் தோட்டம் மற்றும் தனி புழுவளர்ப்பு மனை பராமரிக்கப்பட்டு, புழுவளர்ப்பு காலத்தில் இளம்புழு வளர்ப்பு மையங்களில் அதீத கவனம் செலுத்தப்படுகிறது.

மாநிலத்தில் வெற்றிகரமான இருசூழற்சியின பட்டு வளர்ப்பிற்கு முக்கிய காரணியாக இளம்புழு வளர்ப்பு முறை திகழ்கிறது. 2020–2021 ஆம் ஆண்டில் 86 சதவீத பட்டு முட்டைகள் இளம்புழுக்களாக விநியோகிக்கப்பட்டுள்ளன.

இளம்புழு வளர்ப்பு மையங்களிலிருந்து இளம்புழுக்களை பெற்று வளர்ப்பதால், பட்டு விவசாயிகளுக்கு புழுவளர்ப்பு காலத்தில் 7 நாட்கள் சேமிக்கப்படுவதுடன், பட்டுக்கூடு உற்பத்தி மற்றும் வருமானம் அதிகரிக்க உதவுகிறது.

பட்டு விவசாயிகளுக்குத் தேவைப்படும் தரமான இளம்புழுக்களை விநியோகம் செய்திட பிரத்யேகமாக நான்கு அரசு பட்டுப் பண்ணைகள் செயல்பட்டு வருகின்றன. மேலும், 16 அரசு பட்டுப் பண்ணைகள் மூலம் இளம்புழு வளர்ப்பு செய்து விநியோகிக்கப்பட்டு வருகிறது.

இது தவிர 33 தனியார் இளம்புழு வளர்ப்பு மையங்கள் மாநிலத்தில் செயல்பட்டு வருகின்றன. இந்த இளம்புழு வளர்ப்பு மையங்கள் ஆண்டொன்றிற்கு 90.96 இலட்சம் பட்டு முட்டைகளை இளம்புழுக்களாக வளர்ப்பு செய்யும் திறன் கொண்டவை ஆகும்.

### 8.6 அரசு விதைக்கூடு அங்காடிகள்

விவசாயிகள் மற்றும் அரசு ஆதார விதைப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படும் உள்நாட்டின

மற்றும் கலப்பின விதைக் கூடுகள் அரசு விதைக்கூடு அங்காடிகளில் வர்த்தகம் செய்யப்பட்டு தரமான விதை உற்பத்திக்காக வித்தகங்களுக்கு வழங்கப்படுகிறது.

விதைக்கூடுகள் விற்பனைக்கென மூன்று விதைக்கூடு அங்காடிகள் ஒசூர், தேன்கனிக்கோட்டை மற்றும் கோயம்புத்தூரில் செயல்பட்டு வருகின்றன.

**அரசு விதைக்கூடு அங்காடிகள்**

| மாவட்டம் | உதவி இயக்குநர் | வ. எண் | அரசு பட்டுக்கூடு அங்காடியின் பெயர் | |
|---|---|---|---|---|
| கிருஷ்ணகிரி | ஆவலப்பள்ளி | 1 | ஓசூர் | விதை |
| | தேன்கனிக்–கோட்டை | 2 | தேன்கனிக்–கோட்டை | விதை |
| கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் | 3 | கோயம்புத்தூர் | விதை |

விதைக்கூடுகளின் விற்பனை மதிப்பில் தலா 0.75 சதவீதம் சேவைக் கட்டணமாக விற்போர் மற்றும் வாங்குவோரிடம் இருந்து வசூலிக்கப்படுகிறது.

## 8.7 அரசு பட்டுக்கூடு அங்காடிகள்

விவசாயிகளால் எடுத்துவரப்படும் பட்டுக் கூடுகள், அரசு பட்டுக்கூடு அங்காடிகள் மூலமாக பட்டு நூற்பாளர்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது. அரசு பட்டுக்கூடு அங்காடிகள், ஒழுங்குபடுத்தப்பட்ட சந்தையாக செயல்பட்டு, விவசாயிகள் தங்களது உற்பத்திப் பொருளை சந்தைப்படுத்துவதற்கான வசதிகளை வழங்குகிறது.

பட்டுக்கூடு வாங்குவோர் (நூற்பாளர்கள்) மற்றும் பட்டுக்கூடு விற்போர் (விவசாயிகள்) அடங்கிய ஒரு குழு பட்டுக்கூடுகளின் தரத்திற்கேற்ப ஏலத்திற்கான குறைந்தபட்ச விலையினை தினசரி நிர்ணயம் செய்ய உதவுகிறது. வெளிப்படையான பட்டுக்கூடு ஏல நடவடிக்கைகளில் பட்டு நூற்பாளர்கள் பங்கேற்று பட்டுக்கூடுகளை கொள்முதல் செய்திட அங்காடிப் பணியாளர்கள் உதவுகின்றனர்.

மாநிலம் முழுவதும் பல்வேறு மாவட்டங்களில் 20 பட்டுக்கூடு அங்காடிகள் உள்ளன.

**அரசு பட்டுக்கூடு அங்காடிகள்**

| மாவட்டம் | உதவி இயக்குநர் | வ. எண் | அரசு பட்டுக்கூடு அங்காடியின் பெயர் |
|---|---|---|---|
| கிருஷ்ணகிரி | ஓசூர் | 1 | ஓசூர் |
| | கிருஷ்ணகிரி | 2 | கிருஷ்ணகிரி |
| தருமபுரி | பென்னாகரம் | 3 | பென்னாகரம், பாலக்கோடு |
| | தருமபுரி | 4 | தருமபுரி |
| சேலம் | சேலம் | 5 | சேலம் |
| கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் | 6 | கோயம்புத்தூர் |
| ஈரோடு | தாளவாடி | 7 | தாளவாடி |
| | ஈரோடு | 8 | ஈரோடு |
| திருப்பூர் | உடுமலைப்-பேட்டை | 9 | மைவாடி |
| திருப்பத்தூர் | வாணியம்பாடி | 10 | வாணியம்பாடி |
| திருவண்ணா-மலை | திருவண்ணா-மலை | 11 | திருவண்ணாமலை |
| திருச்சி | திருச்சி | 12 | திருச்சி |
| புதுக்கோட்டை | | 13 | புதுக்கோட்டை |

| மாவட்டம் | உதவி இயக்குநர் | வ. எண் | அரசு பட்டுக்கூடு அங்காடியின் பெயர் |
|---|---|---|---|
| திண்டுக்கல் | திண்டுக்கல் | 14 | திண்டுக்கல் |
| | | 15 | பழனி (இருப்பு) சி.கே.புதூர் |
| சிவகங்கை | | 16 | சிவகங்கை |
| தேனி | தேனி | 17 | தேனி |
| தென்காசி | தென்காசி | 18 | நன்னகரம் |
| விருதுநகர் | | 19 | திருவில்லிபுத்தூர் |
| கன்னியாகுமரி | | 20 | நாகர்கோவில் |

பட்டுக்கூடுகளின் விற்பனை மதிப்பில் தலா 0.75 சதவீதம் சேவைக் கட்டணமாக விற்போர் மற்றும் வாங்குவோரிடம் இருந்து வசூலிக்கப்படுகிறது.

இந்த 20 பட்டுக்கூடு அங்காடிகளில் புதுக்கோட்டை, சிவகங்கை மற்றும் நாகர்கோவில் ஆகிய மூன்று அரசு பட்டுக்கூடு அங்காடிகள், பட்டு நூற்பு அலகுகளுடன் செயல்பட்டு வருகிறது. இப்பட்டுக்கூடு அங்காடிகளில் தனியார் பட்டு நூற்பாளர்களின் பங்கேற்பு இல்லாத நாட்களில், பட்டு விவசாயிகளின் நன்மையை கருத்தில் கொண்டு, அரசு பட்டு நூற்பகங்களுக்கு பட்டுக்கூடுகள் கொள்முதல் செய்யப்படுகிறது.

### 8.8 அரசு பட்டு நூற்பு / முறுக்கேற்றும் அலகுகள்

பட்டுத் தொழிலின் முக்கிய பிரிவான பட்டுக் கூடுகளுக்கு பிந்தைய பிரிவிற்கு துணை புரிவதற்காக, அரசு பலமுனை பட்டு நூற்பு அலகுகள், பட்டு நூற்பு மற்றும்

பட்டு முறுக்கேற்றும் தொழில் முனைவோர்களுக்கான மாதிரி அலகுகளாக செயல்பட்டு வருகின்றன.

அரசு பட்டு நூற்பகங்கள், பட்டுக்கூடு அங்காடி ஏலத்தில் பங்கேற்று பட்டு விவசாயிகளது உற்பத்திப் பொருளான பட்டுக்கூடுகளுக்கு நியாயமான விலை கிடைக்க உதவுகின்றன.

இத்துறையின் கீழ் ஆண்டொன்றிற்கு 24 மெட்ரிக் டன் கச்சாப் பட்டு நூலை உற்பத்தி செய்யும் திறன் கொண்ட எட்டு அரசு பட்டு நூற்பு அலகுகள் செயல்பட்டு வருகின்றன.

**அரசு பட்டு நூற்பு அலகுகள்**

| வ. எண் | மாவட்டம் | இடம் |
|---|---|---|
| 1 | கிருஷ்ணகிரி | ஓசூர் |
| 2 | சேலம் | சேலம் |
| 3 | ஈரோடு | தாளவாடி |
| 4 | திருப்பத்தூர் | வாணியம்பாடி |
| 5 | தென்காசி | நன்னகரம் |
| 6 | கன்னியாகுமரி | கோணம் |
| 7 | சிவகங்கை | சிவகங்கை |
| 8 | புதுக்கோட்டை | புதுக்கோட்டை |

மேற்கண்ட 8 பட்டு நூற்பு அலகுகளில், ஓசூர், சேலம், தாளவாடி மற்றும் நன்னகரம் ஆகிய இடங்களில் உள்ள பட்டு நூற்பு அலகுகள், பட்டு முறுக்கேற்றும் அலகுகளுடன் செயல்பட்டு வருகின்றன. இங்கு

கச்சாப்பட்டு நூல் முறுக்கேற்றிய பட்டு நூலாக மாற்றப்படுகிறது.

### 8.9 தனியார் பட்டு நூற்பகங்கள்

அரசு பட்டு நூற்பகங்கள் தவிர, தமிழ்நாட்டில் 94 காட்டேஜ் பேசின் பட்டுநூற்பு அலகுகள், 60 பலமுனை பட்டு நூற்பு அலகுகள், 28 சர்க்கா நூற்பு அலகுகள் மற்றும் 8 தானியங்கி பட்டு நூற்பு அலகுகள் ஆகியன தனியார் பட்டு நூற்புத் தொழில் முனைவோரால் இயக்கப்பட்டு வருகின்றன. இந்த தனியார் பட்டு நூற்பு அலகுகள், ஆண்டொன்றிற்கு 619.00 மெட்ரிக் டன் கச்சாப் பட்டு நூலினை உற்பத்தி செய்யும் திறன் கொண்டவையாகும்.

தரம் குறைவான பட்டுக்கூடுகளை நம் மாநிலத்திலேயே பயன்படுத்திக் கொள்ளும் வகையில் ஒரு தானியங்கி டூபியான் பட்டுநூற்பு இயந்திரம் நிறுவப்பட்டுள்ளது. இந்த தானியங்கி டூபியான் பட்டு நூற்பு இயந்திரம் ஆண்டொண்டிற்கு 19.00 மெட்ரிக் டன் டூபியான் பட்டு நூல் உற்பத்தி செய்யும் திறன் கொண்டது.

இத்துறையால் தனியார் பட்டு நூற்பு பிரிவிற்கு, பலவகையான ஆதரவுகள் வழங்கப்பட்டு வருகிறது. பட்டு விவசாயிகள் நியாயமான விலை பெற்றிடும் வகையில், உள்நாட்டில் உற்பத்தியாகும் பட்டுக்கூடுகள் முழுமையாக பயன்படுத்தப்பட, அதிக எண்ணிக்கையிலான பட்டு நூற்பு அலகுகளை நிறுவிட, தொழில்முனைவோர்கள்

முன்வரும் வகையில், பல்வேறு வழிகளில் ஊக்குவிக்கப்படுகின்றனர்.

2021–2022 ஆம் ஆண்டில் 400 முனைகள் கொண்ட ஐந்து தானியங்கி பட்டு நூற்பு இயந்திர அலகுகளும், 200 முனைகள் கொண்ட இரண்டு தானியங்கி பட்டு நூற்பு அலகுகளும், ஒரு பலமுனை பட்டு நூற்பு அலகும் நிறுவிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த பட்டு நூற்பு அலகுகள் ஆண்டொன்றுக்கு 205.00 மெட்ரிக் டன் கச்சாப்பட்டு நூலினை உற்பத்தி செய்யும் திறன் கொண்டவையாகும். மேலும், ஒரு தானியங்கி டூபியான் பட்டு நூற்பு இயந்திரம் நிறுவுவதற்கான பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தொழில் முனைவோர்களை பட்டு நூற்பு அலகுகள் நிறுவிட ஊக்குவித்து பட்டு நூற்பு பிரிவினை வலுப்படுத்துவதன் மூலம், தமிழகத்தில் உற்பத்தியாகும் பட்டுக் கூடுகளை முழுமையாக மாநிலத்திற்குள்ளாகவே பயன்படுத்திட இயலும்.

### 8.10 தமிழ்நாடு பட்டுவளர்ச்சி பயிற்சி நிலையம், ஓசூர்

பட்டுவளர்ச்சித் துறையின் களப்பணியாளர்களுக்கு புத்தாக்கப் பயிற்சியும் புதிய விவசாயிகள் மற்றும் பட்டு நூற்பாளர்களுக்கு பயிற்சியும் தொடர்ந்து வழங்கப்படுவதற்காக ஓசூரில் அனைத்து உட்கட்டமைப்பு

மற்றும் உறைவிட வசதிகளுடன் கூடிய ஒரு பயிற்சி நிலையத்தினை பட்டுவளர்ச்சித் துறை கொண்டுள்ளது.

'பட்டு மலர்' எனும் மாதாந்திர தொழில்நுட்ப இதழ் இப்பயிற்சி நிலையம் மூலம் அச்சிடப்பட்டு இதழ் ஒன்றிற்கு ரூ.2/– என்ற மானிய விலையில் பட்டு விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகிறது. பட்டுவளர்ச்சிக்கு உதவிடும் வகையில் காலத்திற்கேற்ப புதிய தொழில்நுட்பங்கள், மேம்பாடுகள் குறித்து பட்டு விவசாயிகள் அறிந்துகொள்ள இது துணை புரிகிறது.

**8.11 அரசு அண்ணா பட்டுப் பரிமாற்றகம், காஞ்சிபுரம்**

மாநிலத்தில் உள்ள பட்டு நூற்பாளர்களால் உற்பத்தி செய்யப்படும் கச்சாப்பட்டுநூல் காஞ்சிபுரத்தில் அமைந்துள்ள அரசு அண்ணா பட்டுப் பரிமாற்றகம் மூலம் கச்சாப்பட்டு நுகர்வோர்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது. அரசு அண்ணா பட்டுப் பரிமாற்றகம் ஒழுங்குபடுத்தப்பட்ட சந்தையாக செயல்பட்டு, பட்டு நூற்பாளர்கள் தங்களது உற்பத்திப்பொருளை சந்தைப்படுத்துவதற்கான வசதிகளை வழங்குகிறது.

இப்பட்டுப் பரிமாற்றகத்திற்கு விற்பனைக்காக எடுத்து வரப்படும் கச்சாப்பட்டுநூல் காஞ்சிபுரம், மண்டல பட்டு தொழில்நுட்ப ஆராய்ச்சி நிலையத்தால் தரப்பரிசோதனை செய்யப்படுகிறது.

சேலம் மற்றும் அதன் சுற்று வட்டாரத்திலுள்ள பட்டு நூற்பாளர்கள் மற்றும் முறுக்கேற்றுவோரின் வசதிக்காக அரசு அண்ணா பட்டுப் பரிமாற்றகத்தின் கிளை ஒன்று சேலத்திலும் செயல்பட்டு வருகிறது. இங்கு விற்பனைக்காக எடுத்துவரப்படும் கச்சாப்பட்டுநூல் சேலம், பட்டு பரிசோதனை சேவை மையத்தில் தரப்பரிசோதனை செய்யப்படுகிறது.

பட்டின் தரம் மற்றும் கச்சாப்பட்டு நூலுக்கு நிலவும் சந்தை விலைக்கேற்ப அடிப்படை விலை நிர்ணயம் செய்யப்பட்டு கச்சாப்பட்டுநூல் ஏலம் விடப்படுகிறது. பெருநெசவாளர்கள், முறுக்காளர்கள் மற்றும் 'டான்சில்க்' போன்றோர், வெளிப்படையான ஏலத்தில் பங்கேற்று பட்டுநூலினை கொள்முதல் செய்கின்றனர். பட்டுநூலுக்கான விற்பனைத் தொகை பட்டு நூற்பாளர்களுக்கு உடனடியாக மின்னணு தீர்வுச் சேவை மூலம் வழங்கப்படுகிறது.

### 8.12 கூட்டுறவுச் சங்கங்கள்

பட்டுவளர்ச்சித் துறையின் கீழ் 25 தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படுகின்றன. 'தமிழ்நாடு கூட்டுறவு பட்டு உற்பத்தியாளர் இணையம்' (டான்சில்க்) தலைமைக் கூட்டுறவு இணையமாக செயல்படுகிறது.

### 8.12.1 தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்

பட்டுத் தொழிலுக்கு தேவைப்படக் கூடிய இடுபொருட்களை உறுப்பினர்களுக்கு வழங்குவது, மூலப்பொருட்களை ஆயத்தப் பொருட்களாக மாற்றுவதற்காக உறுப்பினர்களுக்கு வழங்குவது, ஆயத்தப் பொருட்களை உறுப்பினர்களிடமிருந்து பெற்று அவற்றை நல்ல விலைக்கு விற்பனை செய்வதன் மூலம் சங்க உறுப்பினர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்து, அவர்களின் பொருளாதார நிலையை மேம்படுத்துவது போன்றவை, இந்த தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் செயல்பாடுகளாகும்.

### 8.12.2 தமிழ்நாடு கூட்டுறவு பட்டு உற்பத்தியாளர் இணையம் (டான்சில்க்), காஞ்சிபுரம்

தமிழ்நாடு கூட்டுறவு பட்டு உற்பத்தியாளர் இணையம் (டான்சில்க்), தமிழ்நாட்டிலுள்ள பட்டு கூட்டுறவுச் சங்கங்களின் தலைமைக் கூட்டுறவு இணையமாக, பதிவு செய்யப்பட்டு, காஞ்சிபுரத்தில் இயங்கி வருகிறது. இதன் கிளைகள் ஆரணி, கோயம்புத்தூர், ஈரோடு, காஞ்சிபுரம், கும்பகோணம் மற்றும் சேலம் ஆகிய ஆறு இடங்களில் அமைந்துள்ளன. பட்டு நூற்பாளர்கள், முறுக்காளர்கள், பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் சர்வோதய சங்கங்கள் இதன் உறுப்பினர்களாக உள்ளனர். அரசு அண்ணா பட்டு பரிமாற்றகத்திலிருந்து இவ்விணையம் பெருமளவு பட்டினை கொள்முதல்

செய்து, தனது உறுப்பினர்களுக்கு விநியோகித்து வருகிறது.

பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம் மற்றும் சர்வோதய சங்கங்கள் போன்ற சான்றளிக்கப்பட்ட நிறுவனங்கள் 'டான்சில்க்' இணையத்திலிருந்து முறுக்கேற்றிய பட்டினை கொள்முதல் செய்கின்றன. முறுக்கேற்றிய பட்டு நூல் நெசவு செய்யப்பட்டு சேலை, வேட்டி மற்றும் இதர பட்டுப் பொருட்களாக விற்பனை செய்யப்படுகின்றன.

## 9. கச்சாப்பட்டு உற்பத்தி

2020–2021ஆம் ஆண்டின் மொத்த உற்பத்தியான 1,834 மெட்ரிக் டன் பட்டில், வெண்பட்டு 1,754 மெட்ரிக் டன் ஆகும். வெண்பட்டு உற்பத்தியினைப் பொறுத்தமட்டில் **தேசிய அளவில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக இருந்து வருகிறது**.

பட்டு நூலின் சராசரி விலை கிலோ ஒன்றுக்கு ரூ.2569/– என்ற அடிப்படையில் உற்பத்தி செய்யப்பட்ட பட்டு நூலின் மதிப்பு 471.00 கோடி ரூபாய் ஆகும்.

## 10. பயிர்க் காப்பீடு

பட்டுக்கூடு உற்பத்தியில் ஏற்படும் இழப்பினை ஈடுகட்டவும், பட்டு வளர்ப்பில் விவசாயிகள் ஈடுபடுவதை ஊக்குவிக்கவும் பயிர் காப்பீடு திட்டம் செயல்படுத்தப்பட்டு

வருகிறது. பட்டு விவசாயிகளுக்கு 100 சதவீத பயிர் காப்பீட்டு பிரிமியத் தொகை அரசால் வழங்கப்பட்டு வருகிறது.

தற்போதைய காப்பீட்டு காலம் 29 நவம்பர், 2020 முதல் 28 நவம்பர், 2021 வரை உள்ளது. இத்திட்டத்தின் கீழ் ஏப்ரல் திங்கள் முதல் நாளின்படி உள்ள அனைத்து விவசாயிகளும் பயனடையும் வகையில், 100 முட்டைத் தொகுதிகளுக்கு ரூ.136/- வீதம் பயிர் காப்பீட்டிற்கான ஆண்டு சந்தா செலுத்தப்பட்டுள்ளது.

பட்டு விவசாயிகளுக்கு, பட்டுப்புழு பாதிக்கப்பட்ட பருவத்தின் அடிப்படையில் காப்பீட்டு நிறுவனம் மூலம், இழப்பீட்டுத் தொகை வழங்கப்படுகிறது. பட்டு விவசாயிகளின் புழுவளர்ப்பு குடில் சேதம் மற்றும் தனி நபர் விபத்துக்கான காப்பீடும் இத்திட்டத்தில் அடங்கும்.

## 11. 2020-2021 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டங்கள்

### 11.1 மாநிலத் திட்டம்

ஒன்றிய அரசின், ஜவுளி அமைச்சகம் 'கிரியா ஊக்கித் திட்டத்தின்' கீழ் வழங்கி வந்த நிதி உதவியில் குறிப்பிட்ட சில திட்டங்களுக்கான நிதியுதவியை 2015-2016-ஆம் ஆண்டு முதல் நிறுத்திவிட்டது. இருப்பினும், பட்டு விவசாயிகளின் நலனை பாதுகாக்கும்

வகையில் முக்கிய திட்டங்களை செயல்படுத்திட ஒன்றிய அரசின் பங்கினையும் சேர்த்து மாநில அரசு தொடர்ந்து வழங்கி வருகிறது. 2020–2021–ஆம் ஆண்டிற்கு 18.4435 கோடி ரூபாய் நிதி மாநிலத் திட்டத்தின் கீழ் பின்வருமாறு ஒப்பளிப்பு செய்துள்ளது:

## மாநிலத் திட்டம் 2020–2021

| வ. எண் | திட்டத்தின் பெயர் | இயல்பு (ஏக்கர்/ எண்) | அலகு மதிப்பீடு (ரூபாய்) | நிதி பங்கீடு (ரூபாய் இலட்சத்தில்) | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | மாநில பங்கு | பயனாளி பங்கு | மொத்த தொகை |
| 1 | உயர் விளைச்சல் தரும் மல்பெரி இரகங்கள் நடவு செய்ய ஊக்கத் தொகை வழங்குதல் | 3500.00 | 14000 | 367.50 | 122.50 | 490.00 |
| 2 | மல்பெரித் தோட்டங்களில் சொட்டு நீர்ப்பாசனம் அமைத்தல் | 1000.00 | 33600 | 250.00 | 0 | 250.00 |
| 3 | நவீன புழுவளர்ப்புத் தளவாடங்கள்/ பண்ணை உபகரணங்கள் கொள்முதல் செய்து வழங்குதல் | 1000 | 70000 | 525.00 | 175.00 | 700.00 |
| 4 | தனி பட்டுப்புழு வளர்ப்புக் குடில் கட்ட உதவியளித்தல் | | | | | |
| அ | நிலை–I (1500 ச.அடி மேல்) | 50 | 275000 | 41.25 | 96.25 | 137.50 |
| ஆ | நிலை–II (1000–1500 ச.அடி) | 550 | 175000 | 481.25 | 481.25 | 962.50 |
| இ | நிலை–III (700–1000 ச.அடி) | 200 | 90000 | 126.00 | 54.00 | 180.00 |
| 5 | மாநில மற்றும் மாவட்ட அளவில் சிறந்த பட்டு விவசாயிகளுக்கு பரிசுத் தொகை வழங்குதல் | 111 | – | 23.85 | 0 | 23.85 |

| வ. எண் | திட்டத்தின் பெயர் | இயல்பு (ஏக்கர்/ எண்) | அலகு மதிப்பீடு (ரூபாய்) | நிதி பங்கீடு (ரூபாய் இலட்சத்தில்) | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | மாநில பங்கு | பயனாளி பங்கு | மொத்த தொகை |
| 6 | அரசு விதைப் பண்ணைகளை வலுப்படுத்த உதவியளித்தல். | 5 | 500000 | 25.00 | 0 | 25.00 |
| 7 | மாநில அளவில் சிறந்த பட்டு நூற்பாளர்களுக்கு பரிசு வழங்குதல் | 6 | – | 4.50 | 0 | 4.50 |
| | | | **மொத்தம்** | **1844.35** | **929.00** | **2773.35** |

- **பரிசுகளும் வெகுமதிகளும்**

மாவட்ட அளவில், ஒவ்வொரு ஆண்டும் சிறந்த பட்டு விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் மூன்று சிறந்த பட்டு விவசாயிகளுக்கு முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது ரொக்கப் பரிசுகளாக முறையே ரூ.25,000/–, ரூ.20,000/– மற்றும் ரூ.15,000/– வழங்கப்படுகிறது.

மாநில அளவில் மூன்று சிறந்த பட்டு விவசாயிகளுக்கு முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது ரொக்கப் பரிசுகளாக முறையே ரூ.1,00,000/–, ரூ.75,000/– மற்றும் ரூ.50,000/– ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படுகிறது.

மேலும், மூன்று சிறந்த பலமுனை பட்டு நூற்பாளர்கள் மற்றும் மூன்று சிறந்த தானியங்கி பட்டு நூற்பாளர்களுக்கு முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது ரொக்கப்

பரிசுகளாக முறையே ரூ.1,00,000/-, ரூ.75,000/- மற்றும் ரூ.50,000/- வழங்கப்படுகிறது.

## 11.2 பட்டுவளர்ச்சி மேம்பாடு மற்றும் விலை உறுதிப்படுத்தும் நிதி

2020-2021-ஆம் ஆண்டில் பட்டு வளர்ச்சி மேம்பாடு மற்றும் விலை உறுதிப்படுத்தும் நிதியின் கீழ் ரூ.167.397 இலட்சம், துறையின் வளர்ச்சிப் பணிகளுக்காக கீழ்க்கண்டவாறு ஒப்பளிப்பு செய்யப்பட்டது.

**பட்டுவளர்ச்சி மேம்பாடு மற்றும் விலை உறுதிப்படுத்தும் நிதி 2020-2021**

| வ. எண் | பணிகள் | மொத்த ஒப்பளிப்பு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | 'பட்டு மலர்' மாத இதழ் 2020-2021 ஆம் ஆண்டில் அச்சிட்டு வழங்குதல் | 14.760 |
| 2 | பயிர்க்காப்பீட்டுத் திட்டம் | 52.510 |
| 3 | பிஎஸ்என்எல் சிம் கார்டுக்கான ஆண்டு சந்தா செலுத்துதல் | 2.010 |
| 4 | கணினி, அச்சுப்பொறி, யூபிஎஸ், ஒளிநகல் மற்றும் ஸ்கேனர் கொள்முதல் செய்தல் | 6.420 |
| 5 | அலுவலகங்கள் மற்றும் அலகுகளுக்கு தேவையான உபகரணங்கள் கொள்முதல் செய்தல் | 39.895 |
| 6 | அரசு கட்டடங்களில் புனரமைப்பு மற்றும் மின்பழுது சரிபார்ப்பு பணிகள் மேற்கொள்ளுதல் | |
| அ | அரசு பட்டு நூற்பக கட்டடம் புனரமைப்பு | 5.100 |
| ஆ | அரசு வித்தகம், பட்டு நூற்பகம் மற்றும் அலுவலக மின்பழுது சரிபார்ப்பு | 9.950 |

| வ. எண் | பணிகள் | மொத்த ஒப்பளிப்பு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| இ | அரசு வித்தகத்தில் குளிர்பதன அலகு புனரமைப்பு | 2.548 |
| 7 | தானியங்கி பட்டு நூற்பகங்களில் உற்பத்தி செய்யப்படும் தரமான வெண்பட்டு நூலுக்கு ஊக்கத்தொகை வழங்குதல் | 15.000 |
| 8 | பலமுனை பட்டு நூற்பகங்களில் உற்பத்தி செய்யப்படும் தரமான வெண்பட்டு நூலுக்கு ஊக்கத்தொகை வழங்குதல் | 8.004 |
| 9 | பட்டு நூற்பாளர்கள் மற்றும் பட்டு முறுக்கேற்றாளர்களுக்கு நடைமுறை மூலதனக் கடனுக்கான வட்டி மானியம் | 11.200 |
| | **மொத்தம்** | **167.397** |

## 11.3 மத்திய பகுதித் திட்டம், 'சில்க் சமக்ரா'

கிரியா ஊக்கித் திட்ட மறு சீரமைப்புக்குப் பின், மத்திய பட்டு வாரியம், ஒரு சில உட்கூறு இனங்களுக்கு மட்டும் நிதியுதவி அங்கீகரித்து 2020–2021–ஆம் ஆண்டிற்கு கீழ்கண்டுள்ளவாறு ரூ.1437.516 இலட்சம் மத்திய பகுதித் திட்டமான 'சில்க் சமக்ரா' திட்டத்தின் கீழ் நிதி பெறப்பட்டுள்ளது.

## மத்திய பகுதித் திட்டம் – 2020–2021

| வ. எண் | திட்டத்தின் பெயர் / உட்கூறு | இயல்பு (எண்ணிக்கை / ஏக்கர்) | அலகு மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) | நிதி ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்) | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மத்திய பட்டு வாரியம் | மாநில அரசு | பயனாளி பங்கு | மொத்தம் |
| | **முதல் தவணை** | | | | | | |
| **அ** | **ஒரு மாவட்டம் ஒரு பொருள் திட்டம் – புதுக்கோட்டை மாவட்டம்** | | | | | | |
| 1 | பட்டியலினத்தோருக்கான துணைத் திட்டம் | | | 23.270 | | | 23.270 |
| 2 | பொது | | | 165.725 | | | 165.725 |
| | **உப கூடுதல் (அ)** | | | 188.995 | | | 188.995 |
| **ஆ** | **ஒரு மாவட்டம் ஒரு பொருள் திட்டம் – தேனி மாவட்டம்** | | | | | | |
| 3 | பட்டியலினத்தோருக்கான துணைத் திட்டம் | | | 234.843 | | | 234.843 |
| 4 | பொது | | | 626.375 | | | 626.375 |
| | **உப கூடுதல் (ஆ)** | | | 861.218 | | | 861.218 |
| | **கூடுதல் (அ+ஆ)** | | | 1050.213 | | | 1050.213 |
| | **வழக்கமான திட்டம்** | | | | | | |
| **இ** | **பட்டியலினத்தோருக்கான துணைத் திட்டம் (65:25:10)** | | | | | | |
| 5 | கிசான் மல்பெரி நாற்றாங்கால் அமைக்க உதவியளித்தல் | 1.00 | 1.500 | 0.975 | 0.375 | 0.150 | 1.500 |
| 6 | உயர் விளைச்சல் தரும் மல்பெரி இரகங்கள் நடவு செய்ய ஊக்கத் தொகை வழங்குதல் | 20.00 | 0.500 | 6.500 | 2.500 | 1.000 | 10.000 |
| 7 | மல்பெரித் தோட்டங்களில் சொட்டு நீர்ப்பாசனம் அமைத்தல் (65:35) | 20.00 | 0.336 | 4.368 | 2.352 | 0 | 6.720 |

| வ. எண் | திட்டத்தின் பெயர் / உட்கூறு | இயல்பு (எண்ணிக்கை / ஏக்கர்) | அலகு மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) | நிதி ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்) | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மத்திய பட்டு வாரியம் | மாநில அரசு | பயனாளி பங்கு | மொத்தம் |
| 8 | நவீன புழுவளர்ப்பு தளவாடங்கள்/ பண்ணை உபகரணங்கள் கொள்முதல் செய்து வழங்குதல் | 20 | 0.750 | 9.750 | 3.750 | 1.500 | 15.000 |
| 9 | தனி பட்டுப்புழு வளர்ப்பு குடில் கட்ட உதவியளித்தல் | 20 | 3.000 | 39.000 | 15.000 | 6.000 | 60.000 |
| 10 | விவசாயிகளுக்கு பயிற்சி வழங்குதல் | 20 | 0.070 | 1.400 | 0 | 0 | 1.400 |
| 11 | ஈரி பட்டுப்புழு வளர்ப்பிற்கான ஆமணக்கு நடவு செய்ய ஊக்கத்தொகை வழங்குதல் **(0.50** ஏக்கர் அலகு) | 25 | 0.050 | 0.813 | 0.312 | 0.125 | 1.250 |
| 12 | ஈரி பட்டுப் புழுவளர்ப்புக் குடில் கட்ட உதவியளித்தல் | 50 | 1.000 | 32.500 | 12.500 | 5.000 | 50.000 |
| 13 | ஈரி பட்டுப்புழு வளர்ப்பிற்கான புழுவளர்ப்பு தளவாடங்கள்/ பண்ணை உபகரணங்கள் கொள்முதல் செய்து வழங்குதல் | 50 | 0.200 | 6.500 | 2.500 | 1.000 | 10.000 |

| வ. எண் | திட்டத்தின் பெயர் / உட்கூறு | இயல்பு (எண்ணிக்கை / ஏக்கர்) | அலகு மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) | நிதி ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்) | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மத்திய பட்டு வாரியம் | மாநில அரசு | பயனாளி பங்கு | மொத்தம் |
| 14 | ஈரி பட்டு விவசாயிகளுக்கு பயிற்சி வழங்குதல் | 50 | 0.0700 | 3.500 | 0 | 0 | 3.500 |
| 15 | தகவல் கல்வி மற்றும் தகவல் தொடர்பு | | ரொக்கமாக | 1.051 | 0 | 0 | 1.051 |
| **உப கூடுதல் (இ)** | | | | **106.357** | **39.290** | **14.775** | **160.421** |
| **ஈ** | **பழங்குடியினருக்கான துணைத் திட்டம் (65:25:10)** | | | | | | |
| 16 | ஈரி பட்டுப்புழு வளர்ப்பிற்கான ஆமணக்கு நடவு செய்ய ஊக்கத்தொகை வழங்குதல் (0.50 ஏக்கர் அலகு) | 25 | 0.085 | 1.381 | 0.531 | 0.213 | 2.125 |
| 17 | ஈரி பட்டுப் புழுவளர்ப்புக் குடில் கட்ட உதவியளித்தல் | 25 | 1.00 | 16.250 | 6.250 | 2.500 | 25.000 |
| 18 | ஈரி பட்டுப்புழு வளர்ப்பிற்கான புழுவளர்ப்பு தளவாடங்கள்/ பண்ணை உபகரணங்கள் கொள்முதல் செய்து வழங்குதல் | 25 | 0.200 | 3.250 | 1.250 | 0.500 | 5.000 |
| 19 | ஈரி பட்டு விவசாயிகளுக்கு பயிற்சி வழங்குதல் | 25 | 0.070 | 1.750 | 0 | 0 | 1.750 |

| வ. எண் | திட்டத்தின் பெயர் / உட்கூறு | இயல்பு (எண்ணிக்கை / ஏக்கர்) | அலகு மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) | நிதி ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்) | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மத்திய பட்டு வாரியம் | மாநில அரசு | பயனாளி பங்கு | மொத்தம் |
| 20 | தகவல் கல்வி மற்றும் தகவல் தொடர்பு | | ரொக்கமாக | 0.230 | | | 0.230 |
| **உப கூடுதல் (ஈ)** | | | | **22.861** | **8.031** | **3.212** | **34.105** |
| **கூடுதல் (இ+ஈ)** | | | | **129.218** | **47.321** | **17.987** | **194.526** |
| **மொத்தம் (முதல் தவணை)** | | | | **1179.430** | **47.321** | **17.987** | **1244.739** |
| **இரண்டாம் தவணை** | | | | | | | |
| **உ** | **பொது (50:25:25)** | | | | | | |
| 21 | மல்பெரித் தோட்டங்களில் சொட்டு நீர்ப்பாசனம் அமைத்தல் | 600.00 | 0.336 | 100.800 | 100.800 | 0 | 201.600 |
| 22 | இளம்புழு வளர்ப்பு மையம் அமைக்க உதவியளித்தல் | 5 | 12.000 | 30.000 | 15.000 | 15.000 | 60.000 |
| 23 | தரமான விதைக்கூடு உற்பத்தியினை மேம்படுத்த விதைக்கூடு வளர்க்கும் விவசாயிகளை வலுப்படுத்த உதவியளித்தல். | 10 | 1.000 | 5.000 | 2.500 | 2.500 | 10.000 |
| 24 | கோவை மற்றும் மைவாடி அரசு பட்டுக்கூடு அங்காடிகளில் பட்டுக்கூடு சோதனை மையம் நிறுவுதல் | 2 | 2.500 | 5.000 | 0 | 0 | 5.000 |
| **உப கூடுதல் (உ)** | | | | **140.800** | **118.300** | **17.500** | **276.600** |

| வ. எண் | திட்டத்தின் பெயர் / உட்கூறு | இயல்பு (எண்ணிக்கை / ஏக்கர்) | அலகு மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) | நிதி ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்) | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மத்திய பட்டு வாரியம் | மாநில அரசு | பயனாளி பங்கு | மொத்தம் |
| **ஊ** | **பட்டியலினத்தோருக்கான துணைத் திட்டம் (65:25:10)** | | | | | | |
| 25 | தானியங்கி பட்டு நூற்பு அலகு நிறுவுதல் (400 முனைகள்) | 1 | 122.072 | 79.347 | 30.518 | 12.207 | 122.072 |
| 26 | கூட்டுப்புழு பதப்படுத்தும் அலகு நிறுவுதல் | 1 | 19.670 | 12.785 | 4.918 | 1.967 | 19.670 |
| 27 | தானியங்கி டூபியான் பட்டு நூற்பு அலகு நிறுவுதல் (142 கதிர்கள்) | 1 | 38.700 | 25.153 | 9.674 | 3.870 | 38.697 |
| **உப கூடுதல் (ஊ)** | | | | **117.285** | **45.110** | **18.044** | **180.439** |
| **மொத்தம் (இரண்டாம் தவணை)** | | | | **258.085** | **163.410** | **35.544** | **457.039** |
| **நிகர மொத்தம் (முதல் + இரண்டாம் தவணை)** | | | | **1437.516** | **210.731** | **53.531** | **1701.778** |

## 12. பட்டுச் சுற்றுலா

ஏற்காடு அரசு பட்டுப் பண்ணையில் பட்டுச் சுற்றுலாத்தலம் அமைத்திட தமிழ்நாடு புதுமைத் திட்டத்தின் கீழ் ரூ.250.00 இலட்சம் மாநில அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. சுற்றுலா மேம்பாடு மற்றும் சுற்றுலாப் பயணிகளிடையே பட்டுத் தொழில் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துதல் என்ற இரட்டை குறிக்கோள்களுடன் இத்திட்டம் செயல்படுத்தப் பட்டுள்ளது. குழந்தைகளிடையே அறிவியல் அறிவைப்

பயிற்றுவிக்கும் குறிக்கோளினையும் இத்திட்டம் உள்ளடக்கியுள்ளது.இப்பட்டுச் சுற்றுலா மையத்திற்கு 'பட்டு உலகம்' என பெயரிடப்பட்டுள்ளது.

ஏற்காட்டில் தோற்றுவிக்கப்பட்டுள்ள இப்பட்டுச் சுற்றுலா மையம், சுற்றுலாப் பயணிகளுக்கு பட்டுத் தொழில் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தவும், ஒரு நல்ல பொழுதுபோக்கு இடமாகவும் திகழ்கிறது.


இப்பட்டுச் சுற்றுலா மையம் பட்டுத் தொழில் மேற்கொள்ள விரும்பும் விவசாயிகளுக்கும் பட்டு நூற்பு, பட்டு முறுக்கேற்றுதல் மற்றும் பட்டு நெசவு போன்ற தொழில்களில் ஈடுபட ஆர்வம் உள்ளோருக்கும் போதுமான தொழில்நுட்ப தகவல்களை அளிக்கிறது. இம்மையத்தில் நிறுவப்பட்டுள்ள அறிவியல் உபகரணங்கள், பட்டுத் தொழில் குறித்த அறிவை கற்பிப்பதால், அருகில் உள்ள பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களைக் கவரும் சுற்றுலாத்தலமாக இம்மையம் விளங்குகிறது.

### 13. பட்டுவளர்ச்சித் துறையின் சாதனைகள்

கடந்த ஆண்டுகளை விட மேம்பட்டு கீழ்க்கண்ட இனங்களில் **தேசிய அளவில் தமிழ்நாடு தொடர்ந்து முன்னிலை வகித்து வருகிறது**.

- 2020–2021ஆம் ஆண்டில் 100 முட்டைத் தொகுதிகளுக்கான தேசிய சராசரி பட்டுக்கூடு

உற்பத்தித் திறன் 66.820 **கிலோகிராமாக** உள்ள நிலையில், **மாநில சராசரி பட்டுக்கூடு உற்பத்தித் திறன் 80.000 கிலோகிராம்** ஆக உள்ளது.




**100 முட்டைத் தொகுதிகளுக்கு சராசரி பட்டுக்கூடு அறுவடை**

- 2020–2021ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் **மொத்த பட்டு உற்பத்தியில், வெண்பட்டு உற்பத்தி 96 சதவீதம்** ஆகும். 2019–2020 ஆம் ஆண்டின் வெண்பட்டு உற்பத்தி சதவீதமான 94 சதவீதத்தை விட இது கூடுதலாகும்.

- வெண்பட்டுக்கூடு உற்பத்தியினை அதிகரித்திட 28 கிராமங்களில் தொகுப்பு அபிவிருத்தித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2020–2021 ஆம் ஆண்டில், **தொகுப்பு அபிவிருத்தித் திட்டப் பகுதிகளில்** 100 நோயற்ற முட்டைத்

தொகுதிகளுக்கு **பட்டுக்கூடு உற்பத்தித் திறன் 82.000 கிலோ கிராம்** ஆகும்.

## 14. தமிழ்நாட்டில் பட்டுத் தொழில் அபிவிருத்திக்காக மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள்

### 14.1 பட்டுக்கூடுகளுக்கு முந்தைய நிலை

- தீவிர மல்பெரி சாகுபடியினை ஊக்குவித்தல்.
- சிறு, குறு விவசாயிகளுக்கு உதவியளித்தல்.
- பட்டு வளர்ச்சியில் விரிவாக்க அணுகுமுறை.
- அத்தியாவசிய உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல்.
- பிற தொடர்புடைய துறைகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுதல்.
- சந்தை நுண்ணறிவு, ஒருங்கிணைப்பு மற்றும் வளர்ச்சியை ஏற்படுத்துதல்.
- பட்டுத் தொழில் விரிவாக்க அமைப்புக்களை வலுப்படுத்துதல்.
- அங்கக வேளாண்மைக்கு முக்கியத்துவம் அளித்தல்.
- நோயற்ற பட்டு முட்டைத் தொகுதிகள் உற்பத்தி மற்றும் விநியோகம்.
- வித்தகங்கள் மற்றும் பயிற்சி நிலையத்திற்கு தரச்சான்று பெறுதல்.
- தொழில்நுட்ப மேம்பாடு.

- திறன் மேம்பாடு மற்றும் பயிற்சிக்கு முக்கியத்துவம் அளித்தல்.
- ஈரி பட்டுப்புழு வளர்ப்பை ஊக்கப்படுத்துதல்.

## 14.2 பட்டுக்கூடுகளுக்கு பிந்தைய நிலை

- தானியங்கி பட்டு நூற்பு அலகுகள் நிறுவுவதன் மூலம் இறக்குமதி பட்டுக்கு நிகரான தரமான வெண்பட்டுநூல் உற்பத்தியினை அதிகரித்தல்.
- தானியங்கி பட்டு நூற்பு அலகுகளையும் பலமுனை பட்டு நூற்பு அலகுகளையும் கூடுதலாக நிறுவுதல்.
- பட்டு முறுக்கேற்றும் அலகுகளை நிறுவுதல்.
- வருவாயினை பெருக்குவதற்காக பட்டு உபப்பொருட்களை (உலர்ந்த கூட்டுப்புழு) கோழி மற்றும் மீன் தீவனமாக பயன்படுத்துவதை ஊக்குவித்தல்.
- அதிக அளவில் பட்டு நூற்பு தொழிலாளர்களுக்கும், தொழில் முனைவோர்களுக்கும் பட்டு நூற்புப் பயிற்சி அளித்தல்.
- தரம், உற்பத்தித் திறன், உற்பத்திச் செலவினக் குறைப்பு மற்றும் பட்டுக் கழிவு மேலாண்மை ஆகியவற்றில் தொழில்முனைவோர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளித்தல்.

## 15. 2021–2022–ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு

பட்டுவளர்ச்சித் துறைக்கான 2021–2022–ஆம் ஆண்டு திருத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில், திட்டம் மற்றும் திட்டம் சாரா பணிகளுக்கென கீழ்க்கண்டுள்ளவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது:

| வ. எண் | திட்டத்தின் பெயர் | | 2021–2022 ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | **திட்டப் பணிகள்** | | |
| அ | 1. பட்டுவளர்ச்சி மேம்பாடு மற்றும் விலை உறுதிப்படுத்தும் நிதியின் கீழ் வளர்ச்சித் திட்டங்கள் | **100.00** | 250.00 |
| | 2. பட்டுவளர்ச்சி மேம்பாடு மற்றும் விலை உறுதிப்படுத்தும் நிதி (**கணக்குகள் இடையே மாற்றம்**) | **150.00** | |
| ஆ | புதிய திட்டங்கள் | | 1868.96 |
| இ | மேற்குத் தொடர்ச்சி மலைகள் அபிவிருத்தித் திட்டம் | | 0.01 |
| ஈ | சிறப்பு பகுதி மேம்பாட்டுத் திட்டம் | | 0.01 |
| | **திட்டப் பணிகள் மொத்தம்** | | **2118.98** |
| 2 | **திட்டம் சாரா பணிகள்** | | |
| | **அரசு அலகுகளைப் பராமரித்தல், ஊதியம் மற்றும் கூலித்தொகைகள் முதலியன** | | 5675.56 |
| | **ஒட்டு மொத்தம் (திட்டப் பணிகள் + திட்டம் சாரா பணிகள்)** | | **7794.54** |

## தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம்

**முன்னுரை**

**தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகமானது,** நிறுவனங்கள் சட்டம், 1956–இன் கீழ் பொதுத் துறை நிறுவனமாக 26.07.1973 அன்று முன்னாள் முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களால் தொடங்கப்பட்டு 01.08.1973 அன்று முதல் "பூம்புகார்" என்ற வணிகப் பெயரில் தனது வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது. தொழில் வணிகத் துறை மற்றும் தமிழ்நாடு மாநில கூட்டுறவு வர்த்தக சங்கங்களின் கீழ் இயங்கி வந்த கைத்திறப் பொருட்கள் விற்பனை நிலையங்களும், பல்வேறு பயிற்சி மற்றும் உற்பத்தி நிலையங்களும் இந்நிறுவனத்தின் கீழ் கொண்டு வரப்பட்டன.

**1. முக்கிய நோக்கங்கள்**

- தமிழ்நாடு கைவினைஞர்களின் வாழ்வாதாரம் மற்றும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல்.
- கைவினைஞர்களின் திறமையை மேம்படுத்த உரிய பயிற்சிகள் அளித்தல்.

- கைவினைஞர்களின் உற்பத்தித் திறனை மேம்படுத்துதல்.
- உற்பத்தி செய்யப்படும் கைவினைப் பொருட்களின் தரத்தை உயர்த்துதல்.
- கைவினைப் பொருட்கள் உற்பத்தியில் ஏற்படும் பணிப்பளுவை குறைத்தல்.
- கைத்திறத் தொழிலில் நேரிடும் இடர்பாடுகளைக் குறைத்தல் / நீக்குதல்.
- வடிவமைப்புகளில் புதுமையை ஊக்குவித்தல்.
- கைவினைஞர்களுக்கு சமூக பொருளாதார பாதுகாப்பு அளித்தல்.
- மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படும் கைவினைப் பொருட்களின் விவரங்களை ஆவணமாக்குதல் மற்றும் பதிவு செய்தல்.
- கைவினைஞர்களுக்கு சந்தை வாய்ப்பினை ஏற்படுத்துதல்.
- கைத்திறத் தொழிலில் கைவினைஞர்களின் கலைப்படைப்பு மற்றும் அர்ப்பணிப்பை அங்கீகரித்தல்.

## 2. நிலையான வளர்ச்சி இலட்சியங்கள் (Sustainable Development Goals)

நிலையான வளர்ச்சி இலக்கு என்பது ஐக்கிய நாடுகளின் உறுப்பினர்களாக உள்ள அனைத்து நாடுகளும், நாட்டின் சிறந்த எதிர்காலத்திற்காக செயல்பட ஒப்புக்கொண்ட 17 வழிகாட்டி இலக்குகளின் தொகுப்பாகும்.

தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சி கழகம் குறுகிய மற்றும் நீண்ட கால நிலையான வளர்ச்சி இலக்குகளைக் கொண்டுள்ளது. இந்நிறுவனத்தின் முக்கிய குறிக்கோளானது கைவினைஞர்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்துவதும், வடிவமைப்பு மற்றும் ஆராய்ச்சி மூலம் நவீன தொழில் நுட்பம் மற்றும் பயிற்சிகளின் துணை கொண்டு உற்பத்தித் திறனை மேம்படுத்துவதும் ஆகும். இந்நிறுவனம், விற்பனை நிலையங்கள் மற்றும் கண்காட்சிகள் நடத்துவதன் மூலம் கைவினைப் பொருட்களை விற்பனை செய்து வருவதால், கைவினைஞர்களின் வாழ்வாதாரத்திற்கு வழிவகை செய்கிறது.

நிலையான வளர்ச்சியின் முக்கிய குறிக்கோள்களை பூம்புகார் நிறுவனம் இலக்குகளாக கொண்டுள்ளது:–

**இலக்கு எண்.1 – வறுமையின்மை**

நிலையான வளர்ச்சி இலட்சியங்கள் அடிப்படையில் மக்களின் வறுமையை போக்குவதே தலையான நோக்கம்மாகும்.

**1.1 அனைத்து மக்களின் வறுமையை ஒழித்தல்**

கைவினைஞர்கள் புதிய வடிவமைப்புகளை தயாரிக்கவும் மற்றும் தற்கால சூழ்நிலைக்கேற்ற தொழில் நுட்பத்திறனை வளர்க்கவும், இந்நிறுவனம் வடிவமைப்புத் துறையில் மிகப்பிரபலமாக விளங்கும் ஒன்றிய மற்றும் மாநில நிறுவனங்களின் உதவியுடன் பல்வேறு வகையான பயிற்சி வகுப்புகளை கைவினைஞர்களுக்கு அவ்வப்போது வழங்கி வருகிறது. இதன் மூலம் பெண் கைவினைஞர்கள் உள்ளிட்ட 1,000க்கும் மேற்பட்ட கைவினைஞர்கள் புதிய உற்பத்தி தொழில் நுட்பத்தினை அறியும் வகையில் நவீன பயிற்சி அளித்து, அதன் மூலம் வருவாயை பெருக்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

நவீன தொழில் நுட்பம் மற்றும் வடிவமைப்புகளை கொண்டு கைவினைப்பொருட்களை தயாரிப்பதற்கு மாநிலம் முழுவதும் உள்ள கைவினைஞர்களுக்கு இதுவரை 6,212 இலவச உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது.

## இலக்கு 8 – மதிக்கத்தக்க வேலை மற்றும் வேலை வாய்ப்பை உருவாக்குதல்

### 8.5 ஆண் மற்றும் பெண் கைவினைஞர்கள் அனைவரும், உற்பத்தித் திறனையும் வேலைவாய்ப்பையும் முழுமையாகஅடைதல்

இந்நிறுவனம் கைவினைஞர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக தமிழகம் முழுவதும் கைவினை குழுமங்களுக்கு (Craft Clusters) பொது வசதி மையங்களை அமைத்து வருகிறது. மேலும், நலிந்த கைத்திறத் தொழில்களை மீட்டெடுக்கவும், இப்பொது வசதி மையங்களை அமைத்து வருகிறது. நீண்ட கால பயன்பாடு கருதி, இந்த பொது வசதி மையங்கள் கைவினைஞர்களின் நலனுக்காக நிறுவப்பட்டது. இங்கு நவீன இயந்திரங்கள் மற்றும் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன. இதை கைவினைஞர்கள் இலவசமாக பயன்படுத்தி தங்களின் வருவாயை பெருக்கி கொள்கிறார்கள். இதன் மூலம் சுமார் 5,000 கைவினைஞர்கள் பயனடைகிறார்கள். மாநிலத்தில் கைத்திறத் தொழிலின் நீடித்த வளர்ச்சியை எய்தும் பொருட்டு, கைத்திறத் தொழிலின் பாரம்பரியத்தினையும், பண்பாட்டினையும் பாதுகாக்கும் நோக்குடன், இக்கலையினை அடுத்த தலைமுறையினருக்கு கொண்டு செல்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## இலக்கு 9 – தொழில், புதுமை மற்றும் உட்கட்டமைப்பு

### 9.3 சிறுதொழில் துறை மற்றும் பிற நிறுவனங்களின் அணுகுமுறையை அதிகரித்தல்

முப்பரிமாண வடிவமைப்பு மற்றும் அச்சுத் தொழில் நுட்பத்தை பயன்படுத்தி நவீன வடிவமைப்புகளை உருவாக்க வடிவமைப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிலையத்தை பூம்புகார் அமைத்துள்ளது. மெய் நிகர் தோற்ற விற்பனை நிலையத்தை (Virtual Reality Showrooms) சென்னையிலுள்ள அதன் விற்பனை நிலையத்தில் பூம்புகார் நிறுவனம் அமைத்துள்ளது.முப்பரிமாண வடிவமைப்பு மற்றும் அச்சுத் தொழில் நுட்பத்தை பயன்படுத்தி நெகிழி அச்சு மூலம் பஞ்சலோக சிலைகளை தயாரிக்க வடிவமைப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிலையம் பூம்புகார் தலைமை அலுவலகத்தில் அமைத்துள்ளது.

### 3. விற்பனை நிலையங்கள்

இந்நிறுவனம் சென்னை, கோயம்புத்தூர், ஈரோடு, சேலம், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி, கன்னியாகுமரி, சுவாமிமலை, மாமல்லபுரம், வண்டலூர் உயிரியல் பூங்கா, சென்னை விமான நிலையம், கேவாடியா (குஜராத்), புதுதில்லி மற்றும் கொல்கத்தா ஆகிய இடங்களில் அமைந்துள்ள 12 பிரதான விற்பனை நிலையங்கள் மற்றம் 10 துணை விற்பனை நிலையங்கள்

மூலம் கைவினைப்பொருட்களை விற்பனை செய்து சந்தை வாய்ப்பை ஏற்படுத்தித் தருகிறது. இந்த விற்பனை நிலையங்களில் CCTV கண்காணிப்பு கேமரா மற்றும் விற்பனை நடவடிக்கைகளை கணினிமயமாக்கல் (Computerised Billing) போன்ற நவீன அம்சங்கள் உள்ளன. மேலும் வாடிக்கையாளர்களுக்கு இனிமையான விற்பனை அனுபவத்தைப் பெற தகுந்த சூழலைக் கொண்டுள்ளது.

**4. கண்காட்சிகள்**

தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் நாடெங்கும் உள்ள முக்கிய நகரங்களிலும், தமிழகத்திலுள்ள நகரங்களிலும், விற்பனையுடன் கூடிய கைத்திறக் கண்காட்சிகளை நடத்தி வருகிறது. காந்தி சிற்ப பஜார் மற்றும் கிராப்ட் பஜார் போன்ற கண்காட்சிகளை இந்நிறுவனம் நடத்தும் பொழுது இவற்றில் பங்குகொள்ள, நாடெங்கிலுமுள்ள கைவினைஞர்கள் அழைக்கப்படுகிறார்கள். இக்கண்காட்சிகளின் முக்கிய நோக்கம் கைவினைஞர்கள் தயாரிக்கும் கைவினைப் பொருட்களை ஓரே இடத்தில் வாடிக்கையாளர்கள் மற்றும் கைவினைஞர்கள் பயனடையும் வகையில் சந்தைப்படுத்துவதாகும்.

சென்ற ஆண்டில் கொரானா பெருந்தொற்றின் காரணமாக வெளிமாநிலங்களில் / இடங்களில் கண்காட்சிகளை நடத்த இயலவில்லை. பூம்புகார்

விற்பனை நிலையங்களில் மட்டும் 71 கண்காட்சிகள் நடத்தப்பட்டது. இவ்வாண்டு 75வது சுதந்திர தினத்தை முன்னிட்டு 12 சிறப்புக் கண்காட்சிகள் நடத்தப்பட்டது.

## 5. ஏற்றுமதி விற்பனை

பூம்புகார், சிங்கப்பூர், மலேசியா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு பாரம்பரியமிக்க கைவினைப் பொருட்களை ஏற்றுமதி செய்து வருகிறது. பஞ்சலோகச் சிலைகள், பித்தளை அலங்கார விளக்குகள், நூக்கமர அறைகலன்கள் மற்றும் தஞ்சாவூர் ஓவியங்கள் ஆகியவை இந்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் முக்கிய கைவினைப் பொருட்களாகும். இந்நிறுவனம் 2020-2021 ஆம் ஆண்டில் ரூ.20.80 இலட்சம் மதிப்பிலான கைவினைப் பொருட்களை ஏற்றுமதி செய்துள்ளது.

## 6. விற்பனை அளவு

இந்நிறுவனம் தொடங்கப்பட்டதிலிருந்து தன்னுடைய வருடாந்திர விற்பனையில் மிகுந்த வளர்ச்சியை அடைந்து வருகிறது. 2018-2019 ஆம் ஆண்டில் அதிகப்படியாக விற்பனை ரூ.41.38 கோடி அடைந்தது. ஆனால் 2020-2021-ஆம் ஆண்டு கொரானா பெருந்தொற்று முழு ஊரடங்கு காரணமாக விற்பனை ரூ.**23.25** கோடி அடைந்தது. பூம்புகார் நிறுவனம் 2021-2022ஆம்

ஆண்டிற்கான விற்பனை இலக்கினை ரூ.40.00 கோடியாக நிர்ணயம் செய்துள்ளது.

**7. விலைக்கொள்கை**

பூம்புகார் விற்பனை நிலையங்களில் விற்பனையாகும் கைவினைப் பொருட்களுக்கு தனித்துவமான விலைக்கொள்கை பின்பற்றப்படுகிறது. பொருட்களின் தரம் மற்றும் பணித்திறனைச் சமரசம் செய்யாமல் தனியார் மற்றும் மொத்த சந்தைக்கு நிகராக இந்த விலை நிர்ணயிக்கப்படுகிறது. இந்த திருத்தப்பட்ட விலைக்கொள்கை மூலம் விரைவாக விற்பனையாகும் தரமான கைவினைப்பொருட்கள் விற்பனை நிலையங்களிலும், இணையதளத்தின் மூலமாகவும் விற்பனை செய்யப்படும். இது பூம்புகார் நிறுவனத்தின் மீது வாடிக்கையாளர்களுக்கு மேலும் அதிக நம்பிக்கையை உருவாக்கும்.

**8. பூம்புகார் உற்பத்தி நிலையங்கள்**

பூம்புகார் நிறுவனம், நாச்சியார்கோவிலில் பாரம்பரிய வெண்கலம் மற்றும் பித்தளை விளக்குகள், மதுரையில் பித்தளை விளக்குகள் மற்றும் பித்தளை கலைப்பொருட்கள், வாகைக்குளத்தில் பித்தளை விளக்குகள் மற்றும் பித்தளை கலைப்பொருட்கள், சுவாமிமலையில் பஞ்சலோக சிற்பங்கள், தஞ்சாவூரில் தஞ்சாவூர் கலைத்தட்டுகள், கள்ளக்குறிச்சியில்

மரச்சிற்பங்கள் மற்றும் மாமல்லபுரத்தில் கற்சிற்பங்கள் போன்ற கலைப்பொருட்களை உருவாக்க 7 இடங்களில் சொந்தமாக உற்பத்தி நிலையங்களை நடத்தி வருகிறது. இந்த உற்பத்தி நிலையங்களில் நிரந்தர கைவினைஞர்களும், துண்டுக்கூலி பணியாளர்களும் (கைவினைஞர்கள்) பணியாற்றி வருகின்றனர்.

கடந்த ஆண்டில் (2020–2021) மேலே குறிப்பிட்டுள்ள உற்பத்தி நிலையங்களின் மொத்த உற்பத்தி மதிப்பு ரூ.2.35 கோடி ஆகும். 2021–2022ஆம் ஆண்டு ரூ.5.00 கோடி உற்பத்தி இலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## 9. புதிய நிர்வாகம், சந்தை மற்றும் உற்பத்தி முயற்சிகள்

பூம்புகார், சந்தை மற்றும் நுகர்வோர் தேவையினை மேம்படுத்த மேலும் குறைந்தபட்ச/நிகரான விலையில் உற்பத்திச் செய்யும் திறனை அதிகரிக்க, தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்பத்தை பயன்படுத்தி நிறுவனத்தின் நிர்வாகம், சந்தைப்படுத்துதல், வடிவமைப்பு மற்றும் உற்பத்தி ஆகிய முக்கிய நடவடிக்கைகளை மாற்றியமைத்து புதிய தொழில்நுட்ப முறையில் செயல்பட்டு வருகிறது. இது பல்வேறு வகையான பங்குதாரர்களை மையப்படுத்தி கீழ்க்கண்ட வளர்ச்சிக் குறிக்கோள்களை கொண்டு செயல்படுத்தப்பட்டுள்ளது.

**கைவினைஞர்கள்:** கைவினைஞர்கள் மற்றும் கைவினைஞர்களின் திறமைக்கான மின் தொகுப்பை உருவாக்கியதன் மூலம் அவர்களின் விவரங்கள், பணித்திறன் மற்றும் படைப்புகள் ஆகியவற்றை பார்த்து, கைவினைஞர்களை நேரடியாக தொடர்புகொள்ள வழிவகுக்கப்பட்டுள்ளது. மேலும் சமூக பாதுகாப்பு நலத்திட்டங்கள் சரியான முறையில் பெண் கைவினைஞர்கள் மற்றும் நலிவுற்றோருக்கு சென்றடைய முன்னுரிமை வழங்கப்படும். புதிய வடிவமைப்புகள் மற்றும் உற்பத்தி தொழில்நுட்பங்களை புகுத்தி கைவினைஞர்களின் திறனை மேம்படுத்த வழிவகை செய்யப்படும்.

**வாடிக்கையாளர்கள் / வாங்குவோர்:** குறைந்தபட்ச வர்த்தக பரிவர்த்தனை நேரம், நம்பிக்கை மற்றும் நுட்பமான அணுகுமுறை போன்றவற்றின் மூலம் வாடிக்கையாளர்கள் / வாங்குவோரின் ஏற்புத்தன்மை மற்றும் அனுபவங்களை மேம்படுத்துதல்.

**நிறுவனம்:** மின் ஆளுமை (e–Governance) மூலம் வர்த்தக ரீதியில் நிலைத் தன்மையோடு பாரம்பரியத் தொழிலை மேம்படுத்தி கைவினைஞர்களின் வாழ்வாதாரத்திற்கு பாதுகாப்பு அளிப்பதுடன், வெளிப்படைத் தன்மையுடன் செயல்பட்டு வருகின்றது. பூம்புகார், ஏற்கனவே தனது குறிக்கோளில் வெற்றி பெற்று அதன் பயனை அடைய

தொடங்கிவிட்டது. இம்மாற்றத்தின் விரிவான விவரங்கள் கீழ்வருமாறு:

### 9.1. நிர்வாக சீர்த்திருத்தங்கள்

**மின்தளம்:** பூம்புகார் தனக்கென உருவாக்கியுள்ள பல்நோக்கு இணையதளம் www.poompuhar.comவாயிலாக பூம்புகார் மற்றும் தொடர்புடைய பிரிவுகளின் வளர்ச்சியினை தொழில் முனைவோர் அறிந்து கொள்ளலாம்.

**மின் தொகுப்பு களஞ்சியம்:** தமிழக அரசு, மாநில புதுமை நிதி திட்டத்தின்கீழ் கைவினைஞர்கள் மற்றும் கைவினைஞர்களின் திறமைக்கான மின் தொகுப்பு www.poompuhar.comஏற்படுத்த ரூ.1.00 கோடி நிதி வழங்கியுள்ளது. இது தமிழக கைவினைஞர்கள் அனைவருக்கும் நிலையான வலைதளம் அமைத்து ஒவ்வொரு கைவினைஞருக்கும் தனித்தனியாக மின் பக்கங்களை கொண்ட, விரிவாகவும் தொடர்ந்து புதிய தகவல்களை பதிவேற்றம் செய்து கொள்ளும் வகையில் உருவாக்கப்பட்ட மின் தொகுப்பு ஆகும். இம்மின் தொகுப்பில் நலிவுற்ற கைவினைஞர்களை மேம்படுத்தும் பிரத்யேக அம்சங்களும் அடங்கும். தற்போது இந்நிறுவனம் 19,052 கைவினைஞர்களின் விவரங்களை பதிவேற்றம் செய்துள்ளது. வாடிக்கையாளர்கள் அவர்களுக்குத் தேவைப்படும் கைவினைப் பொருட்களின் வகைகள்

வாரியாகவும், கைவினைஞர்களின் வேலைப்பாடுகளையும் இவ்வலைத்தளம் மூலம் காண இயலும். இதன் மூலம் வாடிக்கையாளர்கள், கைவினைஞர்கள் பற்றிய தகவல்களை உடனடியாக கணினி மூலம் பெறவும் கைவினைப் பொருட்களை வாங்கவும் முடியும்.

**மின் வருகைப்பதிவு:** இந்நிறுவனத்தின் அனைத்து விற்பனை நிலையங்கள் மற்றும் உற்பத்தி நிலையங்களிலும் பயோ மெட்ரிக் வருகை பதிவு பயன்படுத்தப்படுகிறது.

**மின்தொடர்பு:** வாடிக்கையாளர்கள் மற்றும் அலுவலர்கள் பயன்பாட்டிற்காக தலைமை அலுவலகம் மற்றும் அனைத்து பூம்புகார் விற்பனை நிலையங்களிலும் நிறுவன வள திட்டத்தின் உபயோகம் (ERP) மற்றும் வை–பை (wi–fi) வசதி செய்யப்பட்டுள்ளது.

**மின் கண்காணிப்பு:** **12** பிரதான விற்பனை நிலையங்கள், 4 துணை விற்பனை நிலையங்கள், 7 உற்பத்தி நிலையங்கள், நகர்புறத்திடல் மற்றும் நிறுவன அலுவலகத்திலும் 138 கண்காணிப்பு கேமராக்கள் (CCTV) பொருத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் அனைத்து இடங்களும் சரியான முறையில் தலைமை அலுவலகத்தால் கண்காணிப்படுகின்றன.

## 9.2. சந்தை வாய்ப்பில் சீர்த்திருத்தங்கள்

**மின் வணிகம்:** பூம்புகார் தனது பொருட்களை நேரடியாக மின் வணிகம் (Online) மூலம் விற்பனை செய்வதற்கு www.poompuhar.comஎன்ற பெயரில் சொந்த மின் வணிக இணைய தளத்தினை அமைத்துள்ளது. கைபேசி செயலியுடன் இணைந்த வேன் / மோட்டார் சைக்கிள் மூலம் வாடிக்கையாளர்களுக்கு பொருட்கள் நேரடியாக வழங்கப்படுகிறது. இந்நிறுவனம் மின் வணிக நிறுவனங்களான அமேசான் (Amazon) மற்றும் இன்டியா மார்ட் (India Mart) போன்ற நிறுவனங்கள் மூலம் பூம்புகார் தயாரிப்புகளை விற்பனை மேற்கொள்ளப்படுகிறது. மேற்கண்ட அனைத்து வலைதளங்களிலும் பிரத்யேக மின்வலை தள பக்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**பூம்புகார் மெய்நிகர் தோற்ற விற்பனை நிலையம்:** (Virtual Reality Poompuhar Showroom): தமிழ் நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் தனது தலைமை அலுவலகத்தில் உள்ள வடிவமைப்பு, ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையக் குழுவினர், பூம்புகார் படைப்புகளை மெய் நிகர் தொழில் நுட்பம் மூலம் முப்பரிமாண வடிவில் உருவாக்கப்பட்டு முப்பரிமாண அச்சு எந்திரம் மூலம் அச்சடிக்கப்பட்டு, பின் அவை பஞ்சலோக சிற்பங்களாக பூம்புகார் உற்பத்தி நிலையங்களில் தயாரிக்கப்படுகின்றன. அந்த பொருட்களை மெய்நிகர் தோற்ற முப்பரிமாண பிம்பங்களாக வடிவமைப்புக்குழு தயாரித்து, அதனை

மெய்நிகர் தோற்ற இணையகத்தில் (Virtual Reality Server) நிறுவப்படுவதன் மூலம் வாடிக்கையாளர்கள் அந்த முப்பரிமாண பொருட்களை தங்களது மெய் நிகர் தோற்றக் கரங்களால் தேர்ந்தெடுத்து, அப்பொருள் குறித்த தங்களது கருத்துகளை பதிவு செய்யவும், அப்பொருட்களை மின் வணிக வர்த்தகம் மூலம் கொள்முதல் செய்யவும், வாடிக்கையாளர்களுக்கு வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

**உருப்பெருக்கும் மெய்தோற்றசெயலி (Augmented Reality App):**

மெய்நிகர் தோற்றத் திட்டத்தின் ஒரு பகுதியாக Augmented Reality App என்ற செயலியை இந்நிறுவனம் அறிமுகப்படுத்தி உள்ளது. கைவினைப் பொருட்களை முப்பரிமாணத்தில் காட்சிப்படுத்தி, மெய்நிகர் தோற்ற செயலியின் மூலம் அலுவலகம், வீடு மற்றும் தேவைப்பட்ட இடங்களில் அலங்கரித்துக் காட்டி கைவினைப் பொருட்களை விற்பனை செய்ய ஏதுவாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் வாடிக்கையாளரிடமிருந்து ஆணைகளை பெறுவது எளிதாகும். இது கைவினைப் பொருட்களை சந்தைப்படுத்துவதற்கு முதன்முறையாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

**மின் ஊடகங்கள்:** பூம்புகார் முகநூல், டுவிட்டர், யூடியுப் (Youtube) மற்றும் இன்ஸ்டாகிராம் (Instagram) போன்ற பிரம்மாண்ட இணையதள சமூக ஊடகங்கள் வாயிலாக விளம்பரம் செய்யவும், உலகளவில் சந்தை வாய்ப்பை பெறவும் நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது.

**மின் குறியீடு:** அனைத்து 12 பிரதான விற்பனை நிலையங்கள் மற்றும் 10 துணை விற்பனை நிலையங்களிலுள்ள கைவினைப் பொருட்கள் அனைத்திற்கும் மின்னணு விலைக் குறியீடு உருவாக்கப்பட்டுள்ளது.

**மின் விலைச்சீட்டு:** பூம்புகார் மின் விலைச்சீட்டு இயந்திரத்தை பயன்படுத்துவதன் மூலம் 12 பிரதான விற்பனை நிலையங்கள் மற்றும் 10 துணை விற்பனை நிலையங்களிலும் பரவலாக்கப்பட்ட மின் விலைச்சீட்டினை சுலபமாகவும், விரைவாகவும், தயாரிக்க இயலுவதுடன் வர்த்தக பரிமாற்ற நேரமும் குறைந்துள்ளது.

## 9.3. வடிவமைப்பு மற்றும் உற்பத்தியில் சீர்திருத்தங்கள்

### வடிவமைப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிலையம் (DRDC)

முப்பரிமாண வடிவமைப்பு மற்றும் அச்சுத் தொழில் நுட்பத்தை பயன்படுத்தி நெகிழி அச்சு மூலம் பஞ்சலோக சிலைகளை உருவாக்க வடிவமைப்பு ஆராய்ச்சி மற்றும்

மேம்பாட்டு நிலையம் அமைக்க தமிழக அரசு ரூ.1.68 கோடி நிதி வழங்கியுள்ளது. இந்த வடிவமைப்பு நிலையத்தால் இக்காலத்திற்கு ஏற்ப, புதிய வடிவமைப்புகளை முப்பரிமாண மென்பொருட்களை உபயோகப்படுத்தி தயார் செய்யப்படுகிறது. இதன் மூலம் பூம்புகாரின் புதிய வடிவமைப்புகளை சந்தைப்படுத்தும் திறன் பெருமளவு அதிகரிக்கும். தமிழ் நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் தனது தலைமை அலுவலகத்திலேயே ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிலையம் அமைத்து தொழில் நுட்ப கட்டமைப்புகளை அமைத்துள்ளது.

### 9.4. உற்பத்தியில் சீர்திருத்தங்கள்

புதிய வடிவமைப்பு கொண்ட கைவினைப் பொருட்களை உற்பத்தி செய்ய, இந்நிறுவனம் உற்பத்தி துறையில், ஒருங்கிணைந்த வடிவமைப்பு மற்றும் தொழில்நுட்ப மேம்பாட்டுப் பயிற்சி, வடிவமைப்பு மற்றும் தொழில்நுட்ப மேம்பாட்டுப் பயிற்சி பட்டறை திட்டத்தை ஒருங்கிணைந்த கைவினைப்பொருட்கள் மேம்பாடு வளர்ச்சித்திட்டத்தின் (IDPH) கீழ் வழங்கியது. மேலும் ரூ.6.60 கோடி நிதி ஒப்பளிப்புடன் 11 பொது வசதி மையங்களை, அதற்குத் தேவையான உற்பத்தி இயந்திரங்களான CNC இயந்திரம், முப்பரிமான அச்சு இயந்திரம், நவீன தொழில் நுட்ப உபகரணங்கள் ஆகியவைகளைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. இதன்

மூலமாக இடையூறுகள் நீங்கி புதிய வடிவமைப்புகளுடன் உற்பத்தி செய்யப்படும்.

## 10. "விருப்ப கொள்முதல் முகமை"

அரசு துறை மற்றும் அரசு முகமைகள் தங்களுக்குத் தேவைப்படும் கைவினைப் பொருட்களை கொள்முதல் செய்வதற்கு பூம்புகார் நிறுவனத்தை, தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் 1998 பிரிவு 16 (f)ன் கீழ் ஒரு **"விருப்ப கொள்முதல் முகமை"** (Optional Procurement Agency) என அரசு அறிவிக்கை வெளியிட்டுள்ளது. இதற்கான அரசாணை எண்.66 நாள் 04.03.2016–ன்படி இந்நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

## 11. புதிய வருவாய் முறைகள்

பூம்புகார், சந்தை மற்றும் விற்பனை வாயிலாக கிடைக்கும் வருவாயுடன், சிறப்பாணைகள் மூலமாக புதிய வருவாயினை ஏற்படுத்த மேற்கொண்ட முயற்சிகள் பலனளித்துள்ளன. அதனடிப்படையில் கீழ்க்காணும் நிறுவனங்களிடமிருந்து சிறப்பாணைகள் மற்றும் அழகுபடுத்தும் பணிகளை பூம்புகார் நிறுவனம் மேற்கொண்டுள்ளது.

## நிறைவேற்றப்பட்ட சிறப்பு ஆணைகள் 2020–2021

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | பணி விவரம் | தொகை (ரூபாய் கோடியில் ) |
|---|---|---|---|
| 1 | காமராஜர் துறை முகம் – எண்ணூர் | அழகுபடுத்தும் பணி | 0.65 |
| 2 | ஆவடி நகராட்சி அலுவலகம் – ஆவடி | அழகுபடுத்தும் பணி | 0.11 |
| 3 | தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் – சென்னை | தங்கப்பதக்கம் வழங்குதல் | 3.02 |
| 4 | தமிழ் வளர்ச்சித் துறை – சென்னை | கருங்கல் நினைவு தூண் அமைத்தல் | 0.24 |
| 5 | காளிகாம்பாள் திருக்கோயில் – சென்னை | பித்தளையிலான வரிசை அமைக்கும் பணி | 0.07 |
| 6 | பிற அரசுத் துறைகள் | தங்கம், வெள்ளி மற்றும் வெண்கல பதக்கம் வழங்குதல் | 1.57 |
| 7 | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை – சென்னை | பித்தளை சலவை பெட்டி வழங்குதல் | 0.97 |
| 8 | SIPCOT – சென்னை | வெண்கல சிலைகள் மற்றும் தஞ்சாவூர் ஓவியங்கள் வழங்குதல் | 0.20 |

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | பணி விவரம் | தொகை (ரூபாய் கோடியில் ) |
|---|---|---|---|
| 9 | SIDCO – சென்னை | அழகுபடுத்தும் பணிமற்றும் புகைப்படத் தொகுப்பு களஞ்சியம் அமைத்தல் | 0.10 |
| 10 | தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சித் துறை – சென்னை | குலசேகரப்பட்டினம் – சுற்றுலா விளக்க மையம் மற்றும் அழகுபடுத்தும் பணி | 1.12 |
| 11 | பொதுப்பணித் துறை – சென்னை | கருங்கல் சிலைகள் அமைத்தல் | 0.16 |
| 12 | சென்னை விமான நிலையம், TIDCO மற்றும் பிற துறைகள் | கலை பொருட்கள் வழங்குதல் | 0.27 |
| 13 | திருச்சி மாநகராட்சி – திருச்சி | ஸ்மார்ட் சிட்டி திட்டம் | 1.50 |
| | **மொத்தம்** | | **9.98** |

## 12. கைவினைஞர்களுக்கான நலன்

இந்நிறுவனம் ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் கைவினைஞர்களுக்கான நலத்திட்டங்களையும், சிறப்புத் திட்டங்களையும் செயல்படுத்திட மேம்பாட்டு பிரிவு (Development Cell) என்ற தனி பிரிவு செயல்பட்டு வருகிறது.

### 12.1. விருதுகள்

ஒவ்வொரு ஆண்டும் பூம்புகார் நிறுவனம் கைத்திறத் தொழிலில் சிறந்த திறமைக் கொண்ட கைவினைஞர்களை அங்கீகரிக்கும் பொருட்டு கீழ்க்கண்ட விருதுகளை வழங்குகின்றது.

1. வாழும் கைவினைப் பொக்கிஷம் விருது
2. பூம்புகார் மாநில விருது
3. பூம்புகார் மாவட்ட கைத்திறன் விருது
4. பயன்பாடு சார்ந்த கைவினைப்பொருட்கள் விருது
5. கைவினைப்பொருட்கள் ஏற்றுமதி விருது
6. குழு உற்பத்தி விருது
7. அடுத்த தலைமுறை கைவினைஞருக்கான கைத்திறப்போட்டி

போன்ற விருதுகளை கைத்திறத் தொழிலில் சிறந்த திறமைக் கொண்ட கைவினைஞர்களுக்கு வழங்கி அங்கீகரிக்கப்படுகிறது.

**விருதுகளின் விவரங்கள்**

| வ. எண் | விருதுகளின் பெயர்கள் | விருதுகளின் விவரம் | விருதுகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | வாழும் கைவினைப் பொக்கிஷம் | ரூ.1.00 லட்சம் ரொக்கம்,8 கிராம் தங்கப்பதக்கம், தாமிரப்பத்திரம் மற்றும் சான்றிதழ் | 10 |
| 2 | பூம்புகார் மாநில விருது | ரூ.50,000/– ரொக்கம், 4 கிராம் தங்கப்பதக்கம், தாமிரப்பத்திரம் மற்றும் சான்றிதழ் | 10 |
| 3 | பூம்புகார் மாவட்ட கைத்திறன் விருது | ரூ.10,000/– ரொக்கம், வெள்ளிப்பதக்கம் மற்றும் சான்றிதழ் | 85 |
| 4 | கைவினைப் பொருள் ஏற்றுமதி விருது | ரூ.40,000/– ரொக்கம், 4 கிராம் தங்கப்பதக்கம், தாமிரப்பத்திரம் மற்றும் சான்றிதழ் | 2 |
| 5 | குழு உற்பத்தி விருது | ரூ.40,000/– ரொக்கம், 4 கிராம் தங்கப்பதக்கம், தாமிரப்பத்திரம் மற்றும் சான்றிதழ் | 3 குழுக்கள் |

| வ. எண் | விருதுகளின் பெயர்கள் | விருதுகளின் விவரம் | விருதுகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 6 | பயன்பாடு சார்ந்த கைவினைப் பொருட்கள் விருது | ரூ.40,000/– ரொக்கம்,4 கிராம் தங்கப்பதக்கம், தாமிரப்பத்திரம் மற்றும் சான்றிதழ் | 3 |
| 7 | அடுத்த தலைமுறை கைவினைஞர் –களுக்கான கைத்திறப் போட்டி | ரூ.2,000/– ரொக்கம், வெள்ளிப்பதக்கம் மற்றும் சான்றிதழ் | 150 |
| | **மொத்தம்** | | **263** |

நாட்டிலேயே கைவினைஞர்களுக்கு அதிக எண்ணிக்கையிலான விருதுகளை வழங்கும் தனித்துவம் மிக்க மாநிலமாக தமிழகம் திகழ்கிறது.

## 12.2 கைவினைஞர்கள் தினம்

பொது மக்களிடையே கைத்திறப்பொருட்களை பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தவும், கைவினைஞர்களின் பாரம்பரியமிக்க கைவினைப் பொருட்களை உற்பத்தி செய்து பொருளாதாரத்தை மேம்படுத்துவதை அங்கீகரிக்கவும் தமிழ்நாடு அரசு ஒவ்வொரு ஆண்டும் **"மார்ச் 5–ஆம்"** நாள் **"கைவினைஞர்கள் தினம்"** என அறிவித்துள்ளது. இந்த தினத்தன்று தேர்ந்தெடுக்கப்பட்ட

கைவினைஞர்களுக்கு பூம்புகார் விருதுகள் வழங்கும் நிகழ்ச்சியும் நடைபெறும். இதற்காக தமிழக அரசு ஆண்டுதோறும் ரூ.35.00 இலட்சம் நிதியுதவி வழங்குகிறது.

### 12.3. பயிற்சி திட்டங்கள்

ஒன்றிய அரசின் திட்டமான IDPH திட்டத்தின் மூலமாக ஒருங்கிணைந்த கைவினைப்பொருட்கள் மேம்பாடு மற்றும் வளர்ச்சித் திட்டத்தின் (Integrated Development and Promotion of Handicrafts) கீழ் 40 கைவினைஞர்களுக்கு ரூ.14.85 இலட்சம் செலவில் தஞ்சாவூர் (கலைத்தட்டு), நாச்சியார்கோவில் (பித்தளை விளக்குகள்), மதுரை (பித்தளை விளக்குகள் மற்றும் கலைப்பொருட்கள்), சுவாமிமலை (பஞ்சலோக சிலைகள்) மற்றும் தம்மம்பட்டி (மரச்சிற்பம்) ஆகிய கைத்திறத்தொழில்களில் 3 மாத கால கைத்திறத்தொழில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் மொத்தம் 200 கைவினைஞர்கள் பயனடைந்துள்ளனர்.

### 12.4. வடிவமைப்பு மற்றும் தொழில்நுட்ப மேம்பாட்டுப் பயிற்சி முகாம்

ஒருங்கிணைந்த கைவினைப் பொருட்கள் மேம்பாடு மற்றும் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் வடிவமைப்பு மற்றும் தொழில்நுட்ப மேம்பாட்டுப் பயிற்சி தமிழ்நாடு முழுவதும் 27 இடங்களில் தலா ரூ.4.60 இலட்சம் செலவில்

நடத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் 810 கைவினைஞர்கள் பயனடைந்துள்ளனர்.

**13. நகர்ப்புற கண்காட்சித்திடல்**

கைவினைஞர்கள் மற்றும் கைத்தறி நெசவாளர்களுக்கு பெருநகரங்கள் / சுற்றுலாத் தலங்கள் போன்ற இடங்களில் நிரந்தர சந்தை வாய்ப்பிற்கான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவது நகர்ப்புறக் கண்காட்சித் திடலின் முக்கிய நோக்கமாகும். இத்திடல் மூலம் கைவினைஞர்கள் தங்களது பொருட்களை ஆண்டு முழுவதும் விற்பனை செய்வதுடன் பெருமளவில் வாடிக்கையாளர்களை ஈர்க்க இயலும். இத்திடலில் விற்பனைக் கூடங்கள் உட்பட உள்நாடு / சர்வதேச சுற்றுலா பயணிகள்/நுகர்வோர்களை கவரும் வகையில் கலைநயத்துடன் பொழுதுபோக்கு அம்சங்கள் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது.

**13.1. கன்னியாகுமரி நகர்ப்புற கண்காட்சித்திடல்**

பூம்புகார், கன்னியாகுமரியில் ரூ.2.75 கோடி மதிப்பீட்டில் ஒரு நகர்புறக் கண்காட்சித் திடல் அமைக்கப்பட்டுள்ளது. இதில் ஒன்றிய அரசின் பங்கு ரூ.1.40 கோடி, மாநில அரசின் பங்கு ரூ.60.00 இலட்சம், இதர அரசு நிறுவனங்களின் பங்கு ரூ.45.00 இலட்சம் மற்றும் இந்நிறுவனத்தின் சுய நிதி பங்கு ரூ.30.00 இலட்சம் ஆகும். இக்கண்காட்சித்திடல் 50 கடைகள், உணவுக்

கூடம், ஓய்வறை, காட்சி அரங்கம், குழந்தைகள் பூங்கா மற்றும் வாகனம் நிறுத்தும் இடம் ஆகிய வசதிகளைக் கொண்டுள்ளது. இந்நகர்புற கண்காட்சித்திடல் மூலம் மாதந்தோறும் சராசரியாக 50 கைவினைஞர்கள் பயன்பெறுகின்றனர்.

**13.2. மாமல்லபுரம் நகர்ப்புற கண்காட்சித்திடல்**

இதேபோன்று மற்றுமொரு நகர்ப்புற கண்காட்சித்திடல் சென்னையை அடுத்து மாமல்லபுரத்தில் ரூ.4.24 கோடி செலவில் கட்டடப்பட்டுள்ளது. இதில் ஒன்றிய அரசின் பங்கு ரூ.2.10 கோடி மாநில அரசின் பங்கு ரூ.1.90 கோடி மற்றும் இந்நிறுவனத்தின் சுயநிதி பங்கு ரூ.24.00 இலட்சம் ஆகும். இக்கண்காட்சி திடலில் விற்பனை செய்வதற்கு ஏற்ப 36 விற்பனை அரங்குகள், உணவு கூடம், ஓய்வறை, காட்சி அரங்கம், குழந்தைகள் பூங்கா, கைவினைஞர்கள் தங்குமிடம் மற்றும் வாகனம் நிறுத்துமிடம் கொண்டதாகும்.

**14. விற்பனை நிலையங்களின் விரிவாக்கப்பணிகள்**

**14.1. கடலூர் விற்பனை நிலையம் புதுப்பித்தல்**

பூம்புகார், கடலூர் நகரத்தின் மையப்பகுதியில் தனது சொந்த விற்பனை நிலையம் வைத்துள்ளது. இந்த விற்பனை நிலையம் 50 ஆண்டுகளுக்கு மேல் மிகவும் பழமையானதாகும். இந்த விற்பனை நிலையம் கடலூரில்

முக்கிய வர்த்தக மையங்கள் அமைந்திருக்கும் பகுதியில் அமைந்திருப்பதால் அதிக வருவாய் ஈட்டும் தன்மையுடையது. எனவே, இந்த மாவட்டம் மற்றும் அதை சுற்றியுள்ள கைவினைஞர்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் பயன்பெறும் வகையில் இந்த இடத்தில் புதிய விற்பனை நிலையம் அமைத்திட திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக தமிழக அரசின் நிதியுதவி ரூ.1.00 கோடி செலவில் உள் அலங்காரத்துடன் புதுப்பிக்கப்பட உள்ளது.

### 14.2. சேலத்தில் புதிய விற்பனை நிலையம் அமைத்தல்

பூம்புகார் விற்பனை நிலையம், சேலம் கிளை வாடகை கட்டிடத்தில் மிகவும் சிறிய இடத்தில் இயங்கி வருகிறது. இந்த விற்பனை நிலையத்தை தேவைக்கு ஏற்ப புதுப்பிக்கவோ, விரிவாக்கம் செய்யவோ இயலாததால், ஒரு புதிய விற்பனை நிலையத்தை ஏற்கெனவே உள்ள தனது சொந்த இடத்தில் அமைத்திட தமிழக அரசு நிதியுதவி ரூ.2.00 கோடி வழங்கியுள்ளது. அதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது.

## 15. ஒருங்கிணைந்த கைவினைப் பொருட்கள் மேம்பாடு மற்றும் வளர்ச்சி

ஒன்றிய அரசு ஒருங்கிணைந்த கைவினைப் பொருட்கள் மேம்பாடு மற்றும் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ரூ.10.19 கோடியினை பூம்புகாருக்கு அனுமதித்துள்ளது.

இத்திட்டத்திற்காக ரூ.3.24 கோடி இணை மானியமாக தமிழக அரசு வழங்கியுள்ளது. இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள் கைவினைஞர்களுக்கு சிறந்த பணிச்சூழல், திறன் மேம்பாடு, சந்தை வசதி, புதிய வடிவமைப்புக்களை அறிமுகப்படுத்துதல் போன்றவற்றை உள்ளடக்கியதாகும்.

**ஒருங்கிணைந்த கைவினைப் பொருட்கள் மேம்பாடு மற்றும் வளர்ச்சி– திட்ட முன்னேற்றம்**

| வ. எண் | ஒப்பளிப்பு செய்யப் பட்ட திட்டம் | ஒப்பளிப்பு செய்யப்பட்ட திட்டங்களின் எண்ணிக்கை | செலவினத் தொகை (ரூ. கோடியில்) |
|---|---|---|---|
| 1. | பொது வசதி மையம் | 11 | 5.40 |
| 2. | கண்காட்சி | 22 | 3.13 |
| 3. | கிராப்ட்பஜார் | 12 | |
| 4. | வடிவமைப்பு கருத்தரங்கு | 27 | 1.23 |
| 5. | ஒருங்கிணைந்த பயிற்சி | 5 | 0.68 |
| 6. | உபகரணப் பொருட்கள் | 7,000 | 2.69 |
| 7. | உற்பத்தியாளர்/ நுகர்வோர் கூட்டம் | 1 | 0.11 |
| | **மொத்தம்** | | **13.24** |

## 15.1 பொது வசதி மையம்

பல கைவினை குழுமங்களைச் சேர்ந்த கைவினைஞர்கள், பொது வசதி மையங்களில் ஒன்று கூடி இம்மையத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள உட்கட்டமைப்பு வசதியை பயன்படுத்தி, இங்குள்ள இயந்திரங்கள் மற்றும் கருவிகள் மூலம் கைவினைப்பொருட்களை தயாரிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இப்பொது வசதி மையங்கள், சுவாமிமலை, நாச்சியார்கோவில், தஞ்சாவூர், மதுரை மற்றும் வாகைக்குளம் ஆகிய 5 இடங்களில் ரூ.3.00 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் 6 பொது பயன்பாட்டு மையங்கள் தலா ரூ.60.00 இலட்சம் செலவில் காஞ்சிபுரம், அம்பாசமுத்திரம், கன்னியாகுமரி, தம்மம்பட்டி, அரும்பாவூர் மற்றும் ஆசனூர் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டவுள்ளது. இம்மையங்களின் மூலம் தோராயமாக 5,000 கைவினைஞர்கள் பயன்பெறுவார்கள்.

## 16. நலிந்த கைத்திறத்தொழில்களுக்கு பொது பயன்பாட்டு மையம் அமைத்தல்

தமிழ்நாட்டில் நலிந்த கைவினைத்தொழில்களான சுடுகளிமண் விக்கிரவாண்டியிலும், பனை ஓலைப் பொருட்கள் இராமநாதபுரத்திலும், கோரைப்புல் பாய் பத்தமடையிலும், களிமண் கைவினைப்பொருள்

கூனியூரிலும் புத்துயிர் அளிக்கும் பொருட்டு 4 பொது பயன்பாட்டு மையங்கள் அமைக்க தமிழக அரசு ரூ.1.88 கோடி நிதியுதவி அளித்துள்ளது. பொது பயன்பாட்டு மைய கட்டிடங்கள் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

**17. இலவச உபகரணங்கள் வழங்குதல்**

கைவினைஞர்களின் திறமையை உயர்த்தவும், அவர்களின் உற்பத்தித்திறனை அதிகரிக்கவும் இந்நிறுவனம் ரூ.5,000/- மதிப்பிலான கைத்திறத் தொழில்களுக்கு தேவையான உபகரணங்களை பல கைத்திறத் தொழில்கள் செய்யும் கைவினைஞர்களுக்கு இலவசமாக வழங்குகிறது. தமிழ்நாட்டிலுள்ள 6,212 கைவினைஞர்களுக்கு இலவச உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது.

**18. கைவினை சுற்றுலா கிராமம், மாமல்லபுரம் (Craft Tourism Village)**

ஒன்றிய அரசின் ஜவுளித்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படும் அபிவிருத்தி ஆணையம் (கைவினைப்பொருட்கள்) சென்னையை அடுத்துள்ள மாமல்லபுரத்தில் கைவினை சுற்றுலா கிராமம் என்ற ஒரு திட்டத்தை ரூ.5.61 கோடி செலவில் தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் (பூம்புகார்) மூலம் அப்பகுதியிலுள்ள கைவினைஞர்கள் நலனுக்காகவும்,

சுற்றுலா மேம்பாட்டிற்காகவும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**இத்திட்டத்தின் நோக்கம்**

மாமல்லபுரம் மற்றும் அதனை சுற்றியுள்ள கிராமங்களில் உள்ள தொன்மையான மற்றும் நலிந்த கைவினைஞர்களின் குடியிருப்புகளை சீர்செய்து, மேம்படுத்தி தேவைக்கேற்ப அழகுபடுத்தி அவர்கள் வசிக்கும் இடங்களை, சுற்றுலா பயணிகளை கவரும் வகையிலும், அவர்களிடம் நேரடியாக தொடர்பு கொள்ள வழிவகுத்திட இத்திட்டம் உருவாக்கப்பட உள்ளது. மேலும், மாமல்லபுரத்தை சுற்றியுள்ள கற்சிற்ப உற்பத்தி நிலையங்களை புதுப்பித்து / மேம்படுத்தி அங்கு வேலைபுரியும் கைவினைஞர்களுக்கு தேவையான வசதிகளை செய்து கொடுத்து, அங்கு வருகை புரியும் சுற்றுலா பயணிகளிடம், கற்சிற்ப உற்பத்தி நிலைய உற்பத்தியாளர்கள் வணிகம் செய்திட இத்திட்டம் வழிவகை செய்யும். மேலும் சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் 40 அடி உயரத்தில் ஸ்தூபி ஒன்று மாமல்லபுரத்தில் அமைக்கப்பட்டு வருகிறது.

இதன் முதற்கட்டமாக ரூ.1.80 கோடி செலவில் மாமல்லபுரம் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் கீழ் கண்ட பணிகள் நடைபெற்று வருகிறது.

- காரணை கிராமத்தில் உள்ள கைவினைஞர்களின் குடியிருப்புகள் அழகுபடுத்துதல், வர்ணம் பூசுதல் மற்றும் மேம்படுத்துதல்

- ஐந்துரத வீதியில் உள்ள கைவினைஞர்களின் உற்பத்தி நிலையங்கள் புதுப்பித்தல் மற்றும் மேம்படுத்துதல்.

- மாமல்லபுரத்தின் நுழைவு வாயிலில் கைவினை சுற்றுலா கிராமத்திற்கான பிரமாண்டமான ஸ்தூபி அமைக்கப்பட்டு வருகிறது.

- கைவினை சுற்றுலா கிராமத்திற்கான விளம்பர பதாகைகள் மற்றும் வழிகாட்டுதல்களை பல்வேறு இடங்களில் அமைத்தல்.

- காரணை கைவினை சுற்றுலா கிராமத்திற்கான முகப்பினை அழகுபடுத்துதல்.

**19. உலக கற்சிற்ப நகரம்**

பூம்புகார் நிறுவனத்தின் முயற்சியால், மாமல்லபுரத்தை "உலக கற்சிற்ப நகரம்" என்று உலக கைத்திற குழுமம் (World Crafts Council) அங்கீகரித்துள்ளது. இது மாமல்லபுர கற்சிற்ப கலைக்கு அளிக்கப்பட்ட மிகப் பெரிய அங்கீகாரம் ஆகும்.

## 20. கைவினைப் பொருட்களுக்கு புவிசார் குறியீடு

இந்நிறுவனத்தின் முயற்சியால், புவிசார் குறியீடு பதிவகம், பின்வரும் கைவினைப் பொருட்களுக்கு புவிசார் குறியீடு வழங்கியுள்ளது.

(1) நாச்சியார்கோயில் பித்தளை விளக்குகள்

(2) பத்தமடை பாய்கள்

(3) தோடா சித்திரத் தையல்

(4) மாமல்லபுரம் கற்சிற்பங்கள்

(5) அரும்பாவூர் மரச்சிற்பங்கள்

(6) தஞ்சாவூர் நெட்டி வேலை

(7) சுவாமிமலை பஞ்சலோகச் சிலைகள்

(8) வடசேரி கோயில் நகைகள்

(9) தஞ்சாவூர் கலைத்தட்டுகள்

தனியார் மூலமாக கீழ்க்கண்ட கைவினைப் பொருட்களுக்கு புவிசார் குறியீடு பெறப்பட்.டுள்ளது

(1) தஞ்சாவூர் ஓவியங்கள்

(2) தஞ்சாவூர் பொம்மைகள்

## 21. தொலைநோக்கு பார்வை

கடந்த ஆண்டுகளில் பூம்புகார் மூலம் கைவினைஞர்களுக்கு நன்மை பயக்கும் வகையில் எடுக்கப்பட்ட புதிய முயற்சிகள் மற்றும் புதுமைத் திட்டங்கள் மிகுந்த பயனளித்துள்ளது. இதன் மூலமாக கைவினைஞர்களின் வாழ்வாதாரம் மற்றும் இந்நிறுவனத்தின் விற்பனை மற்றும் செயல்பாடுகள் மேம்பாடு அடைகிறது.

## தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்

"கதர் உற்பத்தியின் நோக்கம், ஆலை உற்பத்தியாளர்களுடன் போட்டி போட்டுக் கொண்டு சில கைவினைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்து நவ நாகரீகமான கதராடைகளை தயாரித்து நகர்ப்புற மக்களுக்கு விநியோகிப்பது போன்றதல்ல. விவசாயத்திற்கு ஒரு துணை தொழிலாக இருக்க வேண்டும் என்பதே இதன் முக்கிய நோக்கம். ஆனால் இது இன்னும் நிறைவேறாமலேயே உள்ளது. இதை நாம் நிறைவேற்ற வேண்டுமானால் இந்த தொழிலானது சுயசார்பானதாக செயல்பட வேண்டும் என்பதை நாம் உறுதி செய்திட வேண்டும். மேலும், அதன் வெற்றியை கிராமங்களிலும் உணரப்பட வேண்டும். கிராம மக்கள் எவ்வாறு தங்களது தேவைக்கு ரொட்டி அல்லது அரிசியை சமைத்துக் கொள்கிறார்களோ அதே போல தங்களது உபயோகத்திற்கு ஆடைகளை உற்பத்தி செய்ய வேண்டும். தேவைக்கு அதிகமாக உற்பத்தி செய்யப்பட்டால் அதனை விற்பனை செய்யலாம்."

**–மகாத்மா காந்தியடிகள்**

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் கிராம வளர்ச்சிப் பணியில் ஈடுபட்டுள்ள மற்ற நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் கிராமப்பகுதிகளில் கதர் மற்றும் கிராமத்தொழில்களை அமைத்தல், ஊக்குவித்தல் மற்றும் மேம்படுத்துதல் ஆகியவற்றை முக்கிய குறிக்கோளாகக் கொண்டு 1960–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் நிறுவப்பட்டது. கைவினைஞர்கள் மற்றும் கிராமப்புற ஏழை மக்களின் பொருளாதார நிலையினை மேம்படுத்திடும் வகையில் தேவைக்கேற்ற இலாபகரமான சுயதொழில் வாய்ப்புகளை உருவாக்குவதே இதன் முக்கிய நோக்கமாகும்.

**1. நோக்கங்கள்**

வாரியத்தின் முக்கிய நோக்கங்களாவன:

- கிராமப்புற ஏழை மக்கள் மற்றும் கைவினைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்குதல்.
- சுற்றுச்சூழலுக்கு உகந்த விற்பனையாகக்கூடிய பொருட்களை உற்பத்தி செய்தல்.
- கிராமப்புற ஏழை மக்களிடையே சமூக உணர்வினை மேம்படுத்தி தற்சார்பு நம்பிக்கையினை வளர்த்தல்.
- கிராமப்புற கைவினைஞர்களை ஒருங்கிணைத்து அவர்களின் உற்பத்தி மற்றும் இலாபத் திறனை மேம்படுத்துதல்.

- கதர் மற்றும் கிராமத் தொழில்களை ஊக்குவித்தல் மற்றும் மேம்படுத்துதல்.

**2. நிருவாகம்**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள், தமிழ்நாடு கதர் கிராமத்தொழில் வாரியத்திற்கு தலைவராகவும், அரசினால் நியமனம் செய்யப்படும் அலுவலர்கள் வாரியத்தின் உறுப்பினர்களாகவும் உள்ளனர். திட்டங்களை செயல்படுத்துவதற்கான முக்கிய கொள்கை முடிவுகள் வாரியத்தின் பொறுப்பில் மேற்கொள்ளப்படுகிறது. மேலும், வாரியத்தின் அன்றாட நடவடிக்கைகள் வாரிய உறுப்பினராக உள்ள தலைமைச் செயல் அலுவலரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் செயல்பாடுகள் கதர் மற்றும் கிராமத் தொழில்கள் ஆகிய இரண்டு முக்கிய பிரிவுகளை உள்ளடக்கியதாகும்.

**3. நிலையான வளர்ச்சி இலக்குகள்**

நிலையான வளர்ச்சி இலக்கு என்பது ஐக்கிய நாடுகளின் உறுப்பினர்களாக உள்ள அனைத்து நாடுகளும், நாட்டின் சிறந்த எதிர்காலத்திற்காக செயல்பட ஒப்புக்கொண்ட 17 வழிகாட்டி இலக்குகளின் தொகுப்பாகும்.

**இலக்கு 8 – மதிக்கத்தக்க வேலை மற்றும் வேலை வாய்ப்பை உருவாக்குதல்**

**8.5. ஆண்கள், பெண்கள் அனைவருக்கும் உற்பத்தித் திறனுடன் கூடிய வேலைவாய்ப்பை உருவாக்குதல்.**

தமிழ்நாடு கதர் கிராமத்தொழில் வாரியச்சட்டம் 1959–இல் இயற்றப்பட்டதின் முக்கிய நோக்கமானது, கிராமப்புற ஏழை கைவினைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்குதல், சுற்றுசூழலுக்கு உகந்த விற்பனையாகக்கூடிய பொருட்களை உற்பத்தி செய்தல், கிராமப்புற ஏழை மக்களிடையே சமூக உணர்வினை மேம்படுத்தி சுயசார்பினை வளர்த்தல், கிராமப்புற கைவினைஞர்களை ஒருங்கிணைத்து அவர்களின் உற்பத்தி திறன் மற்றும் இலாபத்தினை மேம்படுத்துதல் ஆகும். வாரியமானது, நிலையான வளர்ச்சி இலக்கினை (Sustainable Development Goal No.8) அடையும் பொருட்டு, கிராமப்புற பெண்களுக்கு உகந்த வேலை வாய்ப்பினை வழங்கி வருகிறது.

**4. கதர்**

கதர், இந்திய சுதந்திர இயக்கத்தோடு நெருங்கிய தொடர்பு உள்ளதால், இந்தியர்களிடையே தேசபக்தி, அமைதி மற்றும் எளிமை உணர்வை அளிக்கிறது. கதர், இந்திய கலாச்சாரம் மற்றும் வாழ்வின் வழிமுறைகளை

நிலைநிறுத்துவதோடு, இந்திய கிராமங்களில் பொருளாதார வளர்ச்சிக்கு ஒரு முன்மாதிரியாக விளங்குகிறது. கதர் துணியானது பருத்தி மற்றும் பட்டு நூலிருந்து கையினால் இயக்கப்படும் இராட்டைகள் மூலம் நூற்கப்படும் நூலினால் நெய்யப்படுகிறது. கதர் துணிகள் இயற்கையானது, உறுதியானது மற்றும் இந்திய தட்பவெட்ப நிலைக்கு ஏற்றவாறு உடலுக்கு குளிர்ச்சியையும் அளிக்கிறது.

**4.1 கதர் பருத்தி மற்றும் பாலிவஸ்திரா'**

கதர் வாரியத்தால் பாரம்பரியமாக செய்யப்பட்டு வரும் பணிகளில் ஒன்று கதர் உற்பத்தி ஆகும். இப்பிரிவில் செய்யப்படும் கதர் உற்பத்திப்பணிகள் அனைத்தும் கையினால் செய்யப்படுவதால், கிராமப்புறத்தில் உள்ள கைவினைஞர்களுக்கு மிகப்பெரிய அளவில் வேலைவாய்ப்பு கிடைக்க வழிவகை ஏற்படுகிறது. நூல் நூற்கும் பணி மற்றும் நெசவு தொழில் ஆகியவைகள் பெரும்பாலும் பெண்களைக் கொண்டே நடைபெற்று வருகிறது. இத்தொழில், நூற்பு, நெசவு, சலவை மற்றும் சாயமேற்றுதல் போன்றவற்றை உள்ளடக்கியதாகும். கதர்பருத்தித் துணி 100 விழுக்காடு பருத்தி இழைகளினால் உற்பத்தி செய்யப்படுகிறது. சந்தையில் பாலியஸ்டர் வந்தபின்பு பாலியஸ்டர் நூலில் பாலியஸ்டர் இழை மற்றும் பருத்தி இழை முறையே 67:33 என்ற விகிதத்தில் இணைக்கப்படுகிறது. தற்போது கதர் வாரியத்தில் கீழ் குறிப்பிட்ட கதர் அலகுகள் செயல்பட்டு வருகின்றன:–

| வ. எண். | அலகுகள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | கிராமிய நூற்பு நிலையம் | 31 |
| 2. | கதர் உபகிளை | 23 |
| 3. | கதர் பட்டு உபகிளை | 8 |

மேலும், கதர் மற்றும் கிராமத்தொழில்கள் ஆணைக்குழுவினால் சான்றளிக்கப்பட்ட 66 சர்வோதய சங்கங்களும் கதர் உற்பத்தியினை செய்து வருகின்றன. கதர் உற்பத்தி அலகுகள் குறிப்பாக, கிராமப்புற பெண்களையும் உள்ளடக்கிய கைவினைஞர்களுக்கு வாழ்க்கைத் தேவையை நிறைவு செய்ய போதிய வருவாயை ஈட்டி தருகிறது. கதர் பருத்தி, பாலிவஸ்திரா இரகங்களான வேட்டிகள், சட்டைத் துணிகள், துண்டுகள், போர்வைகள், படுக்கை விரிப்புகள், சீருடை துணிகள் மற்றும் இதர பெரும்பான்மையான கதர் ரகங்கள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.

நடப்பாண்டில் கதர் உற்பத்தி அலகுகளில் 1,116 நூற்பாளர்கள் மற்றும் 224 நெசவாளர்கள் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றார்கள். இவ்வலகுகளின் மூலம் உற்பத்தி செய்யப்படும் கதர் இரகங்கள் 48 கதர் அங்காடிகளில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

2018–2019 முதல் 2020–2021 வரையிலான கதராணைக்குழு மற்றும் சான்றளிக்கப்பட்ட நிறுவனங்களிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்ட பட்டைப் பஞ்சு, துணி உற்பத்தி மதிப்பு, நூற்பாளர்களின்

எண்ணிக்கை, வழங்கப்பட்ட நூற்பு கூலி மற்றும் நெசவாளர்களின் எண்ணிக்கை, வழங்கப்பட்ட நெசவு கூலி ஆகிய விபரங்கள் பின்வருமாறு:–

| வருடம் | 2018–2019 | 2019–2020 | 2020–2021 | 2021–2022 (ஜூலை 2021 வரை) |
|---|---|---|---|---|
| கொள்முதல் செய்யப்பட்ட பட்டை பஞ்சு (கிலோ) | 1,29,493 | 54,727 | 3,780 | 10,088 |
| மதிப்பு (ரூ.இலட்சத்தில்) | 237.70 | 101.24 | 7.77 | 20.83 |
| துணி உற்பத்தி மதிப்பு (ரூ.இலட்சத்தில்) | 923.33 | 477.13 | 377.59 | 152.69 |
| நூற்பாளர்களின் எண்ணிக்கை | 2,304 | 1,367 | 1,116 | 1025 |
| நூற்பு கூலி (ரூ.இலட்சத்தில்) | 247.25 | 105.12 | 83.18 | 6.33 |
| நெசவாளர்களின் எண்ணிக்கை | 407 | 311 | 224 | 194 |
| நெசவு கூலி (ரூ.இலட்சத்தில்) | 172.16 | 62.23 | 44.82 | 9.95 |

கடந்த மூன்று ஆண்டுகளில் கதர் வாரிய அலகுகளில் நடைபெற்ற உற்பத்தி மற்றும் விற்பனை விபரங்கள்:–

| வ. எண். | வருடம் | உற்பத்தி | விற்பனை |
|---|---|---|---|
| | | (ரூ.இலட்சத்தில்) | |
| 1 | 2018-2019 | 923.33 | 1,044.55 |
| 2 | 2019-2020 | 477.13 | 980.88 |
| 3 | 2020-2021 | 377.59 | 1297.29 |
| 4 | 2021-2022 (ஜூலை 2021 வரை) | 116.70 | 170.23 |

### 4.2 கதர் பட்டு

வாரியமானது பழம்பெருமை கொண்ட பட்டுத் தொழிலில் ஈடுபட்டு, கதர் பட்டு உற்பத்தியை செய்து வருகிறது. தமிழ்நாடு கதர் கிராமத்தொழில் வாரியத்தின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள 8 கதர் பட்டு உபகிளைகள் மூலம் கதர் பட்டு துணிகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. வாரியத்தினால் உற்பத்தி செய்யப்படும் பட்டுப் புடவைகளுக்கு மத்திய பட்டு வாரியத்தால் தரம் வாய்ந்த பட்டு என்பதற்கான அடையாளமாக வழங்கப்படும் "சில்க் மார்க்" முத்திரை பெறப்படுவதால் இப்பட்டுப் புடவைகள் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளன.

கதர் பட்டு உற்பத்தி அலகுகளின் செயல்பாடுகளால் சுமார் 277 பட்டு நெசவாளர்களுக்கு ஆண்டு முழுவதும் வேலை வாய்ப்பு வாரியத்தால் அளிக்கப்படுகிறது. இவ்வலகுகள் மூலம் உற்பத்தி செய்யப்படும் பட்டு ரகங்கள் 48 கதர் அங்காடிகள் மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. கடந்த மூன்று ஆண்டுகளில்

மேற்கொள்ளப்பட்ட கதர் பட்டு உற்பத்தி மற்றும் விற்பனை விபரம்:–

| வ. எண் | வருடம் | உற்பத்தி | விற்பனை |
|---|---|---|---|
| | | (ரூ.இலட்சத்தில்) | |
| 1 | 2018–2019 | 601.13 | 409.93 |
| 2 | 2019–2020 | 1,021.22 | 523.22 |
| 3 | 2020–2021 | 311.17 | 539.94 |
| 4 | 2021–2022 (ஜூலை 2021 வரை) | 35.99 | 29.81 |

## 4.3. கதர் நூற்போர் மற்றும் நெசவாளர் நலத்திட்டங்கள்

### 4.3.1 கதர் நூற்போர் மற்றும் நெசவாளர் நல வாரியம்

நூற்போர் மற்றும் நெசவாளர்களுக்காக நல வாரியம் அமைக்கப்பட்டு கதர் வாரியம் மற்றும் சர்வோதய சங்கங்களில் பணிபுரியும் நூற்பாளர்கள் மற்றும் நெசவாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதற்கென இவ்வாரியத்திற்கு அரசு மானியமாக 2010–2011 மற்றும் 2011–2012–ஆம் ஆண்டுகளுக்கு தலா ரூபாய் 50 இலட்சம் மானியமாக வழங்கியுள்ளது. இந்நலவாரியத்தில் தற்பொழுது 8,678 நபர்கள் உறுப்பினர்களாக உள்ளனர்.

இந்நலவாரியத்தால் வழங்கப்படும் பல்வேறு உதவிகள் பின்வருமாறு:–

| வ. எண். | | உதவிகளின் விவரம் | தொகை (ரூபாயில்) |
|---|---|---|---|
| 1 | | விபத்து ஈட்டுறுதி திட்டத்தின் கீழ் | |
| | a | விபத்தினால் மரணம் ஏற்பட்டால் | 1,00,000/– |
| | b | விபத்தினால் ஊனம் ஏற்பட்டால் ஊனத்தின் தன்மைக்கேற்ப | 10,000/– முதல் 1,00,000/– வரை |
| 2 | | இயற்கை மரணத்திற்கான உதவித் தொகை | 15,000/– |
| 3 | | ஈமச்சடங்கு செலவு | 2,000/– |
| 4 | | கல்வி உதவித் தொகை | |
| | a | 10–ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைகளுக்கு | 1,000/– |
| | b | 10–ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு | 1,000/– |
| | c | 11–ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைகளுக்கு | 1,000/– |
| | d | 12–ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைகளுக்கு | 1,500/– |
| | e | 12–ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு | 1,500/– |
| | f | முறையான பட்டப்படிப்பிற்கு | 1,500/– |
| | | விடுதி வசதியுடன் முறையான பட்டப்படிப்பிற்கு | 1,750/– |
| | g | முறையான பட்ட மேற்படிப்பிற்கு | 2,000/– |
| | | விடுதி வசதியுடன் முறையான பட்ட மேற்படிப்பிற்கு | 3,000/– |
| | h | தொழில் கல்வி பட்டப்படிப்பிற்கு | 2,000/– |
| | | விடுதி வசதியுடன் தொழில் கல்வி பட்டப்படிப்பிற்கு | 4,000/– |
| | i | தொழில் கல்வி பட்ட மேற்படிப்பிற்கு | 4,000/– |
| | | விடுதி வசதியுடன் தொழில் கல்வி பட்டமேற்படிப்பிற்கு | 6,000/– |
| | j | ஐ.டி.ஐ. தொழிற்பயிற்சி படிப்பிற்கு | 1,000/– |
| | | விடுதி வசதியுடன் ஐ.டி.ஐ. தொழிற்பயிற்சி படிப்பிற்கு | 1,200/– |
| 5 | | திருமண உதவித் தொகை | 2,000/– |

| வ. எண். | | உதவிகளின் விவரம் | தொகை (ரூபாயில்) |
|---|---|---|---|
| 6 | | மகப்பேறு உதவித் தொகை | |
| | a | மாதம் ஒன்றுக்கு ரூ.1,000/- வீதம் (மகப்பேறுக்கு முன் 3 மாதங்கள் மகப்பேறுக்குப் பின் 3 மாதங்கள்) | 6,000/- |
| | b | கருக்கலைப்பு/கருச்சிதைவு | 3,000/- |
| 7 | | மூக்குக்கண்ணாடி செலவுத் தொகையை ஈடுசெய்தல் | 500/- வரை |
| 8 | | முதியோர் ஓய்வூதியம் (மாதந்தோறும்) | 1,000/- |

இதன் மூலம் 1,294 பயனாளிகளுக்கு ரூ.67.97 இலட்சம் மதிப்பிலான நலதிட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

### 4.3.2 கொரோனா நிவாரணநிதி

கோவிட்-19 பெருந்தொற்றால் கதர் நூற்பாளர்கள் மற்றும் நெசவாளர்களுக்கு ஏற்பட்ட சிரமங்களை கருத்தில் கொண்டு இரண்டு கட்டங்களாக தலா ரூ.1,000/- வீதம், கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியத்தில் உள்ள 1617 நூற்பாளர்கள் மற்றும் நெசவாளர்களுக்கும், சர்வோதய சங்கங்களில் உள்ள 7061 நூற்பாளர்கள் மற்றும் நெசவாளர்களுக்கு அரசால் நிவாரணநிதி உதவி வழங்கப்பட்டது. மேலும், மூன்றாம் கட்ட நிவாரணநிதியாக தொகை தலா ரூ.1000/- வீதம் சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள 74 நூற்பாளர்கள் மற்றும் நெசவாளர்களுக்கும் ஆக மொத்தம் ரூ.174.30 இலட்சம் அரசால் நிதி உதவி வழங்கப்பட்டது.

### 4.3.3 நூற்போர் மற்றும் நெசவாளர்களுக்கான நல நிதி

நூற்போர் மற்றும் நெசவாளர்களுக்கான நல நிதி 1990–ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. நூற்போர் மற்றும் நெசவாளர்கள் அவர்களது கூலியிலிருந்து 12 விழுக்காடு தொகையை இந்த நலநிதிக்கு வழங்குவதுடன் வாரியமும் அதற்கு சமமான பங்குத் தொகையை நல நிதியாக வழங்குகிறது. இவ்வகையில் தோற்றுவிக்கப்பட்ட நல நிதி நூற்போர் மற்றும் நெசவாளர்களின் நலன்களுக்காகவும் திருமணம், கல்வி, மருத்துவச் செலவு மற்றும் பண்டிகைக் காலங்கள் போன்றவற்றிற்கு இந்நிதியிலிருந்து அவர்களது கணக்கில் உள்ள தொகைக்கு ஏற்ப நிதி உதவி வழங்கப்படுகிறது. மேலும், அவர்கள் ஓய்வு பெறும்பொழுது அவர்களது கணக்கில் உள்ள முழுத்தொகையும் வழங்கப்படுகிறது. மேலும், நூற்போர் மற்றும் நெசவாளர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட கூலியுடன் 10 விழுக்காடு ஊக்கத் தொகையை வாரியம் வழங்கி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 2020–2021–ஆம் ஆண்டில் 439 கைவினைஞர்களுக்கு ரூ.33.49 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

## 5. வணிக அபிவிருத்தி நிதியுதவி திட்டம் (MDA)

### 5.1 திருத்திய வணிக அபிவிருத்தி நிதியுதவி திட்டம்

கதர் கிராமத் தொழில் ஆணையம், கதர் உற்பத்தி மற்றும் விற்பனையினை ஊக்குவிக்கும் வகையில்

**"வணிக அபிவிருத்தி நிதியுதவி திட்டத்தினை"** (MDA) 2010–2011–ல் அறிமுகப்படுத்தியது.

வணிக அபிவிருத்தி நிதியுதவித் திட்டம் என்பதை, திருத்திய வணிக அபிவிருத்தி நிதியுதவித் திட்டம் (MMDA) என 2016–2017–ம் ஆண்டு முதல், மாற்றம் செய்து கதர் உற்பத்தியின் முதன்மை செலவின மதிப்பில் 30 விழுக்காடு நிதியுதவியை கீழ்க்கண்டவாறு கணக்கிடப்பட்டு காலாண்டு வாரியாக பிரித்து வழங்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | நூற்போர் / நெசவாளர்களுக்கான ஊக்கத் தொகை | 30% |
| 2. | கைவினைஞர்களுக்கான ஊக்கத் தொகை | 10% |
| 3. | உற்பத்திக்கான உட்கட்டுமான பணி மற்றும் திறன் மேம்பாட்டு பயிற்சிக்காக (உற்பத்தி நிறுவனங்களுக்காக) | 20% |
| 4. | விற்பனை உட்கட்டமைப்பு கணினி மயமாக்கல் உள்பட (உற்பத்தி நிறுவனங்களுக்காக) | 20% |
| 5. | வணிகம் மற்றும் விற்பனை மேம்படுத்துதல் (விற்பனை நிறுவனங்களுக்காக) | 20% |

தமிழ்நாடு கதர் கிராமத்தொழில் வாரியம் மற்றும் 66 சர்வோதய சங்கங்கள் ஆகியவற்றில் உற்பத்திப் பணிகளில் ஈடுபடும் நூற்பாளர் மற்றும் நெசவாளர்களுக்கு 30 விழுக்காடு ஊக்கத் தொகையும், கைவினைஞர்களுக்கு 10 விழுக்காடு ஊக்கத்தொகையும் கதராணையம் மூலமாக ஒவ்வொரு காலாண்டிற்கும் தனியரின் வங்கி கணக்கிற்கு

மின்னணுத் தீர்வை மூலம் அனுப்பப்பட்டு வருகிறது. வழங்கப்பட்ட விவரம் கதராணையத்தின் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படுகிறது. எஞ்சியுள்ள 60 விழுக்காடு (வரிசை எண் 3,4 மற்றும் 5 ஒவ்வொன்றுக்கும் 20 விழுக்காடு) சர்வோதய சங்கம் மற்றும் கதர் கிராமத்தொழில் வாரிய கணக்கில் கதராணையத்தால் உற்பத்தி உட்கட்டமைப்பு, திறன் மேம்பாடு மற்றும் விற்பனை உட்கட்டமைப்பு மற்றும் வணிக மேம்பாடு போன்றவைகளுக்காக வரவு வைக்கப்பட்டு வருகிறது. அவ்வகையில் கதர் கிராமத் தொழில் வாரியத்தால் பெறப்பட்ட வணிக அபிவிருத்தி நிதியுதவியின் விபரம்:–

| **வ. எண்.** | **வருடம்** | **கதராணையத்திலிருந்து பெறப்பட்ட தொகை (ரூ.இலட்சத்தில்)** |
|---|---|---|
| 1. | 2018–2019 | 210.43 |
| 2. | 2019–2020 | 230.30 |
| 3. | 2020–2021 | 77.91 |

இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கான வழிமுறைகள் கதர் கிராமத்தொழில் ஆணைக்குழுவால் அளிக்கப்படுகிறது..

தமிழக அரசும் வணிக அபிவிருத்தி நிதியுதவியாக கதர் உற்பத்தி செலவின மதிப்பின் மீது 20 விழுக்காடு அனைத்து சர்வோதய சங்கங்களுக்கும் மற்றும் தமிழ்நாடு

கதர் கிராமத் தொழில் வாரியத்திற்கும் வழங்கி வருகிறது. 2017–18–ஆம் ஆண்டிலிருந்து மாநில அரசு, சர்வோதய சங்கங்களுக்கு வழங்கப்படும் நிதியுதவியின் உச்சவரம்பினை ரூபாய் 15 கோடியிலிருந்து ரூபாய் 30 கோடியாகவும், கதர் வாரியத்திற்கு வழங்கப்படும் நிதியுதவியின் உச்சவரம்பினை ரூபாய் 2 கோடியிலிருந்து ரூபாய் 4 கோடியாகவும் உயர்த்தியுள்ளது.

**5.2 கதர் பொருட்களுக்கான சின்னம் இடும் பணி**

காதி பொருட்களை பொதுமக்களிடம் எளிதில் பிரபலப்படுத்திட கடந்தாண்டில் கைத்தறி ஆதரவு திட்டத்தின் கீழ் கதர் மற்றும் கிராமப் பொருட்களின் தயாரிப்புகளை விளம்பரப்படுத்தி சந்தைப்படுத்திடும் பணியை மேற்கொள்ள ரூ.40 இலட்சம் செலவில் அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

**5.3 இணைய வழி வணிகம் (On line shopping)**

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தால் உற்பத்தி செய்யப்படும் கதர் மற்றும் கிராமப் பொருட்கள் தமிழகத்தில் இயங்கி வரும் வாரியத்தின் கதர் அங்காடிகள் (Khadi Kraft) மூலமாக மட்டுமே விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

மின் வணிகத்தில் நிகழ்ந்துவரும் புதியதொழிற் நுட்ப கண்டுபிடிப்புகளை தனியார் வணிக நிறுவனங்களும் பயன்படுத்தி வருவதனைக் கருத்தில் கொண்டும் மற்றும் பணியாளர்கள் பற்றாக்குறையினைக் கருத்தில் கொண்டும், தற்பொழுது தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தால்

கதர் கிராமப் பொருட்கள் மற்றும் பனைப் பொருட்கள் ஆகியவற்றை விற்பனை செய்ய இணைய வழி வணிகம் (On–line Shopping) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கான பிரத்யேக இணையதள முகவரி www.tnkvib.org மற்றும் www.tnkhadi.org ஆகும்.

### 5.4 தனியுரிமைக் கிளைகள் (Franchise)

"காதி கிராப்ட்" என்கின்ற வணிக அடையாளம், தமிழ்நாடு முழுவதும் பிரபலப்படுத்தவும், கதர் கிராம தயாரிப்புகளை பெருமளவில் மக்களுக்கு எடுத்துச் செல்லவும், விற்பனையை அதிகரிக்க தனியுரிமை உரிமம் (Franchise) வழங்கப்பட்டுள்ளது. இந்த தனியுரிமைக் கிளைகள் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. தனியுரிமை கிளைகள் செயல்பட்டு வரும் இடங்கள் பின்வருமாறு.

1. திருப்பெரும்புதூர்
2. கொல்லிமலை
3. சுசீந்திரம்
4. காஞ்சிபுரம்

## 6. கிராமத் தொழில்கள்

கிராமங்களில் வசிக்கும் கைவினைஞர்களின் மனித ஆற்றலைப் பயன்படுத்தி அவர்களின் பாரம்பரிய திறமைகளை வெளிக்கொணர்ந்து, கிராமப்புறங்களில் கிடைக்கும் மூலப்பெருட்களைக் கொண்டு இலாபகரமான வேலை வாய்ப்பினை உருவாக்கி அவர்தம்

வாழ்வாதாரத்தினை உயர்த்துவதே கிராமத் தொழில்களின் முக்கிய நோக்கமாகும். ஊரகப் பகுதியில் வாழும் கைவினைஞர்களின் சுயசார்பு நம்பிக்கையினை மேம்படுத்தி அவர்தம் சமூக பொருளாதார நிலையை மேம்படுத்துவதுடன் மனதிடத்தினை வளர்க்கவும் கிராமத் தொழில்கள் உதவுகின்றன.

வாரியத்தின் கீழ் 35 கிராமத் தொழில் உற்பத்தி அலகுகள் இயங்கி வருகின்றன.

## 6.1 சோப்பு அலகுகள்

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கீழ் 7 குளியல் சோப்பு அலகுகள், 2 பார் சோப்பு அலகுகள், 2 டிடர்ஜெண்ட் சோப்பு அலகுகள், என மொத்தம் 11 சோப்பு அலகுகள் செயல்பட்டு வருகின்றன. கதர் கிராமத் தொழில் வாரியத்தின் வருவாயை பெருக்குவதில் சோப்புத் தொழில் பெரும் பங்கு வகிக்கிறது.

இந்த சோப்பு அலகுகளில் குமரி, மூலிகா, நித்தம், வேம்பு, சந்தனம், கார்பாலிக் மற்றும் பொய்கை போன்ற குளியல் சோப்பு வகைகள் 7 அலகுகளில் உற்பத்தி செய்யப்படுகின்றன. குமரி சோப்பு, மக்கள் மத்தியில் மிகவும் பிரசித்தி பெற்றதாக விளங்குவதுடன், சந்தையில் பெரும் வரவேற்பையும் பெற்றுள்ளது.

"கோபுரம்" என்னும் வணிகக் குறியீட்டுடன் கிளீனிங் பவுடர், டிடர்ஜெண்ட் சோப்பு, டிடர்ஜெண்ட் சலவைத் தூள்

மற்றும் பார் சோப்பு போன்றவைகள் 4 சோப்பு அலகுகளில் உற்பத்தி செய்யப்படுகிறது.

மக்களிடம் பிரசித்திபெற்ற காதி வகை சோப்புகள் பொது விநியோக கடைகள் மூலம் மொத்தமாக விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. வாரிய சோப்புகள் தரமாகவும், விலை மலிவாக உள்ளதால் மக்களால் பெரிதும் விரும்பி வாங்கப்படுகிறது. தற்போது வாரிய சோப்பு வகைகளை இணையவழி மூலம் விற்பனை செய்வதுடன் மாநிலத்திலுள்ள பல்பொருள் அங்காடிகள் (Departmental Stores) மூலமாகவும் விற்பனை செய்திட நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

சிவகங்கை மாவட்டம் கண்டனூர் கதர் வளாகத்தில் ஷாம்பு, குளியல் திரவம் மற்றும் கைக்கழுவும் திரவம் உற்பத்தி செய்திடும் அலகு செயல்பட்டு வருகிறது.

2020–2021 ஆம் நிதி ஆண்டில் உற்பத்தி மற்றும் விற்பனை முறையே ரூ.995.53 இலட்சம் மற்றும் ரூ 999.12 இலட்சம் மதிப்பிற்கு எய்தப்பட்டுள்ளது.

2021–2022 ஆம் நிதி ஆண்டில் ஜூலை'2021 வரை உற்பத்தி மற்றும் விற்பனை முறையே ரூ.425.87 இலட்சம் மற்றும் ரூ 358.70 இலட்சம் மதிப்பிற்கு எய்தப்பட்டுள்ளது.

### 6.2 தச்சு மற்றும் கருமாரத் தொழில்

தொன்மை வாய்ந்த கிராமத் தொழில்களில் தச்சு மற்றும் கருமாரத் தொழில் கிராமப்புற

கைவினைஞர்களுக்கு சிறந்த வேலை வாய்ப்பினை அளிக்கிறது.

ஐந்து தச்சு மற்றும் கருமார அலகுகள் கீழ்கண்ட இடங்களில் இயங்கி வருகின்றன.

| | |
|---|---|
| 1. | திருவள்ளூர் மாவட்டத்தில் வீரராகவபுரம், |
| 2. | இராணிப்பேட்டை மாவட்டத்தில் அரக்கோணம், |
| 3. | வேலூர் மாவட்டத்தில் பள்ளிகொண்டா, |
| 4. | மதுரை மாவட்டத்தில் நாகமலை – புதுக்கோட்டை, |
| 5 | திருநெல்வேலி மாவட்டத்தில் பேட்டை. |

மேற்காணும் அலகுகளில், மரம் மற்றும் இரும்பிலான தளவாடங்கள் அரசுத் துறைகள், நீதிமன்றங்கள், பல்கலைக் கழகங்கள், இந்து சமய அறநிலையத் துறை, பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் மாவட்ட நூலகங்களுக்கு தேவையின் அடிப்படையில் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன. மட்பாண்ட தொழிலாளர்கள் உடலுழைப்பை குறைத்து உற்பத்தியினை அதிகரித்திட மாறுபட்ட வேகத்துடன் கூடிய 'சீலாவீல்' மின்சக்கரம் , அரக்கோணம் மற்றும் பள்ளி கொண்டா தச்சு கருமார அலகுகளில் உற்பத்தி செய்யப்பட்டு, அரசால் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

2020–2021 ஆம் ஆண்டில் ரூ.772.92 இலட்சம் மதிப்பிலான தச்சு மற்றும் கருமாரத் தொழில் தளவாடங்கள் உற்பத்தி செய்யப்பட்டு ரூ.633.89 இலட்சம் மதிப்பிலான பொருட்கள் பல்வேறு துறைகளுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன.

2021–2022 ஆம் நிதி ஆண்டில் ஜூலை'2021 வரை ரூ.291.10 இலட்சம் மதிப்பிலான தச்சு மற்றும் கருமாரத் தொழில் தளவாடங்கள் உற்பத்தி செய்யப்பட்டு ரூ.285.36 இலட்சம் மதிப்பிலான பொருட்கள் பல்வேறு துறைகளுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன.

### 6.3 காலணி அலகுகள்

வாரியத்தின் மிகவும் பழமை வாய்ந்த தொழில்களுள் காலணி உற்பத்தித் தொழிலும் ஒன்றாகும். தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கட்டுப்பாட்டின் கீழ், 10 காலணி உற்பத்தி அலகுகள் செயல்பட்டு வருகின்றன. அரசுத் துறைகளுக்கு, கோப்புகளை எடுத்து செல்லும் கோப்பு பெட்டிகள், மருத்துவமனைகளுக்கு தேவைப்படும் காயர் மெத்தைகள், போக்குவரத்துக் கழக தொழிலாளர்களுக்கான காலணிகள், நடத்துனர் பணப்பைகள், கையுறைகள் மற்றும் உள்ளாட்சி ஊழியர்களுக்கான காலணிகள் ஆகியவை காலணி உற்பத்தி அலகுகள் மூலம் சிறந்த முறையில் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.

2020–2021 ஆம் ஆண்டில் வாரியம் ரூ.72.69 இலட்சத்திற்கு தோல் பொருட்களை உற்பத்தி செய்து ரூ.57.21 இலட்சத்திற்கு விற்பனை செய்துள்ளது.

2021–2022 ஆம் நிதி ஆண்டில் ஜூலை'2021 வரை வாரியம் ரூ.11.66 இலட்சத்திற்கு தோல் பொருட்களை உற்பத்தி செய்து ரூ.7.92 இலட்சத்திற்கு விற்பனை செய்துள்ளது.

### 6.4 தேனீ வளர்ப்பு

தேனீ வளர்ப்புத் தொழில் கிராமத் தொழில்களில் முக்கிய பங்கு வகிக்கிறது. தேனீ வளர்ப்புத் தொழிலில் சுமார் 10,000 தேனீ விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். தேனீ விவசாயிகளிடமிருந்து பச்சைத் தேன் இடைத்தரகர் இன்றி கிலோ ரூ.140/– என்ற விலையில் வாரியத்தால் கொள்முதல் செய்யப்பட்டு, அதற்கான தொகை அவர்களின் வங்கி கணக்கில் நேரடியாக செலுத்தப்படுகிறது. கொள்முதல் செய்யப்பட்ட பச்சைத் தேன் மார்த்தாண்டத்தில் உள்ள அம்சி தேன் பதப்படுத்தும் நிலையத்தில் பதப்படுத்தப்பட்டு தரம் பரிசோதிக்கப்பட்டு, **"அக்மார்க்"** தரச் சான்று பெற்று கதர் அங்காடிகளுக்கு விற்பனை செய்யும் பொருட்டு அனுப்பப்படுகின்றன.

2020–2021 ஆம் ஆண்டில் ரூ.93.88 இலட்சம் மதிப்புள்ள பச்சைத் தேன் பதப்படுத்தப்பட்டு ரூ.143.93 இலட்சம் தொகைக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

2021–2022 ஆம் நிதி ஆண்டில் ஜூலை'2021 வரை ரூ.29.95 இலட்சம் மதிப்புள்ள பச்சைத் தேன் பதப்படுத்தப்பட்டு ரூ.42.31 இலட்சம் தொகைக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

**6.5 கைமுறை காகித அலகுகள்**

விழுப்புரம் மாவட்டத்தில் பிடாகம், கடலூர் மாவட்டத்தில் வடலூர், கோயம்புத்தூர் மாவட்டத்தில் கோவனூர், ஈரோடு மாவட்டத்தில் செண்பகபுதூர் மற்றும் நீலகிரி மாவட்டத்தில் ஊட்டி ஆகிய 5 கைமுறை காகித அலகுகள் வாரியத்தின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வருகிறது. இவ்வலகுகளில் கச்சா அட்டைகள், கோப்பு அட்டைகள், பாண்டு தாள்கள், அலுவலக உறைகள், மேலுறைகள், எக்ஸ்ரே உறைகள், அட்டைப் பெட்டிகள் மற்றும் எழுது தாட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. கச்சா அட்டைகள் மத்திய சிறைச்சாலைக்கும், எக்ஸ்ரே உறைகள் அரசு மருத்துவமனைகளுக்கும், அலுவலக உறைகள், கோப்பு அட்டைகள் மற்றும் மெல்லிய உறைகள் அரசு துறைகளுக்கும், பாண்ட் தாள்கள் நீதிமன்றங்களுக்கும் தேவையின் அடிப்படையில் விற்பனை செய்யப்பபடுகின்றன.

2020–2021 ஆம் ஆண்டில் உற்பத்தி ரூ.36.07 இலட்சமும் விற்பனை ரூ.34.32 இலட்சமும் எய்தப்பட்டுள்ளது.

2021–2022 ஆம் நிதி ஆண்டில் ஜூலை'2021 வரை உற்பத்தி ரூ.8.58 இலட்சமும் விற்பனை ரூ.7.02 இலட்சமும் எய்தப்பட்டுள்ளது.

### 6.6 மண்பாண்டத் தொழில்

மண்பாண்டத் தொழில் தமிழகத்தின் பண்டைகாலத் தொழில்களில் ஒன்றாகும். இத்தொழில், கிராமப்புறங்களில் வசிக்கும் மண்பாண்டத் தொழிலாளர்களின் வாழ்வாதாரம், பொருளாதார நிலையை உயர்த்துவதற்கு உதவுகிறது. சுமார் 3,500 உறுப்பினர்களை கொண்டு 34 மண்பாண்ட கூட்டுறவு சங்கங்கள் வாரியத்தின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்குகின்றன. மழைக்காலங்களில் இத்தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் இன்னல்களை போக்கிட 2017–2018–ஆம் ஆண்டு முதல் தேர்வு செய்யப்பட்ட மண்பாண்ட தொழிலாளர் குடும்பத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.5,000/– மழைக்கால பராமரிப்புத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் 2020–2021–ஆம் ஆண்டில் காதி வாரிய கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தொழிலாளர்கள் நலவாரியத்தில் பதிவு செய்த 11,957 மண்பாண்டத் தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.

ஏற்கனவே, மின்சாரத்தால் மாறுபட்ட வேகத்தில் இயங்கும் 4,000 'சீலா வீல்' மின்சக்கரங்கள் 4,000 மண்பாண்ட குடும்பங்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது.

நடப்பாண்டில் மேலும், 2,000 'சீலாவீல்' மின் சக்கரங்கள் உற்பத்தி செய்து பயனாளிகளுக்கு வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 6.7 இதர கிராமத் தொழில் அலகுகள்

### 6.7.1 வேடப்பட்டி ஜவ்வாது அலகு

ஜவ்வாது உற்பத்தி அலகு ஒன்று திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள வேடப்பட்டியில் செயல்பட்டு வருகிறது. இவ்வலகில் ஜவ்வாது பவுடர், அகர்பத்தி, சாம்பிராணி, சந்தன மாலைகள், மூலிகை பற்பொடி, மெழுகுவர்த்திகள், கற்பூரம், பன்னீர் மற்றும் இதர பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. உற்பத்தி செய்யப்படும் மூலிகை பற்பொடிகள் தமிழகத்தில் உள்ள மத்திய சிறைச்சாலைகளுக்கு விற்பனை செய்யப்படுகிறது.

### 6.7.2 நீலகிரி தைல அலகு

நீலகிரி மாவட்டம் உதகையில் தைலம் பதப்படுத்தும் அலகு ஒன்று செயல்பட்டு வருகிறது. இவ்வலகில், கூட்டுறவு சங்கத்தின் மூலம் பச்சைத் தைலம் கொள்முதல் செய்யப்பட்டு அதனை பதப்படுத்தி நீலகிரி தைலம் தயாரித்து விற்பனை செய்யப்படுகிறது. நீலகிரி தைலம், மென்தால், கற்பூரம் மற்றும் இதர மூலப்பொருட்களை கொண்டு "சுகப்பிரியா" என்ற பெயரில் வலி நிவாரண தைலம் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது.

2020–2021–ஆம் ஆண்டில் ரூ.68.60 இலட்சம் மதிப்பிற்கு மேற்காணும் பொருட்கள் இவ்வலகுகளில் உற்பத்தி செய்து விற்பனை செய்யப்பட்டுள்ளன. 2021–2022–ஆம் ஆண்டு ஜூலை'2021 வரை ரூ.10.42 இலட்சம் மதிப்பிற்கு இதர பொருட்கள் இவ்வலகுகளில் உற்பத்தி செய்து ரூ.92.92 இலட்சம் மதிப்பிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன.

**7. விற்பனை நிலையங்கள்**

வாரியத்தின் பல்வேறு அலகுகளில் உற்பத்தி செய்யப்படும் கதர் மற்றும் கிராமப் பொருட்களை அதிக அளவில் சந்தைப்படுத்திட ஏதுவாக "காதி கிராப்ட்" எனும் விற்பனை அங்காடிகள் சென்னை குறளக கட்டடம் மற்றும் பிற மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றன. வாரிய அலகுகளில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களைத் தவிர, சுய உதவிக்குழுக்கள் மற்றும் பாரம்பரிய கைவினைஞர்கள் உற்பத்தி செய்யும் கைவினைப்பொருட்களும் 48 காதிகிராப்ட் விற்பனை நிலையங்கள் மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

கண்காட்சிகள் மற்றும் அரசு அலுவலக வளாகங்களில் சிறப்பு விற்பனை நிலையங்கள் அமைத்து, கதர் மற்றும் கிராமப் பொருட்களின் விற்பனையை பிரபலப்படுத்துவதற்கு சிறப்புக்கவனம் அளிக்கப்படுகிறது. நவராத்திரி பண்டிகை காலத்தில் சென்னை குறளக

கதரங்காடியில் நடைபெறும் வருடாந்திர நவராத்திரி கொலு பொம்மை விற்பனை மற்றும் கண்காட்சி சிறப்பு பெற்றதாகும். மண்பாண்ட தொழிலாளர்களால் உற்பத்தி செய்யப்படும் பாரம்பரிய மற்றும் நிகழ்கால கலைநயமிக்க காகித கூழ் மற்றும் மண் பொம்மைகளைச் சந்தைப்படுத்தி விற்பனை செய்வதற்கு இக்கண்காட்சி உகந்த தளமாகத் திகழ்கிறது.

கடந்த மூன்று ஆண்டுகளில் கிராமப் பொருட்கள் உற்பத்தி மற்றும் விற்பனை விபரங்கள்:-

| வ. எண் | வருடம் | உற்பத்தி | விற்பனை |
|---|---|---|---|
| | | (ரூ.இலட்சத்தில்) | |
| 1 | 2018-2019 | 2,445.92 | 2,481.26 |
| 2 | 2019-2020 | 1,706.39 | 1,810.11 |
| 3 | 2020-2021 | 2728.45 | 3864.94 |
| 4 | 2021-2022 (ஜூலை'2021 வரை) | 930.27 | 994.28 |

## 8. தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்

தமிழ்நாடு கதர் கிராமத்தொழில் வாரியத்தின் கீழ் கதராணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்களை மேற்கொள்ளும் 164 தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இக்கூட்டுறவுச் சங்கங்களுக்கு தமிழ்நாடு கதர் கிராமத்தொழில் வாரியத்தின் தலைமை செயல் அலுவலர் அவர்கள் செயற் பதிவாளராக செயல்பட்டு வருகிறார். மேற்படி, கூட்டுறவுச் சங்கங்களின்

கணக்கு மற்றும் பிற செலவின விவரங்கள் கூட்டுறவு தணிக்கைத் துறையினரால் தணிக்கை செய்யப்பட்டு வருகிறது. இக்கூட்டுறவுச் சங்கங்கள் 2020–2021–ஆம் ஆண்டில் ரூ.2,195.37 இலட்சத்திற்கு உற்பத்தி செய்தும் ரூ.2,435.23 இலட்சத்திற்கு விற்பனையும் செய்துள்ளது. 2021–2022–ஆம் ஆண்டில் ஜூலை'2021 வரை ரூ.670.12 இலட்சத்திற்கு உற்பத்தி செய்தும் ரூ.698.30 இலட்சத்திற்கு விற்பனையும் செய்துள்ளது.

### 9. பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம்

ஒன்றிய அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் துறை அமைச்சகம் "பிரதம மந்திரியின் வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம்" 2008–2009 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம், தமிழ்நாடு தொழில்கள் மற்றும் வணிகத் துறை மற்றும் மும்பை கதர் கிராமத்தொழில் ஆணைக்குழு ஆகியவற்றின் மூலம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டமானது 01.07.2016 முதல் வெற்றிகரமாக இணைய வழி வாயிலாக நடைமுறைப்படுத்தி செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2019–2020–ஆம் ஆண்டிலிருந்து மத்திய கயிறு வாரியமும் இத்திட்டத்தினை செயல்படுத்தி வருகிறது.

**திட்ட விளக்கம்**

இத்திட்டத்தின்கீழ் உற்பத்தியில் ஈடுபடும் பயனாளிகளுக்கு திட்ட மதிப்பீட்டின்படி அதிகபட்சமாக ரூபாய் 25 இலட்சமும், சேவைப் பிரிவில் ஈடுபடும் பயனாளிகளுக்கு அதிகபட்சமாக ரூபாய் 10 இலட்சமும் வங்கிகளால் கடன் அனுமதிக்கப்படுகிறது. உற்பத்திப் பிரிவின்கீழ் ரூபாய் 10 இலட்சத்திற்கு மேல் பெறும் வங்கி கடன்களுக்கும், சேவைப் பிரிவின்கீழ் ரூபாய் 5 இலட்சத்திற்கு மேல் பெறும் வங்கி கடன்களுக்கும், பயனாளிகளின் கல்வித் தகுதியாக குறைந்தபட்சம் 8 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

**மானியம்**

| **பயனாளிகள் வரும் பிரிவு** | **மானியம் வரம்பு ( திட்ட மதிப்பீட்டில்)** | |
|---|---|---|
| **இடம்** | **நகர்ப்புறம்** | **கிராமப்புறம்** |
| பொதுப் பிரிவு | 15% | 25% |
| சிறப்புப் பிரிவினர் (பட்டியல் இனத்தோர் / பழங்குடியினர் / இதர பிற்படுத்தப்பட்டோர் / சிறுபான்மையினர் / முன்னாள் இராணுவத்தினர் / மாற்றுத்திறனாளிகள் / வடகிழக்கு மலை மற்றும் எல்லைப்புற பகுதியினர்) | 25% | 35% |

## சொந்த முதலீடு

| பயனாளிகள் பிரிவு | சொந்த முதலீடு |
| --- | --- |
| பொதுப் பிரிவு | 10% |
| சிறப்புப் பிரிவினர் (பட்டியல் இனத்தோர் / பழங்குடியினர் / இதர பிற்படுத்தப்பட்டோர் / சிறுபான்மையினர் / முன்னாள் இராணுவத்தினர் / மாற்றுத்திறனாளிகள் / வடகிழக்கு மலை மற்றும் எல்லைப்புற பகுதியினர்) | 5% |

ஏற்கனவே மானியம் பெற்று திறம்பட செயல்பட்டுக் கொண்டிருக்கும் அலகுகளுக்கு மீண்டும் ஒருமுறை கடன்தொகை கொடுத்து உதவிட, இரண்டாம் முறை கடன் என்ற திட்டத்தை இந்திய அரசாங்கம் 2018-2019 ஆண்டு முதல் அறிமுகப்படுத்தியுள்ளது. இதற்கென தனிப்பட்டமுறையில் PMEGP e-portal தனியாக உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில், உற்பத்தி சார்ந்த தொழில்களுக்கு ரூபாய் 1 கோடி வரையிலும், சேவை சார்ந்த தொழில்களுக்கு ரூபாய் 25 இலட்சம் வரையிலும் கடன்தொகை அனுமதிக்கப்படுகிறது.

மேலும், அனைத்துப் பிரிவினருக்கும், திட்ட மதிப்பீட்டில் பயனாளியின் சொந்த முதலீடு 10 விழுக்காடு ஆகவும் வங்கிக்கடன் 90 விழுக்காடு ஆகவும் நிர்ணயிக்கப்படுகிறது. மொத்த திட்ட மதிப்பீட்டில், மானிய

விளிம்புத் தொகையாக 15 விழுக்காடு வழங்கப்பட்டு வருகிறது.

2016–2017 ஆம் ஆண்டு முதல் 2021–2022 (ஜூலை வரை) ஆம் ஆண்டு வரை தமிழ்நாடு கதர் கிராமத்தொழில் வாரியம் மூலம் விடுவிக்கப்பட்ட மானிய விளிம்புத் தொகை மானிய விபரங்கள் பின்வருமாறு:–

| ஆண்டு | (திட்டம் எண்ணிக்கையில்/ரூபாய் இலட்சத்தில்) | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | குறியீடு | | | சாதனை | | |
| | செயல் இலக்கு | நிதி இலக்கு | உருவாக்கப்பட வேண்டிய வேலை வாய்ப்புகள் (நபர்கள்) | செயல் இலக்கு | நிதி இலக்கு | உருவாக்கப் பட்ட வேலை வாய்ப்புகள் (நபர்கள்) |
| 2016–17 | 1,261 | 2,521.50 | 10,088 | 745 | 2,166.48 | 8,384 |
| 2017–18 | 1,810 | 3,570.00 | 14,480 | 882 | 1,680.74 | 6,723 |
| 2018–19 | 822 | 2,400.94 | 6,576 | 1,078 | 2,236.49 | 6,106 |
| 2019–20 | 627 | 1,882.38 | 5,016 | 976 | 1,773.45 | 5,320 |
| 2020–21 | 783 | 2,360.62 | 6,296 | 792 | 1,829.75 | 5,489 |
| 2021–2022 (ஜூலை 2021 வரை) | 1058 | 3,068.87 | 8468 | 202 | 493.63 | 1974 |

## 10. கதர் மற்றும் கிராமத் தொழில் பொருட்களின் உற்பத்தி மற்றும் விற்பனை

2020–2021 மற்றும் 2021–2022 (ஜூலை'2021 வரை)–ஆம் ஆண்டில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தால் ஒட்டு மொத்தமாக எய்தப்பட்ட உற்பத்தி மற்றும் விற்பனை விவரங்கள் பின்வருமாறு:–

| வ. எண் | தொழில்களின் பெயர் | 2020–2021 (ரூ. இலட்சத்தில்) | | 2021–2022 (ஜூலை'2021 வரை) (ரூ. இலட்சத்தில்) | |
|---|---|---|---|---|---|
| | | உற்பத்தி | விற்பனை | உற்பத்தி | விற்பனை |
| 1. | கதர் | 688.76 | 1837.23 | 152.69 | 200.05 |
| 2. | கிராமத் தொழில்கள் | | | | |
| அ. | சோப்பு | 995.53 | 999.12 | 425.87 | 358.70 |
| ஆ. | தச்சு மற்றும் கருமாரத் தொழில் | 772.92 | 633.89 | 291.10 | 285.36 |
| இ. | தோல் | 72.69 | 57.21 | 11.66 | 7.92 |
| ஈ. | கைமுறைக் காகிதம் | 36.07 | 34.32 | 8.58 | 7.02 |
| உ. | தேனீ வளர்ப்பு | 93.88 | 143.93 | 29.95 | 42.31 |
| ஊ. | இதர தொழில்கள் | 68.60 | 159.24 | 10.42 | 92.92 |
| | **கூடுதல்** | **2728.45** | **3864.94** | **930.27** | **994.28** |

## 11. அரசிடமிருந்து பெறப்படும் நிதியுதவி

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரிய பணியாளர்களுக்கு தேவைப்படும் ஊதியம் மற்றும் ஓய்வூதியம் வழங்கிட "நிகர ஈட்டு மானியமும்", கதர் பொருட்களுக்கு வணிக அபிவிருத்தி நிதியுதவியினையும் மாநில அரசு ஒப்பளித்து வருகிறது. 2021–2022–ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் மற்றும் தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியத்திற்கு அரசு ஒப்புதல் வழங்கிய நிதியுதவி விவரம்:–

| வ. எண் | விபரம் | | தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | நிகர ஈட்டு மானியம் | | 9,399.63 |
| 2. | தள்ளுபடி | கதர் வாரியம் | 400.00 |
| | | சான்றளிக்கப்பட்ட நிறுவனங்கள் | 3,000.00 |
| 3. | தணிக்கைக் கட்டணம் | | 513.64 |
| 4. | கிராமத் தொழில் மேம்பாட்டிற்கு உதவி | | 0.01 |
| 5 | தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியம் | | 0.01 |
| 6. | மண்பாண்ட தொழிலாளர்களுக்கு பராமரிப்பு உதவித்தொகை | | 597.85 |
| 7. | கதர் நூல் நூற்போர் மற்றும் நெசவாளர் நலவாரிய | | 0.01 |
| 8. | மண்பாண்ட தொழிலாளர்களுக்கு 'சீலா' மின் சக்கரங்கள் வழங்குதல் | | 408.00 |
| | **மொத்தம்** | | **14,319.15** |

# தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியம்

## 1. நோக்கங்கள்

தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியம் சென்னையை தலைமை இடமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. பனைத் தொழிலாளர்களை ஒருங்கிணைத்து கூட்டுறவு அமைப்புகள் மூலம் பனைத் தொழிலை நிலைபெறச் செய்து மேம்படுத்துதல், பனைத் தொழிலில் ஈடுபட்டுள்ள பனைத் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் வகையில் பனை பொருட்களின் உற்பத்தியை அதிகரித்திட நிறுவன ரீதியான உதவிகளை வழங்குதல், பனைத் தயாரிப்புக்கான வாழ்வாதாரத்திற்கான கூட்டுறவு தளத்தை அமைப்பது போன்றவை பனை பொருள் வளர்ச்சி வாரியத்தின் முக்கிய நோக்கங்கள் ஆகும்.

## 2. பனை வெல்ல கூட்டுறவு சங்கங்கள் மற்றும் கூட்டுறவு சம்மேளனங்கள்

தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியத்தின் கட்டுப்பாட்டின்கீழ் 720 ஆரம்ப பனை வெல்லம் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள், எட்டு மாவட்ட பனை வெல்லம் விற்பனை கூட்டுறவு சம்மேளனங்கள் மற்றும் ஒரு மாநில பனை வெல்லம் மற்றும் தும்பு விற்பனை கூட்டுறவு இணையம் ஆகியவை செயல்பட்டு

வருகின்றன. இவைகள் அனைத்தும் பனைப் பொருட்களை உற்பத்தி செய்வது மற்றும் விற்பனை செய்வது போன்ற பணிகளில் நேரடியாக ஈடுபட்டு வருகின்றன.

### 3. பனை பொருட்கள்

பனை பொருட்களில் முதன்மையானது பதநீர் ஆகும். பனை வெல்லம் (கருப்பட்டி), பனங்கற்கண்டு, பனஞ்சர்க்கரை, பனங்கற்கண்டு மிட்டாய், கருப்பட்டி அல்வா, கருப்பட்டி சாக்லேட் போன்ற பல்வேறு பனை உணவுப் பொருட்கள் பதநீரை மூலப் பொருளாகக் கொண்டு உற்பத்தி செய்யப்படுகின்றன. பருவ காலத்தில் பனை மரங்கள் அதிகம் உள்ள பகுதிகளில் உள்ள பனை மரங்களிலிருந்து இறக்கப்படும் பதநீர் மக்கள் விரும்பி அருந்தக்கூடிய ஒரு பிரபலமான இயற்கையான பானமாகும்.

பனையிலிருந்து உண்ணாப் பொருட்களான பனந்தும்பு தூரிகைகள், பனை ஓலை விசிறிகள், பாய்கள், பனை ஓலையினாலான பல்வேறு கூடைகள், பனை நார் பொருட்கள் மற்றும் பல்வேறு வகையான இயற்கையான வண்ணம் பூசப்பட்ட மற்றும் வண்ணம் பூசப்படாத கைவினைப் பொருட்கள் போன்றவை பனைத் தொழில் கைவினைஞர்களால் தயாரிக்கப்படுகின்றன.

## 4. பதநீர் இறக்குவதற்கான உரிமம்

பதநீர் தவறாக பயன்படுத்தப்படுவதைத் தடுக்கும் நோக்கில் முறையான உரிமத்தின் மூலம் மட்டுமே பதநீர் இறக்கவும் மற்றும் அதை விற்பனை செய்யவும் வேண்டுமென்று அரசு ஆணையிட்டுள்ளது. அவ்வாணையின்படி ஒவ்வொரு நிதியாண்டிலும் பதநீர் இறக்குவதற்கான உரிமத்தினை தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியத்தினால் புதுப்பித்து வழங்கிட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

2020–2021–ஆம் நிதி ஆண்டில் கதர் கிராமத் தொழில்களின் உதவி இயக்குநர்கள் மூலமாக அந்தந்த மாவட்டங்களைச் சேர்ந்த 9972 பனைத் தொழில் கைவினைஞர்களுக்கு பதநீர் இறக்கவும் அதனை விற்பனை செய்யவும் உரிமம் வழங்கப்பட்டுள்ளது.

## 5. நிருவாகம்

வரவு செலவு திட்ட ஒதுக்கீடு என தனியே தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியத்திற்கென ஏதுமில்லை. தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியத்தின் பணியாளர்கள் அனைவரும் தலைமைச் செயல் அலுவலர் (அலுவலால்) உட்பட தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் பணியமைப்பிலிருந்து அனுமதிக்கப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர். தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் தலைமைச் செயல் அலுவலரே தமிழ்நாடு

பனை பொருள் வளர்ச்சி வாரியத்தின் கட்டுப்பாட்டில் உள்ள ஆரம்ப பனை வெல்லம் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள், மாவட்ட மற்றும் மாநில பனை வெல்லம் விற்பனை கூட்டுறவு சம்மேளனங்கள் ஆகியவற்றிற்கு செயற்பதிவாளர் ஆவார்.

## 6. உட்கட்டமைப்பினை உருவாக்குவதற்கான உதவிகள்

தமிழ்நாடு மாநில பனை வெல்லம் மற்றும் தும்பு விற்பனை கூட்டுறவு இணையத்தின் உற்பத்தி திறனை அதிகரித்திட, கடலூர் மாவட்டத்தில் உள்ள மண்டல பனை பொருள் பயிற்சி நிலைய வளாகத்தில் பனை வெல்லம் உற்பத்தி அலகு ரூ.3.60 இலட்சம் செலவில் புனரமைக்கப்பட்டுள்ளது.

பனைத் தொழிலாளர்களுக்கு தொடர்ந்து வேலைவாய்ப்பு அளித்திடும் நோக்கத்தில் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள 100 பனைத் தொழில் கைவினைஞர்களுக்கு ரூபாய் 6 இலட்சம் மதிப்பீட்டில் பனை ஓலைப் பொருட்கள் தயாரிக்கும் பயிற்சி திருநெல்வேலி மாவட்ட பனை பொருள் விற்பனை கூட்டுறவு சம்மேளனத்தின் மூலம் அளிக்கப்பட்டுள்ளது.

## 7. பனை பொருட்கள் மற்றும் சுக்கு காபி விற்பனை

இயற்கை பானங்கள் மற்றும் ஆரோக்கியம் தொடர்பாக பொது மக்களிடம் நல்லதொரு விழிப்புணர்வு ஏற்பட்டுள்ள

நிலையில், ஒன்பது வகையான மூலிகைப் பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்படும் பனைவெல்லம் கலந்த சுக்கு காபி சென்னையில் பல்வேறு பிரதான இடங்களான சென்னை பெருநகர மெரினா கடற்கரை, குறளகம் மெட்ரோ இரயில் நிலையம் அருகில், கோயம்பேடு புறநகர் பேருந்து முனையம், தீவுத்திடல் போன்ற பல்வேறு இடங்களில் விற்பனை துவங்கப்பட்டு நடைப்பெற்று வருகிறது. மேலும், சேலம், ஏற்காடு, சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை, திருநெல்வேலியில் உள்ள பாளையம்கோட்டை, ஊட்டி, இராமநாதபுரத்தில் உள்ள ஏ.பி.ஜே.அப்துல்கலாம் நினைவிடம் மற்றும் திருவண்ணாமலை பௌர்ணமி கிரிவலப் பாதையில் சுக்கு காபி, கதர் கிராமத் தொழில் பொருட்கள் மற்றும் பனை பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

பல்வேறு வகையான பனை பொருட்களின் விற்பனையை அதிகரித்திட பிரத்யேகமான ஒரு பனை பொருள் விற்பனை நிலையம் சென்னை குறளகம் தரை தளத்தில் செயல்பட்டு வருகிறது.

**8. பனை பொருட்களின் உற்பத்தி மற்றும் விற்பனை**

கடந்த ஐந்து ஆண்டுகளில் பனை பொருட்களின் உற்பத்தி மற்றும் விற்பனை விவரங்கள் பின்வருமாறு:–

**(ரூ. இலட்சத்தில்)**


| ஆண்டு | உற்பத்தி | விற்பனை |
|---|---|---|
| 2016–2017 | 1344.97 | 1484.30 |
| 2017–2018 | 1463.12 | 1629.23 |
| 2018–2019 | 1516.95 | 1658.96 |
| 2019–2020 | 1748.78 | 1892.73 |
| 2020–2021 | 1511.03 | 1623.49 |
| 2021–2022 | 432.83 | 488.45 |

**ஆர். காந்தி**
**கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்**

# பட்டுவளர்ச்சித் துறை




**பட்டுப்புழுவின் வாழ்க்கைச் சுழற்சி**




**பட்டுவளர்ச்சி செயல்வழி வரைபடம்**



**மல்பெரித் தோட்டம்**



**பட்டுப்புழு வளர்ப்பு மனை**



பட்டுப்புழுக்கள்



வெண்பட்டுக்கூடுகள்



பலமுனை பட்டு நூற்பு அலகு, உடுமலைப்பேட்டை



தானியங்கி பட்டு நூற்பு அலகு, அவினாசி



தமிழ்நாடு பட்டுவளர்ச்சி பயிற்சி நிலையம், ஓசூர்



பட்டு சுற்றுலா - "பட்டு உலகம்" ஏற்காடு, சேலம்

**தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள்**

**வளர்ச்சிக் கழகம்**



**பூம்புகார் விற்பனை நிலையம், சென்னை**



**9 அடி பித்தளை கிளை விளக்கு**



**நகர்ப்புற கண்காட்சித் திடல், கன்னியாகுமரி**



**பொது பயன்பாட்டு மையம் - தஞ்சாவூர் கலைத்தட்டு**

# தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்



**கிராமிய நூற்பு நிலையம் – பூளவாடி, திருப்பூர் மாவட்டம்.**



**கதர் பட்டு உபகிளை கபிஸ்தலம் – கும்பகோணம்.**




**காலணி அலகு, அம்பத்தூர்.**




**ஷாம்பு மற்றும் கைக்கழுவும் திரவம் தயாரிக்கும் அலகு கண்டனூர், சிவகங்கை மாவட்டம்.**




**மதுரை மேலமாசி வீதி, கதர் அங்காடி**



**தேன் பதப்படுத்தும் நிலையம், அம்சி, கன்னியாகுமரி மாவட்டம்.**

## தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியம்




**பனை பொருட்கள்**